



அமைதி - வளர்ச்சி - வளமை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்


புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள்



அருள்மிகு வேதநாயகி அம்மன் சன்னதி
முன் மண்டபத்தில் உள்ள சிரிக்கும் சிலை

அருள்மிகு தேநாயகிஅம்மன்சன்னதி
முன் மண்டபத்தின் விதானத்தில் உள்ள
அழகிய சிற்பங்கள்






அருள்மிகு வேதநாயகி அம்மன் சன்னதி
முன் மண்டபத்தில் உள்ள அழகிய சிற்பங்கள்



அருள்மிகு வேதநாயகி அம்மன் சன்னதி
முன் மண்டபத்தில் உள்ள
அழகிய வேலைபாடு உள்ள கற்தூண்கள்


திருக்கோயில்கள் வழிகாட்டி



ஈரோடு மாவட்ட
திருக்கோயில்கள் வழிகாட்டி

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு

முதற் பதிப்பு	:	ஜுலை 2014
முன் அட்டை	:	அ/மி. **சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்,** சென்னிமலை
பின் அட்டை	:	பவானி கூடுதுறை
அச்சிடுவோர்	:	அம்பாள் பிரிண்டர்ஸ் நாமக்கல்.
விலை	:	ரூ.100.00
உரிமை	:	இந்து சமய அறநிலையத்துறை தமிழ்நாடு அரசு




அருள்மிகு சங்கமேசுவரர்
பவானி




அருள்மிகு கொங்கலம்மன்
ஈரோடு

பொருளடக்கம்

ஈரோடு மாவட்டம்



அருள்மிகு பிரம்மா
கொடுமுடி



அருள்மிகு வேலாயுதசுவாமி
திண்டல்மலை

பூ. செந்தூர்பாண்டியன்
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்

தலைமைச்செயலகம்
சென்னை - 600009.

நாள்: 23.5.2014

வாழ்த்துச் செய்தி

ஒலியின் ஓசையாய், ஓங்காரத் திருவடியாய் எல்லோரும் போற்றும் வெற்றித்திருமகளாய், தமிழர்களின் குலவிளக்காய் மாண்புமிகு. இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியோடு இந்த வாழ்த்துச் செய்தியை வழங்குகிறேன்.

இலட்சிய வேட்கையுடன், உலகமே வியந்து போற்றும் உன்னத திட்டங்களால், தொலைநோக்குப் பார்வையால் தமிழகத்தை முதன்மை மாநிலமாக எல்லாத்துறைகளிலும் வழிநடத்தும் அம்மா அவர்களின் மணிமகுடச் செயல்களில் ஒன்றாக இத்திருக்கோயில்கள் வழிகாட்டி புத்தகம் அமைகிறது.

பிறவி எடுத்ததின் பலனை ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டும் என்றால் ஆன்மாவைப் பற்றி அறிய ஒரே வழி திருக்கோயில்களுக்கு சென்று வழிபடுவதே. மனித மனம் உயரவும், சமூக வாழ்க்கை சிறக்கவும் அனைவருக்கும் வழிகாட்டியாகத் திகழ்வது திருக்கோயில்களே.

தமிழகத்தின் பெருமையே திருக்கோயில்களை சார்ந்துதான் அமைகிறது. தமிழகத்திலும் ஈரோடு மாவட்ட திருக்கோயில் வழிகாட்டி புத்தகம் பக்தர்களுக்கும், பக்திச் சுற்றுலாப் பயணிகளுக்கும் கருத்து பெட்டகமாகவும், கருவூலமாகவும் திகழும் என்பதில் ஐயம் இல்லை.

இவ்வழிகாட்டி புத்தகம் எல்லா வகையிலும் மின்னி மிளிர்கிறது. இதனை நேர்த்தியோடு உருவாக்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் வாங்கிப் பயன்பெறும் உள்ளங்களுக்கும் என் அன்பையும், நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களையும் நெகிழ்வோடு பதிவு செய்கிறேன்.


அன்புடன்

P.

(பூ.செந்தூர்பாண்டியன்)



அருள்மிகு சுப்ரமணிய சுவாமி
சென்னிமலை



அருள்மிகு கனகவல்லி தாயார்
ஈரோடு

முனைவர் ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை
தலைமைச்செயலகம்,
சென்னை - 600009.
தொலைபேசி 044 - 25670820

வாழ்த்துரை

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களைப் பற்றிய வரலாறுகளை மாவட்ட வரிசையாக எழுதி வெளியிடுவது காலத்தின் தேவையாகவுள்ளது. இதை ஆன்மீக அன்பர்கள் பெரிதும் எதிர்நோக்கியுள்ளனர். தமிழக நாகரிகம் திருக்கோயில் நாகரிகமே.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"
திருக்கோயிலில்லாத திருவிலூர்"
...... "ஊரல்ல அடவி காடே"

என்னும் கருத்தாழம் தமிழக மக்களிடையே அழுந்தி உள்ளது. வாழ்க்கைச் சூழல் மற்றும் கால வளர்ச்சியில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளத் துணியும்போது ஏற்படும் மனச்சலனங்கள் ஆன்மீகத் தேடல்களை அதிகரித்துள்ளன. பாடல் பெற்ற தலங்கள், பரிகாரத் தலங்கள், மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்கள், இராசித் தலங்கள் என மக்கள் தங்களின் தேவைகளுக்கேற்ற திருத்தலங்களை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஒரு கோவிலைப் பார்க்கும்போது அதில் உள்ள கல் சிற்பங்கள் மரச்சிற்பங்கள் மற்றும் பண்டை ஓவியங்கள் அக்கோயிலின் தல வரலாற்றை எடுத்துரைக்க அங்கே எவரும் இலர். பல கோயில்களில் இராம ாயணம், மகாபாரதம், திருவிளையாடல் புராணம் போன்ற காப்பியங்களில் புராண வரலாற்றுக் காலத்தில், இறைவன் நடத்திய திருவிளையாடல்கள், காட்சிப்படுத்துவதன் மூலம் எடுத்துரைக்கப்படுகின்றன.

உதாரணமாகத் திருப்புடைமருதூர் இராஜகோபுர ஓவியங்கள் திருக்குற்றாலச் சித்ரசபை ஓவியங்கள் போன்றவை. ஆதலால், அதிகாரபூர்வமாக வெளியிடப்படும் இவ்வழிகாட்டி நூல் செல்லும் கோயில்களைப்பற்றி அறிவதற்கு இன்றியமையாததாக இருக்கிறது.

மேலும் வெளிநாட்டு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக இந்து மதத்தின் மீதும் இந்தியாவின் பண்டைய கலாச்சரத்தை அறியவும் தங்கள் பயணத்திட்டங்களை வகுக்கவும் இவ்வழிகாட்டி நூல் நல்ல உறுதுணையாக அமையும். மாவட்டந்தோறும் இவ்வழிகாட்டி நூல்கள் இந்து சமய அறநிலையத்துறையினரால் வெளியிடப்பட்டமைக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். எல்லா மாவட்டங்களையும் அடக்கிய மாநில அளவிலான ஒரு வழிகாட்டி நூலையும், மாவட்ட நூல்களைச் சுருக்கி வெளியிட வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு வாழ்த்துகிறேன்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது அவ்வைப் பிராட்டியாரின் நல்லுரையாகும். அறம் காத்த பண்டைத்தமிழ் மன்னர்கள் அறச் சின்னங்களாக ஆலயங்களை எழுப்பி, தத்தம் இயல்பிற்கேற்றவாறு பொன்னும் பொருளும் வழங்கி அவைகளைப் பண்புக் களஞ்சியங்களாக உருவாக்கி வைத்துள்ளனர். அண்டை நாட்டார் வந்து வியந்து போற்றும் கவின்கலைச் சிற்பங்களையும், ஓவியக்கலைகளையும் ஒவ்வொருவரும் கண்டு பேருவகை கொள்ள வேண்டிய ஒன்றாகும். திருக்கோவிலின் தொன்மை கருதி மாவட்டந்தோறும் உள்ள திருக்கோயில்களுக்குச் சென்று கண்ணாரக் கண்டு, நெஞ்சுருக நின்று, நினைத்ததை வழிபட ஏதுவாக மாவட்டக் கையேடு தலவரலாற்றோடு வெளியிடுவது பக்தர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இக்கையேடு வெளியிடுவதற்குத் தலவரலாறு முதல் அப்பகுதி திருக்கோயில்களின் தனிச்சிறப்புகள் வரை கொடுத்துதவி, மாவட்டந்தோறும் இந்நூல் வெளியிட உறுதுணை புரிந்த அத்துணை அன்பர்களுக்கும் வாழ்த்துக்கள்.

ரா கண்ணன்

(முனைவர் ரா.கண்ணன்)

ஈரோடு மாவட்டத்தில் அன்னதானம் நடைபெறும் திருக்கோயில் விவரப்பட்டியல்

ஈரோடு வட்டம்

அருள்மிகு

1.பெரியமாரியம்மன் திருக்கோயில், ஈரோடு.
2.மகுடேஸ்வரர் - வீரநாராயணப்பெருமாள் திருக்கோயில், கொடுமுடி, ஈரோடு வட்டம்.
3.வரதராஜப்பெருமாள் திருக்கோயில், வெங்கம்பூர், ஈரோடு வட்டம்.
4.வேலாயுதசாமி திருக்கோயில், திண்டல், ஈரோடு வட்டம்.
5.ஆருத்ராகபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு நகர் மற்றும் வட்டம்.
6.மகாவீர ஆஞ்சநேயசாமி திருக்கோயில், வ.உ.சி.பார்க், ஈரோடு நகர்.
7.பொன்காளியம்மன் திருக்கோயில், தலையநல்லூர், ஈரோடு வட்டம். - காங்கேயம் ஆய்வர்.
8.புஸ்பவனேஸ்வரர் வகையறா திருக்கோயில், அவல்பூந்துறை, ஈரோடு வட்டம்.

பவானி வட்டம்

அருள்மிகு

1.சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி நகர் மற்றும் வட்டம்.
2.பத்ரகாளியம்மன் திருக்கோயில், அந்தியூர், பவானி வட்டம்.
3.செல்லாண்டியம்மன் திருக்கோயில், பவானி.

சத்தி வட்டம்

அருள்மிகு

1.பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி, சத்திவட்டம்.
2.வேணுகோபாலசாமி திருக்கோயில், சத்தியமங்கலம் நகர் மற்றும் வட்டம்.

பெருந்துறை வட்டம்

அருள்மிகு

1.சுப்பிரமணியசாமி திருக்கோயில், சென்னிமலை, பெருந்துறை வட்டம்.
2.சோழீஸ்வரர் வகையறா திருக்கோயில், பெருந்துறை நகர் மற்றும் வட்டம்.
3.தம்பிக்கலை அய்யன்சாமி திருக்கோயில், தங்கமேடு, பள்ளப்பாளையம், பெருந்துறை வட்டம்.
4.சீதேவியம்மன் திருக்கோயில், காஞ்சிக்கோயில், பெருந்துறை வட்டம்.
5.செல்லாண்டியம்மன் திருக்கோயில், பெருந்துறை நகர் மற்றும் வட்டம்.

கோபி வட்டம்

அருள்மிகு

1.கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில், பாரியூர், கோபி வட்டம்.
2.சுப்பிரமணியசாமி திருக்கோயில், பச்சமலை, கோபி நகர் மற்றும் வட்டம்.
3.சாரதாமாரியம்மன் திருக்கோயில், கோபி.

அன்னதானம்

"உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார்"
- திருமூலர்.

'தானத்தில் சிறந்தது அன்னதானமே' என்று மறைநூல்கள் கூறுகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பல திருக்கோயில்களில் தினமும் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இந்து சமய அறநிலையத்துறையின் கோவை மண்டலத்தின் கீழ் கோவை, நீலகிரி, திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் தற்போது மொத்தம் **51** திருக்கோயில்களில் **அன்னதானத் திட்டம்** அறிவிக்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

இந்தச் சிறப்புமிக்க அன்னதானத் திட்டத்தில் பக்தர்கள் முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டி மூலம் ஆண்டில் ஒரு நாளைக்கு தாங்கள் விரும்பும் நாளில் தங்களது பெயரில் பக்தர்களுக்கு அன்னதானம் செய்து நற்பலனை அடையலாம். இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசின் வருமான வரிச்சட்டம் 80/G ன் கீழ் வருமான வரிவிலக்கும் அளிக்கப்படுகிறது.

எனவே பக்தர்கள் இந்தச் சிறப்பு மிக்க அன்னதானத்திட்டத்தில் முதலீடு செய்து தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்கலாம். தங்களின் குடும்பத்தினரின் பிறந்தநாள், மணநாள், நீத்தார் நினைவு நாள் போன்ற நாட்களில் திருக்கோயிலில் அதற்கென ஒருநாள் கட்டணத்தை செலுத்தி 100 அல்லது 50 பக்தர்களுக்கு மதிய உணவை அன்னதானமாக வழங்கி இறையருள் பெறுவீர்.

ப.தனபால், எம்.ஏ.,பி.எல்.,
ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை

119, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம்
சென்னை - 600 034
அலுவலகம் : 044-28334815
நிகரி : 044-28334816
மின்னஞ்சல் : tn.endownments@gmail.com

வாழ்த்துரை

பழமையும் பண்பாட்டிற்கும் உறைவிடமுமாகிய நம் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பவை நமது திருக்கோயில்கள் ஆகும். தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்கள், தமிழர்களின் வரலாறு, பண்பாடு, வாழ்க்கை முறை, கலை, இலக்கியம் ஆகியனவற்றை நமக்கு வெளிப்படுத்தும் அரிய கருவூலங்கள் ஆகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனும் முதுமொழியின் அடிப்படையிலும், **"கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்"** என்றபழமொழியின்கருத்துக்கேற்பவும், நமது திருக்கோயில்கள் முதலில் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமே தோன்றின. காலப்போக்கில் அவை கல்வி, மறைகள், நுண்கலைகள், போர்க்களங்கள்ஆகியவற்றைப்பயிற்றுவிக்கும்பாடசாலைகளாவும் வளர்ந்தன. பல்வகை இலக்கியம், இதிகாசம், காப்பியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், நீதிமுறை, நிர்வாகம், ஆகமம் போன்ற வாழ்வியலோடு ஒட்டிய அத்தனைத் துறைகளின் ஆவணப் பதிவகமாகவும், நூலகமாகவும் விரிவுபெற்றன. இயற்கைச் சீற்றங்களால் மக்கள் துயருறும் போது, நிவாரண மையங்களாவும், காப்பகங்களாவும் மாறியதோடு, குற்றங்களைத் தண்டிக்கும் நீதி வழங்கும் வழக்காடு மன்றங்களாவும் செயலாற்றின. திருக்கோயில்கள் விரிவுபடுத்தும் போது கட்டிடம், சிற்பம், ஓவியம், படிமம் போன்ற நுண்கலைகள்பெரிதும்வளர்ச்சிபெற்றுள்ளன. பக்திப்பெருக்காலும், சமுதாய நன்மைக்காகவும் திருக்கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் உள்ளன. அவைகளையும் அவற்றின் அசையாச் சொத்துக்களையும்

சிறந்த முறையில் நிர்வகிக்க தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை முழுமூச்சுடன் செயல்பட்டு வருகிறது.

ஆன்மீகப் பெருமக்களின் உள்ளம் அறிந்து ஆலயப்பணிகளில் ஆர்வம் கொண்ட மக்களின் உணர்வுகளுக்கேற்றவாறு திருக்கோயில் களில் பாரம்பரியத்தைக் காப்பாற்றி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் வழிகாட்டுதலில் அறநிலையத்துறையின் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 23.3.2002அன்றுதிருமயிலைஅருள்மிகுகபாலீஸ்வரர்திருக்கோயிலில் துவக்கி வைத்த அன்னதானத் திட்டம் இன்று 468 திருக்கோயில்களில் அமுல்படுத்தப்பட்டுவருவதும், ஒருகாலபூசைதிட்டத்தின்கீழ்திருக்கோயில் கள் பயன்பட்டு வருவதும், பல நூற்றுக்கணக்கான திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள திருக்கோயில்களின் சிறப்பை தொகுத்து அவற்றிற்கு வழிகாட்டும் பயணியர் கையேடு ஒன்றை தயாரித்து வழங்கிட இந்து சமய அறநிலையத்துறை முன்வந்துள்ளது. திருக்கோயில்களின் அமைவிடம், வழித்தடங்கள், வரைபடங்கள், வண்ணப்படங்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்று சிறப்புக்கள், பதிகங்கள், பரிகார பூசைகள், திருவிழாக்கள், நிர்வாகம் மற்றும் அவற்றோடு தொடர்பு கொள்ள உதவும் தகவல்களோடு கூடியதாக அவை அமைகின்றன.

ஈரோடு மாவட்டத்திலுள்ள திருக்கோயில்கள் பற்றிய முழு விபரங்கள் அடங்கிய புத்தகமாக வெளியிட கோவை மண்டல இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் மற்றும் செயல் அலுவலர்கள் சிறந்த முறையில் பணியாற்றி உள்ளது பாராட்டுக்குரியது. இது போன்ற விரிவான படைப்புகள் மேலும் வெளிவர வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

அன்புடன்

பதனபால்

(ப.தனபால்)

அசுரனைக் காலடியில் கிடத்தி, வலது கரத்தில் ஏந்திய திரிசூலத்தால் அவனை அழித்திடும் கோலத்தில் செல்லாண்டியம்மன் அருள்பாலிக்கிறாள். எட்டு கரங்களிலும் ஆயுதங்கள் வில், அம்பு, டமருகம், அக்னி, கத்தி, மணி, கபாலம் ஆகியவை அலங்கரிக்கின்றன. வலது காலை மடித்து அமர்ந்த நிலையில் இடது பாதத்தினை அசுரனின் உடலை அழுத்தியபடி அமர்ந்த கோலம்.

வேறு எந்த திருத்தலத்திலும் காண முடியாத அதிசயம் ஒன்றை அன்னை தனது கரத்தில் ஏந்தியுள்ள சூலாயுதத்தில் நாம் காண முடிகிறது. ஒரு முனையில் திரிசூலமும், அன்னையின் கரம் பிடித்துள்ள மேற்பகுதியில் ஒரு கொழுமுனையும் பொருந்தியபடி காண்கிறோம். இப்படி ஒரு அம்சத்தை வேறு தலங்களில் நாம் காணவில்லை.

மிகப்பெரிய கோயில் வளாகம், அருகிலேயே சோழீசுவரர் திருக்கோயிலும் அமைந்துள்ளது. சோழீசுவரர் கோயிலில் ஒரு பழைய கல்வெட்டு உள்ளது. சோழீசுவரர், பாணலிங்கமாக உள்ளார். நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.,00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்


அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில், அளுக்குளி.

தொலைபேசி : 04285 291027

தேரோட்டம்




திருவிழாவின் முக்கியமான ஒரு அங்கம் தேரோட்டம் என்பதாகும். ஊர் கூடி தேர் இழுத்தல் என்பது பழமொழி. பெருந்திருவிழாவின் ஏழு அல்லது ஒன்பதாம் நாள் தேரோட்டம் நடைபெறும். தேர்க்காலுக்கு சிறப்புப் பூசை செய்து, நல்ல நேரத்தில் பெருமான் தேருக்கு எழுந்தருவார். நல்லநேரம் பார்த்து வடம் பிடித்து மக்கள் தேரை இழுத்து நான்கு ரத வீதிகளிலும் வலம் வருவர்.



அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில்


அளுக்குளி




கோபிசெட்டிப்பாளையத்திலிருந்து மேற்கில் 11 கிமீ தொலைவில் நம்பியூர் செல்லும் சாலையில் இடது புறம் அமைந்துள்ளசிற்றூர்.தடமலையாற்றின் கரையில் அமைந்துள்ள சோளீசுவரர் திருக்கோயிலை யொட்டி உள்ளது செல் லாண்டியம்மன் திருக்கோயில்.

அக்கினிச் சுவாலையை மகுடமாக அணிந்து, அனல் கக்கும் விழிகளோடு,

ஈரோடு மாவட்டம்



ஈரோடு - தெற்கு



1. ஈரோடு
2. திண்டல்
3. அவல் பூந்துறை
4. அறச்சலூர்
5. காங்கேயம்பாளையம்
6. மொடக்குறிச்சி
7. புஞ்சை கொளாநல்லி
8. வெங்கம்பூர்
9. தலையநல்லூர்
10. கொந்தளம்

ஆடிப்பெருக்கு, நவராத்திரி, ஆருத்ரா தரிசனம், தமிழ்ப் புத்தாண்டு போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறன்றன. பெருந்தலையூரில் பொன் அரளிப்புதரில் பூத்தவளாக **'பொன்னாட்சியம்மன்'** திருக்கோயிலும், **'முத்துமாரியம்மன்'** திருக்கோயிலும் உள்ளன. மாசி, பங்குனி மாதங்களில் நடைபெறும் **'குண்டம் திருவிழா'** மிகவும் சிறப்பானதாகும். நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.,00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு மகிழீசுவரர் திருக்கோயில், பெருந்தலையூர்
தொலைபேசி : 04285-291022
மின்னஞ்சல் : pariyuramman_temple@sancharnet.in

இடி பூஜை

'பட்சி தீர்த்தம்' என்று அழைக்கப்படும் திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டுக்கு அருகில் உள்ளது. மலைக்கோயில், தாழக்கோயில் என இரண்டு கோயில்கள் உள்ளன, மலைக்கோயிலில் நாள்தோறும் இரண்டு கழுகுகள் வந்து பூசாரி கொடுக்கும் பிரசாதத்தை உண்டு செல்வதை, ஏராளமான மக்கள் கண்டிருக்கின்றனர்.

இங்குள்ள **'சங்குதீர்த்தம்'** மிகவும் புனிதமானது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, **'குரு'** கன்னிராசிக்குச் செல்லும் போது, இந்தக் குளத்தில் இடி பூஜையும், **'சங்கு'** தோன்றுவதையும் காணலாம். **'இந்திரன்'** இத்திருத்தலத்து இறைவனைப் பூசை செய்வதையே **'இடிபூசை'** என்பர்.

“காட்டுமருதூரான அழகிய செம்மநல்லூர் இறையிலியாகக் கொடுத்தோம்” என்று கூறும கல்வெட்டு சாஸனம் 147 வரிகள் கொண்டதாகவுள்ள மிகப்பெரிய கல்வெட்டு ஆகும்.

மகிழ மரங்கள் மிகுந்திருந்த பகுதியில் தானே முளைத்தெழுந்தவராக **‘திருமகிழவனமுடைய நாயனார்’** என்று அழைக்கப்பட்ட மகிழீசுவரர் எழுந்தருளியுள்ள திருத்தலம். 1924ம் ஆண்டு வானி-யாற்றில் பெருக்கெடுத்த வெள்ளம், ஆலயத்தின் பெரும் பகுதியைப் பாதித்து விட்டது. அண்மையில் பெரும் பொருட் செலவில் சிறந்த முறையில் திருப்பணி செய்விக்கப்பட்டு குடமுழுக்கையும் கண்டுள்ளார் மகிழவனேசுவரர்.

மூலவர் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், சாபமண்டபம் அத்தனையும் கொண்டுள்ள திருக்கோயில்.

மனத்துயரையெல்லாம் அகற்றி, மகிழ்ச்சியைத் தரும் மகேசுவராக, மகிழவனநாதர், எழுந்தருளியுள்ளார். பெரியநாயகி என்ற பெயர் கொண்டு, அன்னை தனிச்சந்நிதி கொண்டுள்ளார்.

அம்மன் சந்நிதி மண்டபத்தில் குகை ஒன்றும் இருந்ததாம். தற்போது அது மூடப்பட்டுள்ளது. திருக்கோயிலில் உள்ள சுப்பிரமணியசுவாமி சிலை அந்தக் குகையில் தான் கிடைத்ததாகக் கூறுவர்.

உள்சுற்றில் வலம்புரி விநாயகர், சுப்பிரமணியசுவாமி, காசிவிசுவநாதர், நால்வர், சூரிய சந்திரர், பைரவரோடு பரிவார தேவதைகளும் இடம் பெற்றுள்ளன.

மேலும் இத்திருக்கோயிலில் வில்லேந்திய வேடனாகக் காட்சி தரும் சிலையொன்று, ஆறடி உயரத்தில் உள்ளது. பாசுபதம் வேண்டித் தவமிருந்த அர்ச்சுனன் என்பர், காளத்தி கண்ணப்ப நாயனார் என்பர் அழகிய சிற்பம் அது.



அருள்மிகு
ஆருத்ர கபாலீசுவரர் திருக்கோயில்

ஈரோடு



ஈரோடு மாவட்டத்தின் தலைநகரம், சந்தை நகர மாகவும் சிறப்புற்று விளங்குகிறது. ஈரோடு மாநகரின் நடுநாயகமாக அமைந்து உள்ளது அருள்மிகு ஆருத்ர கபாலீசுவரர் கோயில்.

'ஈர ஓடு' என்பதே ஈரோடு என மருவியதாகவும், ஈரோடு நகரத் தல புராணத்தை மேற்கோள் காட்டுவர் பலர். 'ஈரஓடை' என்பதே ஈரோடு ஆக மாறியது என்றும் சிலர் கூறுவர்.

சைவ-வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயிலும், கஸ்தூரி ரங்கப் பெருமாள் திருக்கோயிலும் அருகருகே அமைந்திருப்பது தனிச் சிறப்பு ஆகும்.

ஈரோடு நகரின் மையப்பகுதியான பழைய கோட்டையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ள அழகிய திருக்கோயில். ஐந்து நிலை இராஜ கோபுரம், வண்ணமிகு கலைச் சிற்பங்களோடு, தெய்வீக ஒளியைப் பரப்புகின்றது. கொங்கு நாட்டிற்கே உரித்தான கருங்கல் தீபத்தம்பம் கோயிலுக்கு வெளியே உள்ளது. முதலையுண்ட பாலகனை மீட்கும் சிற்பம் அதில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.



ஐயனாரப்பன் பள்ளு

"திறமையாகிய கோபுர வாசலும்
தேவி வாரணிநாதர் தம் கோயிலும்,
பிரம்ம தேவனும் வந்து துதித்திடும்
பெட்டிமிக்க கொடையும் மிகுந்திடும்" என்று
ஐயனாரப்பன் பள்ளு ஈரோட்டைச் சிறப்பிக்கிறது.

திருத்தொண்டீசுவரம்

கொங்குச் சோழர்கள், ஹொய்சாளர்கள், விஜய நகர மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகள், திருத்தொண்டீசுவரம் என்றும், இறைவனைத் தொண்டீசுவர நாயனார், தொண்டீசுவரமுடைய தம்பிரானார், தொண்டீசுவரமுடைய மகாதேவர், தொண்டர்கள் நாயனார் என்றும் குறிப்பிடுகின்றன.

இந்தத் திருக்கோயிலை அமைத்தவர் கரிகாற் சோழன் என்று பூந்துறைப் புராணம் கூறுகிறது. மைசூர் மன்னர் ஒருவரால் துவாரபாலகர் சிலைகள் அமைக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது. சோழர்கள் காலத்தில் இத்தலம் "**மூவேந்த சோழர் சதுர்வேதி மங்கலம்**" என்று அழைக்கப்பட்டது.

வாரணிப் பங்காளன், வாரணிநாதர், ஆருத்ர கபாலீசுவரர், சோழீசுவரர் என்ற பெயர்களாலும், ஈசன் அழைக்கப்படுகின்றார்.



அருள்மிகு மகிழீசுவரர் திருக்கோயில்

பெருந்தலையூர்

கோபியிலிருந்து ஆப்பக்கூடல் செல்லும் சாலையில், கிழக்கே 23 கி.மீ. தொலைவில் ஆற்றின் கரையில் அமைந்துள்ள கோவில்.

900 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்கள் இங்கு கண்டறியப்பட்டுள்ளன.

காஞ்சிக்கோயில் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய **'அழகிய செம்மநல்லூர்'** தான் இன்று மகிழீசுவரர் திருக்கோயில் அமைந்துள்ள பெருந்தலையூர். ஊரின் நான்கு எல்லைகளிலுள் **'திரிசூலம்'** பொறித்த கற்கள் எல்லையாக அமைந்திருப்பதும், முற்காலத்தில் சீரும் செழிப்புகளாகத் திகழ்ந்துள்ளதைக் காட்டுகின்றன.

அதன்பிறகு திருக்கோயில் முழுவதும் வர்ணம் பூசப்பட்டு 04.03.2004 அன்று திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.



மேலும் உபயதாரர்கள் மூலம் திருக்கோயில் அடிவாரத்தில் சுமார் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டப்பட்டு கடந்த 02.09.2009 அன்று திறப்பு விழா நடைபெற்றது.

இத்திருக்கோயிலில் தினமும் மூன்று கால பூஜைகள் நடைபெற்று வருகிறது. காலை 7.30 மணிக்கு விழாக்கால பூஜை, பகல் 12.00 மணிக்கு உச்சிக்கால பூஜையும், இரவு 7.30 மணிக்கு அர்த்தசாம பூஜையும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

திருவிழாக்கள்

ஒவ்வொரு மாதமும் கிருத்திகை தினத்தன்று சுவாமி பிரமனை சிறப்பாக நடைபெறுகிறது. வருட திருவிழாவாக தைப்பூம் பங்குனி உத்திரத்திருவிழா காலங்களில் காவடி அபிஷேகம் பால் குடங்கள் சிறப்பான முறையில் அபிஷேங்கள் நடைபெறுகிறது. சுவாமி திருவீதி உலா நடைபெறுகிறது. ஐப்பசி மாதத்தில் கந்தர் சஷ்டி சூரசம்காரத் திருவிழா திருக்கல்யாண உற்சவம் சுவாமி திருவீதி உலா மலர் பல்லாக்கில் முத்துக்குமரன் கோபி நகருக்கு எழுந்தருள்வார். மேற்படி விழா மூன்று நாட்களுக்கு லட்சார்சனையும் யாக பூஜையும் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

பிரதி வாரம் செவ்வாய்க்கிழமை தோறும் கோமாத பூஜையுடன் திரிசதை அர்ச்சனை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சுருங்கச் சொன்னால் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு திருவிழாவும் மிகவும் சிறப்பான முறையில் இத்தலத்தில் நடைபெறுகிறது. நீங்கள் ஒரு தடவையேனும் நேரில் வந்து அதைக் காணவேண்டும்.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.00 மணி - பகல் 12.30 மணி

மாலை 4.00 மணி - இரவு 8.30 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு முத்துகுமாரச்சுவாமி திருக்கோயில், பவளமலை.

தொலைபேசி : +91 (0) 4285 222125

மேல் விதானத்தில் பன்னிரண்டு ராசிகள் பொறிக்கப்பட்ட சிற்பத்தின் அழகைப் பார்த்தபடியே உள்ளே நுழைகிறோம், திருச்சுற்றில் மடைப்பள்ளி, அரங்கமேடை, திருக்கல்யாண மண்டபம் ஆகியவை உள்ளன.

நான்கு துண்டாகிய நான்முகன் தலை:

தக்கன் நடத்திய வேள்விக்குத் தலைமையேற்றுச் சென்றதால் சாபமுற்ற நான்முகனின் தலை தெரித்து நான்கு துண்டுகளாக பூமியில் விழுந்ததாம். அவற்றில் ஒன்று தான் 'ஈரஓடு' என்ற ஈரோடு என்கிறது தல வரலாறு. அதற்குப் பொருத்தமாக, இந்நகரைச் சுற்றி சித்தோடு, பேரோடு, வெள்ளோடு என்ற தலங்களும் அமைந்துள்ளன. சற்றுத் தொலைவில் 'பச்சை ஓடீசுவரர்' என்றும் மடவிளாகத்தில் இறைவன் அழைக்கப்படுகிறார்.

ஆருத்ரன், கபாலன் என இரு அரக்கர்கள் இருந்ததாகவும், அவர்களை ஈசுவரன் சம்கரித்த போது, இத்தலம் அவர்களது பெயரால் அழைக்கப்பட வேண்டும் எனக் கோரியதால் '**கபாலபுரி**' எனப் பெயர் வந்ததாகவும் கூறுவர்.

தொண்டன் அளித்த துண்டு :

இந்நகரில் வாழ்ந்து வந்த தாண்டவ முதலியார் சிறந்த சிவபக்தர். நெசவுத் தொழிலாளி. அவரது இல்லத்திற்கு வந்த அடியார் ஒருவருக்குப் புதிதாக நெய்த துண்டு ஒன்றை வாங்கிப் போர்த்தி மகிழ்ந்தார்.

மறுநாள் காலையில், ஆலயத்தில் உள்ள ஈசனின் மீது அந்தத் துண்டு போர்த்தப்பட்டிருக்கக் கண்டு, பஞ்சாயத்தார் தாண்டவன் மீது குற்றம் சாற்றினர். அவனது முதலாளியும் தாண்டவன் தன்னிடம் அந்த துண்டைப் பெற்றுச் சென்றதை உறுதி கூறினார். மூலவர் கருவறைக்குள் சென்று ரகசியமாகத் துண்டை அணிவித்த குற்றத்திற்காக அவருக்குக் '**கசையடி தண்டனை**' வழங்கப்பட்டது.

தூணில் கட்டப்பட்டு, சாட்டையால் தாண்டவன் அடிபட்டபோது, அசரீரியாக தோன்றிய ஈசன், "தாண்டவனின் பண்பை நிரூபிக்கத்

தான் நடத்திய லீலை அது!" எனத் திருவாய் மலர்ந்தருளினார். "**ஐயனாரப்பன் பள்ளுப் பாடல்**" என்ற நூல் இத்திருத்தலத்தின் பெருமையை இவ்வாறு சிறப்பித்துள்ளது.

கருவறையில் கபாலீசுவரர் :

தொண்டர் தம் பெருமையை உலகோர்க்கு உணர்த்திய எம்பெருமான், சிறிய திருமேனியாகக் கருவறையில் இடங் கொண்டுள்ளார். பட்டாடையும், நாகாபரணமும், கண் கொள்ளாக் காட்சியாய் நம்மை திருக்கயிலாயத்திற்கே இட்டுச் செல்கின்றன.

வாரணியம்மை, ஈசனுக்கு வலப்புறம் தனிச் சந்நிதி கொண்டுள்ளார். மூன்று நிலை கோபுரம், எதிரே அதற்கு சிறப்பு செய்கிறது. திருமணக் கோலம் இது என்றும் கூறுவர்.



உள்சுற்றில் விநாயகரோடு, எட்டு கரங்களுடன் துர்க்கை அம்மன், சகஸ்ரலிங்கம் ஆகியன உள்ளன. பொல்லாப் பிள்ளையார், அறுபத்துமூவர், அறுபத்து மூவரோடு தென்முகக் கடவுள் தெற்குபுரம், ஜீரகரேசுவரர், நால்வர், முருகப்பெருமான் மேற்குப்புறம், பிரம்மா, துர்கை சண்டிகேஸ்வரர் வடக்குப்புறமும் உள்ளனர். சண்டிகேசுவரர் அருகே '**கபால தீர்த்தம்**' உள்ளது. வடகிழக்கு மூலையில் நவக்கிரகங்கள் சந்நிதி அமைந்துள்ளது.

ஆட வல்லான் சிவகாமியம்மையோடு முன்மண்டபத்தில், தெற்கு நோக்கியபடி காட்சி தருகிறார்.

சூரிய வழிபாடு :

மாசி மாதம் கடைசி மூன்று நாட்கள், காலையில், சூரியனின்

உச்சிக்குடுமியுடன் முத்துக்குமாரசுவாமி கிழக்கு நோக்கி காட்சி தருவது ஒரு சிறப்பு. வருபவரை எல்லாம் என்று வந்தனை என்று கேட்கும் தோரனையுடன், முகத்தில் குறுஞ்சிரிப்புடன், அழகு தவழும் தோற்றத்துடன் காண்போரை எல்லாம் சுண்டி இழுக்கும் காந்த பிரானாக சாந்த பிரானாக இந்த முருகன் திகழ்கிறார். அவனை நோக்கியதும் நம் கண்ணும் கருத்தும் வேறு திசையில் செல்ல மறுக்கிறது. ஒன்றிய நிலையில் அவன் திருவடிகளில் தோய்கிறோம். இந்த உணர்வு எழுத்துக்கு அப்பாற்பட்டது. உணர்ந்தவர்கே புரியும் ஓர் அனுபூதிப் பெருந் அது. அருகாமையிலுள்ள பச்சைமலையும் முருகன் மலையே அங்கே அவர் வள்ளி தெய்வானை என்ற இரு பெண் கொண்டவராக சுப்பிரமணிய சுவாமியாக விளங்குகிறார்.



பவளமலையில் சிவபெருமானும், அம்பிகையும் கைலாகநாதர் பெரியநாயகியாகவும் எழுந்தருளியுள்ளனர். இங்கே உள் விநாயகபிரான் கல்விக்கு அதிபதி எனும் கருத்தோடு விநாயகர் எனும் பெயரில்திகழ்கிறார். வள்ளியம்மை, தெய்வானைசன்னதி, இடும்பன், விநாயகர் நாகர் நவகிரகங்கள் விநாயகர் அடிவாரம் விநாயகர் மயில்வாகனம் ஆகிய விக்கிரகங்கள் திருக்கோயில் சன்னதியில் உள்ளன. உற்சவ விக்கிரகங்கள் ஆக முத்துக்குமாரசுவாமி வள்ளி தெய்வானை வீரபாகு தேவன் கணபதி சூலத்தேவர் ஆகிய உச்சவ திருமேனிகளாகவும் எழுந்தருளியுள்ளனர்.

அழகிய இத்திருக்கோயில் துருவாச முனிவரால் ஆரம்ப காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. முதன்முறையாக புதுப்பாளையத்தைச் சேர்ந்த திரு.பி.எஸ்.நல்லாக்கவுண்டர் என்பவரால் 1968ல் திருக்குட நன்னீராடல் நிகழ்ந்ததாக அறிகிறோம்.



இரண்டாவது முறையாக சவுண்டப்பூர் திரு.எஸ்.எஸ்.முத்துவேலப்பன் (சுந்துரு) சென்னியப்பகவுண்டர் என்பவர் அறங்காவலர் குழு தலைவராக இருந்தபோது 21.04.1980ல் திருக்குட நன்னீராடல் நடைபெற்று உள்ளது.



அருள்மிகு
முத்துக்குமாரசுவாமி திருக்கோயில்
பவளமலை

படைவீடு என்றால் படைகள் இருக்கும் இடம் என்பது மட்டும் பொருள் அன்று; மாநகரம் என்றுதான் பழைய பொருள் சொல்கிறது. ஆகவே முருகப்பிரானும் அவனுடைய அடியார்குழாமும் தங்கும் அடைங்களே படைவீடாகும். அவ்வகையில் பவளமலையும் அவனது படைவீடுகளில் ஒன்று என்பதில் தவறில்லை.

பவளமலை முத்துக்குமார சுவாமி



முருகன் இனிமையானவன்; அவன் இன்னும் இளமையாக இருப்பது குழந்தை தோற்றம் தானே ! இங்கே முத்துக்குமாரசுவாமி குழந்தையாக எழுந்தருளியுள்ளார். பல புலவர்கள் குழந்தை முருகனை பாடி மகிழ்ந்துள்ளது நம் நினைவிற்கு வருகிறது.

இங்கே உள்ள முருகப்பிரான் இளமை தோற்றத்துடன் கையில் தண்டுடன் இடையில் கோவணத்துடன்

ஒளிக்கதிர்கள், நேராகக் கருவறை வரை சென்று மூலவர் சிவலிங்கத் திருமேனியைத் தழுவுவது, மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

மயிலை :

மயில் உருக்கொண்டு அன்னை பராசக்தி இத்தலத்தில் ஈசனை வழிபட்டதால் **மயிலை** என்றும் வேறு பெயர் கொண்டது இத்திருத்தலம். தொண்டீசுவரர் வண்ணம், ஐயனாரப்பன் பள்ளு, கொங்கு மண்டல சதகம், பூந்துறைப் புராணம் ஆகியவை ஈரோட்டின் புகழ்பாடும் நூல்களாகும்.

'சமபங்கு' :

1579ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று "தானமாக வழங்கப்பட்ட நிலமொன்றின் வருவாயை, ஆருத்ர கபாலீசுவரரும், பள்ளி கொண்ட பெருமானும் சமமாகப் பங்கிட்டு" அனுபவிக்க வேண்டுமெனக் கூறுகிறது.

நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் 'பெருவிழா' நடைபெறுகிறது.

அன்னதானம்:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின்கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்
அருள்மிகு ஆரூத்ரா கபாலீஸ்வரர் திருக்கோயில், ஈரோடு நகர்
தொலைபேசி : 0424 2267578
மின்னஞ்சல் : aaruthraatemple@gmail.com



அருள்மிகு
கஸ்தூரி ரங்கநாதர் திருக்கோயில்

ஈரோடு

ஈரோடு மாவட்டத்தில், மூன்று தலங்களில் திருமாலைப் பள்ளிக் கொண்ட கோலத்தில் தரிசனம் செய்யலாம். ஈரோட்டில் **கஸ்தூரி ரங்கனாக,** கொடுமுடியில் **வீர நாராயணப் பெருமாளாக** மற்றும் சத்திய மங்கலத்தில் பக்தர்களை நோக்கியபடியே **பாம்பணையில் பள்ளி கொண்டவராக,** நாம் தரிசிக்க முடிகிறது.



ஈரோடு கஸ்தூரி ரங்கநாதப் பெருமாள் ஆலயம், நகரின் மையப் பகுதியில், ஆருத்ர கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு அருகிலேயே அமைந்துள்ளது. அழகிய சுதை சிற்பங்களுடன் கூடிய ஐந்து நிலை இராஜ

பிடுங்கி கிணற்றில் விடுவார்கள்.

ஆடி அமாவாசை, தை அமாவாசை, நவராத்திரி ஆகிய நாட்களிலும், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

தங்கத்தேர்

மக்கள் தாங்கள் விரும்பும் நாளன்று, பண்ணாரி அம்மனை தங்கரதத்தில் அமர்த்தி, அழகுபார்த்து, திருவுலா வரச்செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின்கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

நாள்தோறும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

தங்கும் விடுதிகள்

பண்ணாரியம்மனை தரிசிக்க வரும் பக்தர்களின் வசதிக்காகப் பெரிய அளவில் ஐந்து தங்கும் விடுதிகளும், 32 ஓய்வறைகளும் அமைக்கப்பட்டுள்ளன. திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் நடைத்திறத்திருக்கும் நேரம்

காலை 5.30 மணி – இரவு 9.00 மணி

தொடர்பு முகவரி: துணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்,
பண்ணாரி, சத்தி வட்டம்.

தொலைபேசி : 04295 243289

மின்னஞ்சல் : bannari@yahoo.com

உற்சவப் பெருத்திருவிழா

பூச்சாற்றிலிருந்து பதினைந்தாம் நாள் திங்கட்கிழமை அண்டை மாநிலங்கள் உள்பட பல பகுதிகளிலிருநதும், பெரும் திரளாக வருவர். சத்திய மங்கலத்திலிருந்து பண்ணாரி வரை பந்தல்களும், தோரணமுமாய் விழாக் கோலம் காணும்.

அலகு குத்திக்கொண்டு சூலம், வேல் தாங்கிக்கொண்டு அக்கினிக் கரகம்ஏந்தியபடியும், மேளதாளங்கள்முழங்கிட அம்மனை எழுந்தருளச் செய்து, பூசனைகள் இடைவிடாது நடைபெறும்.

குண்டடம்

கொங்குநாட்டில் பண்ணாரி மாரியம்மன் குண்டம்திருவிழாவே மிகப்பெரியவிழாவாகும்திங்கட்கிழமைகாலையில்அம்பிகைக்குத்தங்கக் கவசமும், பட்டாடைகளும் அணிவித்து, சிறப்பு அலங்காரங்கள் நடைபெறும். காலையிலிருந்தும் அம்மனின் திருவுலா (மெரவணை) நடைபெறும்.



அன்றிரவு ஓர் அக்னி குண்டம் ஏற்றப்படும் குண்டத்தில் நவதானியங்கள், சூரைத் தேங்காய், பருத்தி, மிளங்காய் ஆகியவை சூரையிடப்படும். திரளான மக்கள் குவிந்திருக்க அம்மன் அழைத்து வந்து அனைவரும் பணிந்திடத் தலைமைப்பூசாரியார் முதலில் குண்டத்தில்இறங்குவார். அவரைத்தொடர்ந்துவரிசையாகஆண்களும், பெண்களும் குண்டம் இறங்குவர். இது செவ்வாய் கிழமை மாலை மூன்று மணி வரை நடைபெறும். புதன் இரவு மின் விளக்குகளால் அலங்காிக்கப்பட்ட புஷ்பரதத்தில் அம்மன் பவனி வருதலும், மகாமுனி வருகையும் நடைபெறும். அதன் பிறகு இரவில் அக்னிக் கம்பத்தை

கோபுரமும், நுழைவு வாயிலின் முகப்பில் வைகுந்தக் காட்சியும், தசாவதாரக் காட்சியும் காண்பதற்கு இனியன.

வாயிற் காப்போர் பெருமாள் அருகில் :

அனைத்துப் பெருமாள் கோயில்களிலும் ஜெய, விஜயன் என்ற இரு துவாரபாலகர்கள், கருவறைக்கு வெளியே இருபுறமும் நிற்கக் கண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் இருவருமே கருவறைக்குள்ளேயே பெருமாளின் தாழ்பணிந்து நிற்கக் காண்பது ஈரோடு கஸ்தூரி ரங்கநாதர் ஆலயத்தில் மட்டுமே ஆகும்.

தலவரலாறு கூறும் விளக்கம், மகாவிஷ்ணுவின் மீது அளவற்ற பக்தி கொண்ட ஜெய, விஜயர்கள் அவரைப் பிரியாதிருக்கவே, வாயிற் காப்போராக நின்றிட வரம் பெற்றவர்கள் என்பதாம். ஒரு சமயம் முனிவர் பலர், எம் பெருமானைக் காண விரைந்த போது, அவர்களைத் தடுத்ததற்காக, பூவுலகில் பிறந்திடுமாறு சாபம் பெற்றனர். எப்போதும் எம்பெருமானை வெறுக்கும் இரணியன், இரணியாட்சன், ராவணன், கும்பகர்ணன், கம்சன், சிசுபாலன் எனப் பிறப்பெடுத்து, மகாவிஷ்ணுவினாலேயே வதம் செய்யப்பட்டு, மீண்டும் திருமாலின் சேவைக்குத் திரும்பினராம். ஈரோடு திருத்தலத்தில் மட்டும், அவர்கள் கருவறையினுள்ளேயே பள்ளி கொண்ட நாதன் பாதம் பணிந்து நிற்கும் வரத்தையும் பெற்றனராம்.

அதேபோல எப்போதும் சினங் கொண்டிருக்கும் துர்வாச மகரிஷியையும் சாந்த குணம் கொண்டவராகச் செய்த பெருமை, ஈரோடு திருத்தலத்துக் கமலவல்லித் தாயாரையே சாரும்.

கருவறையில் கஸ்தூரி ரங்கன் :

திருவரங்கத்தைப் போலவே, குடதிசையில் முடியை வைத்து குணதிசையில் பாதங்களை நீட்டி, வலது கரத்தில் கதையையும், இடது கரத்தில் பிரம்மனையும் தாங்கியபடி ஐந்து தலைகள் கொண்ட ஆதிசேஷன் குடைபிடித்தபடி, பாம்பணையில் பள்ளி கொண்டுள்ளார். வலது கரத்தின் அருகே சாந்த சொரூபியாக துர்வாசரும், சீதேவி, பூதேவியருடன் திருப்பாத சேவை செய்யும் கோலத்தில் மது கைடபவர்களுடன், சயனக் கோலத்தில் சேவை சாதிக்கிறார்.

பெருமாள் திருவுருவின் நீளம் 14 அடி ஆகும். கர்ப்பிணிப் பெண்கள் சுகப்பிரசவம் அடைந்திட, பெருமாளுக்கு முன்பு கஸ்தூரியைப் படைத்து வழிபடுவது வழக்கமாக இருப்பதால் கஸ்தூரி ரங்கநாதர் என்ற பெயர் நிலைத்து விட்டது.

கமலவல்லித் தாயார் :

பெருமாள் சந்நிதியின் பின்புறம் தனிச் சந்நிதி கொண்டு, அமர்ந்த கோலத்தில், கிழக்கு நோக்கியபடி காட்சி தருகிறாள். பெயருக்கேற்ப, மேற்கரங்களில் தாமரை மலரும், அபய வரதக் கோலமும் கொண்டுள்ளாள். பங்குனி உத்திரத்தன்று ஒரு நாள் மட்டும் பெருமாள், தாயார் சந்நிதிக்கு எழுந்தருளும் திருக்கல்யாண வைபவம் நடைபெறும். கமலவல்லித் தாயாருக்கு நெய் விளக்கேற்றி வளையல் சாத்தி வழிபடுவது சிறப்பாகக் கூறப்படுகின்றது.

வெளிச்சுற்றில், வியாசராஜரால் பிரதிஷ்டை செய்த ஆஞ்சநேயர் புடைப்புச் சிற்பமாக உள்ளார். ஆண்டாள், ருக்மணி, பாமாவுடனான வேணுகோபாலர், கண்ணன் ஆகிய சந்நிதிகளோடு ஆதிசேஷன், ஆஞ்சநேயர், கருடாழ்வாரும் உள்ளனர்.

பதினாறு கரங்களோடு சக்கரத்தாழ்வார் :

அக்கினி ஜ்வாலையையே கிரீடமாக அணிந்தபடி, பதினாறு கரங்களுடன், ஒரு காலை முன்வைத்தபடி நிற்கும் சக்கரத்தாழ்வார் கம்பீரமான தோற்றத்துடன் உள்ளார்.

புரட்டாசி மாதத்தில் 10 நாட்கள் பெருவிழாவும், வைகுண்ட ஏகாதசியன்று **சொர்க்கவாசல்** திறப்பும், மார்கழி மாதத்து 30 நாட்களும் சிறப்பு வழிபாடுகளும் உண்டு.

நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 9.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு கஸ்தூரி ரங்கநாதர் திருக்கோயில், ஈரோடு

தொலைபேசி : 0424 – 2267578.

காட்டில் வெட்டியெடுக்கப்படும் புற்றுமண்ணே, அம்மனின் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

கமல பீடத்தில் அம்மன்

கருவறையில் பண்ணாரி மாரியம்மன், கமலபீடத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள். அக்கினிச் சுவாலை அலங்கரிக்கும் ரத்தினகிரீடம், முன் வலது கரத்தில் கத்தியும், இடது கரத்தில் கபாலமும், பின்மேற்கரத்தில் டமருகமும், இடது மேற்கரத்தில் பாசமும் ஏந்தியபடி, அமைதியாக அமர்ந்துள்ளாள். வலதுகாலை மடித்தபடி, இடது காலைத் தொங்கவிட்டபடி சாந்த நிலையில் அமர்ந்த அற்புதக்கோலம்.

அம்மன் திருச்சந்நிதிக்கும் அடுத்து அர்த்த மண்டபத்தில் மேற்கு பார்த்தபடி பொம்மராய சுவாமியும், மகாமண்டபத்தில் கிழக்கு நோக்கியபடி விநாயகரும் இடம் பெற்றுள்ளனர்.

பிரகாரத்தில், தென்புறம் மேடைமீது மாதேசுவர திருமூர்த்தி எழுந்தருளியுள்ளார். பண்ணாரி அம்மன் தெப்பக்கிணறுக்கு அருகில் 'சருகு மாரியம்மன்' அமர்ந்திருக்க, தெப்பக்கிணறுக்கு மேற்கில் முனியப்ப சுவாமி அமர்ந்திருக்கிறார்.

பூச்சாற்று

ஆண்டு தோறும், பங்குனி உத்திரத்தையொட்டி, திங்கட்கிழமை இரவு, அம்மனுக்கு அபிஷேக அலங்காரங்கள் செய்விக்கப்பட்டு பூச்சாற்று நடைபெறும். மறுநாள், அம்மன் சப்பரத்தில், சுற்றிலும் உள்ளஊர்களுக்குஎழுந்தருளுவதும், சோலிகர்என்றமலைவாசிகள் வாத்தியம் முழங்க, அருந்ததியர் தாரை, தம்பட்டை முழங்கிட, அம்மன் புறப்பாடு நடைபெறும். பூச்சாற்றின் எட்டாம் நாள் திங்கட்கிழமை அம்மன் திருக்கோயில் வந்தடைவாள்.

கம்பம் நடுதல்

பூச்சாற்றிலிருந்து ஒன்பதாம் நாள் செவ்வாய்கிழமை இரவு, கம்பம் அமைக்கப்பட்டு, கம்பத்தின்அருகில் அம்மனுக்கு ஆராதனை அபிஷேகம்நடைபெறும்.

தீர்ப்பவளாகவும், மாறாத பிணிகளைப் போக்கும் மருத்துவராகவும், எண்ணிய காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றிடும் ஆதிசக்தியாகவும், கண்ணொளி அற்றோர்க்கு கண்ணொளி தந்திடும் கண்கண்ட தெய்வமாகவும் அருள்பாலிப்பவள்.

சுயம்பு லிங்க வடிவமாகக் காட்சி தருபவளே அன்னை பராசக்தி, தோரணப்பள்ளம் என்ற காட்டாற்றின் கரையிலே கனாங்குப் புற்புதரிலே, தானேமுளைத்தெழுந்த மகாசக்தி அவள், சுற்றிலும் உள்ள பல கிராமங்களிலிருந்து மேய்ப்சபர்கள் தங்கள் மாடுகளை மேய்ப்பதற்கு இப்பகுதிக்கு வருவார்கள். மாடுகளுக்குப் பட்டிகளும் அமைத்துக்கொள்வர். அப்படியிருக்க, ஒரு நாள், காராம்பசு ஒன்று,வேங்கைமரம்ஒன்றினடியில்முளைந்திருந்தகணம்புற்புதரில் தனது மடியிலிருந்து பாலைப் பொழிவதைக் கண்ணுற்று வியந்தனர்.

அப்படி ஒரு பசு, தானே வலியச் சென்று, நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பாலைப் பொழிந்து வருவதன் அதிசயம் என்ன என்றுஅறிந்திட,அந்தப்புதரைநீக்கிப்பார்த்தபோது,சுயம்புலிங்கத் திருமேனி ஒன்றைக்கண்டனர். சுற்று வட்டாரத்தின் மக்கள் அனைவரும் அங்கே கூடிய நிலையில், ஒரு பெரியவருக்கு ஆவேசம் வந்து, தானே 'பண்ணாரிமாரி' என்றும், அதே இடத்தில் தன்னைஆராதிக்கும்படியும் கூறினார். மண்ணார்காடு என்ற ஊரிலிருந்து வந்தேன், அடுத்த நாடு செல்லும் பாதையில் இங்கே உள்ள இயற்கை அழகில் மயங்கவிட்டேன். நான் இங்கேயே இருப்பேன், என்னை 'பண்ணாரி மாரியம்மன்' என்றே அழைக்கவேண்டும் என்றும் கூறி மூர்ச்சையில் ஆழ்ந்துவிட்டார் அந்த முதியவர்.

அருள்வாக்கினை அம்பிகையின் உத்திரவாக ஏற்று, மக்கள் அங்கேயே குடில்போன்ற ஒரு கோயிலை எழுப்பினர். குடிலே கோயில் ஆனது. மண்டபங்கள் உருவானது. கருவறை விமானம் உருவான அம்மன் தங்கரதத்தில் உலா வருகிறாள்.

'உயிர்ப்பலி' தவிர்க்கப்படும் பண்ணாரி மாரியம்மன் கோயிலில்



அருள்மிகு
மகிமாலீசுவரர் திருக்கோயில்

ஈரோடு



ஈரோடு நகரின் மையப் பகுதியில் டி.வி.,எஸ் வீதியில் இராஜ கோபுரத்துடன் அமைந்துள்ள கோயில் மகிமாலீசுவரர் திருக்கோயில்.

சிவலிங்கத் திருமேனிகள் அமைந்திருக்கும் அளவைப் பொறுத்து அவை மானுடப் பிரதிஷ்டை, தேவப் பிரதிஷ்டை, அசுரர்பிரதிஷ்டை என ஆகமங்கள் வகைப்படுத்தியுள்ளன. கருவறைவாசலைவிடமிகப்பெரியஅளவில்

சிவலிங்கத் திருமேனியாக மகிமாலீசுவரர் அமைந்துள்ளதால், அசுரப் பிரதிஷ்டை எனக் கருதப்படுகிறது. மாலி, சுமாலி, மகிமாலி என்ற மூன்று அரக்கர்கள், இராவணனின் முன்னோர்கள். சிறந்த சிவ பக்தர்களும் கூட இமயமலைக்குச் சென்று கைலாசபதியை தரிசித்துத் திரும்புகையில் காவிரியின் கரையில் அவர்கள் பூசனைக்காகப் பிரதிஷ்டை செய்த திருமேனியே இது என்று தலவரலாறு கூறுகிறது. இந்தப் பகுதி மகிமாலை நல்லூர் என்றும் முன்பு அழைக்கப்பட்டிருக்கக் கூடும்.

நாள் தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகின்றது. ஐப்பசி மாதத்து அன்னாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெறும்.



திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி

அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயில் நகராட்சி குடியிருப்பு

ஈரோடு நகரில் உள்ள நகராட்சி குடியிருப்பில் நடுநாயகமாக வீற்றிருக்கிறார் சக்தி விநாயகர். ஈரோடு வாழ் மக்களிடையே மிகவும் பிரசித்தி பெற்று வரப்பிரசாதி என்றும் கருதப்படுபவர். எந்த புதிய திட்டத்தையும் துவங்கும் முன்னே முதலில் சக்தி விநாயகரை வழிப்பட்ட பின்னரே அதற்கு மேற்கொண்டு செயல்களை துவக்குவர். காரணம் சக்தி விநாயகர் அருளால் அனைத்தும் சித்திக்கும் என்ற தளராத நம்பிக்கையே!

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 11.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு மகிமாலீசுவரர் திருக்கோயில், ஈரோடு
தொலைபேசி : 0424 – 2267578.



அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்
பண்ணாரி


அருள்மிகு பண்ணாரி அம்மன்

கொங்குநாட்டின் வடமேற்கு எல்லையில், காவல் தெய்வமாக வீற்றிருப்பவளே பண்ணாரி மாரியம்மன்.

சத்தியமங்கத்திலிருந்து மைசூர் செல்லும் பாதையில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது. தெற்கு திசை நோக்கியபடி அமைந்த திருக்கோயில்.

மகாசக்திபீடமாக விளங்கும் பண்ணாரி அம்மன், தீராத வினைகளைத்

நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறத்திருக்கும்நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொலைபேசி : 04295 221899

அருள்மிகு பவானி ஈஸ்வரர் திருக்கோயில்

ஆற்றின் கரையிலேயே அமைந்துள்ளது. பவானி ஈஸ்வரர் திருக்கோயில். நுழைவாயிலைக் கடந்ததும் மகாமண்டபத்தில் இருபுறமும் பஞ்சமுக ஹேரம்ப விநாயகரும், நவகிரகங்களும் உள்ளன. ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சூரியன் நடுவே அமர்ந்திருக்க, பிற கிரகங்கள் சுற்றி நிற்க, ரதம் போல காட்சி தரும் சந்நிதி.

சுயம்புலிங்கத் திருமேனியாக பவானி ஈசுவரர் ஏழுந்தருளியுள்ளார். அன்னை பவானி சங்கரி என்று திருநாமங் கொண்டுயுள்ளார்.

நாள்தோறும் முன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் நடை திறந்திருக்கும்நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி:

செயல் அலுவலர், அருள்மிகு வேணுகோபாலசாமி திருக்கோயில்
சத்தியமங்கலம் நகர் மற்றும் வட்டம்.
தொலைபேசி : 04295-221899
மின்னஞ்சல் : sathyvenugopalaswamy@gmail.com

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் செயல்பட்டு வருகிறது.



அருள்மிகு கொங்கலம்மன் திருக்கோயில்

ஈரோடு



கொங்கு நாட்டுக் குல அம்மனாக, குலதெய்வமாகத் திகழ்பவளே கொங்கு குல அம்மன்– அந்தப் பெயரே மருவி கொங்கலம்மன் ஆயிற்று எனச் சான்றோர் கூறுவர். பொதுவாக **கொங்கலாயி** என்றே அழைக்கப்படுபவள் அவள்.

ஈரோடு நகரத்தின் நடுநாயகமாக மணிக்கூண்டுக்கு அருகில், கொங்கலம்மன் கோயில் வீதி என்ற பெயரோடு விளங்கும் சாலையில் **வடவாயிற்செல்வியாக** வடக்கு நோக்கி அமர்ந்துள்ளாள் கொங்கலம்மன்.

ஒரே கல்லினாலான தீபத்தம்பம் அமைப்பது, கொங்கு நாட்டின் சிறப்பு. அதுவும் திருக்கோயிலுக்கு வெளியே தான் இருக்கும். தீபத்தம்பம் நான்கு கால் மண்டபத்தில் அமைந்துள்ளது. அடிப்புறம் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயிலை நோக்கியுள்ள பகுதியில் எட்டுக்கரங்களுடன் கூடிய கொங்கலம்மனின் திருவுருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அலங்கார வாயிலும் மூன்று நிலை இராஜ கோபுரமும்:

அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய அலங்கார வாயிலும் மூன்று நிலை இராஜ கோபுரமும், கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன. உள்ளே சென்று பலிபீடம், கொடிமரம், சிம்மம் ஆகியவற்றைக் கடந்து செல் கையில் கல்தூண்களில் கல்வெட்டுக்கள் காணப்படுகிறது.

திருச்சுற்றில் இடப்புறம் தீர்த்தக்கிணறும், அரச மரமும் உள்ளன. அரச மரத்தின் கீழ் கற்பக விநாயகர் எழுந்தருளியுள்ளார். அவர் அருகே ஐந்து அரிய மரங்கள் காணப்படுகின்றன. ஈசான்ய மூலையில் நாகர்களுக்குத் தனி மண்டபம்.

விநாயகர் அருகில், பிரத்யங்கராதேவி சந்நிதியும், மேற்கு நோக்கியபடி, இரண்டு குதிரைகளும் உள்ளன. அவை ஈரோடு குயவர் குல மக்களின் காணிக்கை, பல நூறு ஆண்டுகள் பழமையானவை. அருகிலேயே மதுரைவீரன் சந்நிதி அமைந்துள்ளது.

கருப்பண்ணசாமி

கருப்பண்ணசாமி திருமாலின் அம்சமாகவும், பல ஆயுதங்களைக் கொண்டவராகவும் கருதப்படுகிறார். கருப்பராயர் என்றும் அழைக்கப்படும் சந்நிதி அடுத்துள்ளது.

வீரபத்திரர் :

சப்த கன்னிமார், பேச்சியம்மன், அகோர வீரபத்திரர், முனியப்பன் சந்நிதிகளும் இடம் பெற்றுள்ளன. மகா மண்டபத்தில் கொங்கலம்மன் உலாத்திருமேனி எட்டுக் கரங்களோடு உள்ளது. அதன் அருகிலேயே நான்கு கரங்களுடன் மாரியம்மன் செப்புத் திருமேனி ஒன்றும் உள்ளது. பழமையான இச்சிலை, தண்ணீர்த் தொட்டி கட்டிட,

லட்சுமி நாராயணர்

அமர்ந்த கோலத்தில் திருமாலை, கோயிலின் நடுவே தனிசந்நிதியில் தரிசிக்கலாம். திருமகளை மடியில் அமர்த்தியபடி அமர்ந்த கோலத்தில், லட்சுமிநாராயணராக எழுந்தருளியுள்ளார்.

கஸ்தூரிரங்கப்பெருமாள்

அரங்கநாதசுவாமி, பாம்பணையில் பள்ளிகொள்ளும் பெருமை மேலானதும் உறக்கம் கொள்வது போல் அல்லாமல், தன்னை நாடிவரும் பக்தர்களைப் பார்த்தபடி காட்சி தருவது தனிச்சிறப்பு, விசேஷநாட்களில்முத்தங்கி சேவையில் இவரைக் காணலாம்.

கல்யாண மாகலட்சுமித்தாயார்

முதல்திருச்சுற்றில் தனிவிமானத்துடன் கூடிய கல்யாண மகாலட்சுமித் தாயார் அமர்ந்த கோலததில் உள்ளார். இந்த சந்நிதிகளைத் தவிர யோக நரசிம்மர் சந்நிதி, லட்சுமி நரசிம்மர் சந்நிதி, ஹயக்ரீவர், தன்வந்திரி, சுதர்சனர் மற்றும் அடியார்கள் தேசிகர், ராமானுஜர் சந்நிதி ஆகியவையும் உள்ளன.

மோட்சப்பல்லி

காஞ்சிபுரத்தில், மண்டபத்தில் விதானத்தில் நாம்காண்பது போல, சத்தியமங்கலத்திலும் முதல் திருச்சுற்றல் மோட்சபல்லி உள்ளது. கெட்ட கனவுகள், எதிரிகளால் பயம், தோஷங்களும் நீங்கிட, மக்கள் இங்கு தீபமேற்றிவைத்து வாழிப்படுவதைக் காணலாம்.

புரட்டாசி சனிக்கிழமைகளில் சிறப்புத் திருமஞ்சனத்துடன் ஆராதனை, மார்கழியில் சொர்க்கவாசல் திறப்பு, மாதந்தோறும் ரோகினி, திருவோனம், சுவாதி நட்சத்திரங்களில் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத்திட்டத்தின்கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

நின்றும் இருந்தும் கிடந்தும் என் நெஞ்சுள்ளே என அன்று திருமழிசை ஆழ்வார் பாடினார். அதனையே பக்தர்கள் நித்தமும் ஒரே திருத்தலத்தில் காணும் வண்ணம், மாயவன் சத்தியமங்கலத்தில் வேணுகோபாலசுவாமி திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

நின்ற கோலத்தில் வேணு கோபால சுவாமியாகவும், இருந்த கோலத்தில் லட்சுமிநாராயணராகவும், கிடந்த கோலத்தில் கஸ்தூரி ரங்கநாதப் பெருமாளாகவும், சத்தியமங்கலத்தில், சேவை சாதிப்பது தனிச்சிறப்பு ஆகும்.

800 ஆண்டுகள் பழமையான திருக்கோயில், மூன்று நிலை இராஜகோபுரமும், மூன்று திருச்சுற்றுக்களையும் கொண்டுள்ளது. 80 அடி உயரங்கொண்ட கருடத்தம்பம், ஒரே கல்லினால் ஆனது. அதன்மேல் தாமரை வடிவம் கொண்ட பீடம், தீபமாக விளங்குகிறது. ஆண்டிற்கு **3** முறை கார்த்திகை மாதம், தீபம் ஏற்றுவர். 18 லிட்டர் எண்ணெய், கீழிருந்து உரிவழியே உருள் சக்கரத்தின் மூலம் ஏற்றி, மேலே உள்ள கொப்பரையில் ஊற்றி விளக்கேற்றுவர்.

திப்பு சுல்தானின் பணியின் இருந்த ரங்கய்யை என்பவரால் கட்டப்பட்ட 108 கால் மண்டபம், வேணுகோபாலசுவாமி திருக்கோயிலுக்கு வரலாற்று ஆதாரத்தோடு, கலையம்சம் கூடிய தனிச் சிறப்பையும் தருகிறது. அரிய சிற்பங்கள் கொண்ட 108 தூண்களை இங்கே காணலாம்.

வேணுகோபால சுவாமி

கருவறையின் வாசலில் இருபுறமும் ஜெய, விஜயர் துவார பாலகர்களாக உள்ளனர். கருவறையில், நின்ற கோலத்தில் குழலூதும் கண்ணன், வேணுகோபாலசுவாமி, ருக்குணி, சத்ய பாமாவுடன் காட்சி தருகிறார்.

குழலூதும் கண்ணனை, இங்கே நான்கு கரங்களுடன் சேவிக்கிறோம். மகாவிஷ்ணுவின் அம்சம் என்பதை விளக்க, சிற்பி மேற்கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியபடி வடித்துள்ளார். அர்த்த மண்டபத்தில் தசாவதாரச் சிற்பங்கள் உள்ளன.

நிலத்தைத் தோண்டியபோது கிடைத்தது.

கொங்கலம்மன் :

கருவறையில் கொடிய அரக்கனை அழித்து, கம்பீரமாக மலர்ந்த முகத்துடன், எட்டு கரங்களோடு காட்சி தருகிறாள். கொங்கலாயி. சூலம், உடுக்கை, கத்தி, வாள் ஆகியவை வலது கரங்களிலும், பாம்பு, வேதம், மணி, கபாலம் ஆகியவை இடது கரங்களிலும் ஏந்தியபடி அருள்பாலிக்கும் அற்புதக் காட்சி அது.

தவசியம்மன் :

கொங்கலம்மனை தரிசித்துவிட்டு, வெளியே வருகையில், நுழைவாயில் மேலே சுதை வடிவிலான **தவசியம்மன்** சிலையைக் காண்கிறோம். உலக நன்மைக்காக அன்னை தவமிருக்கும் அற்புதக் காட்சி அது.

நாள்தோறும் மூன்று கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. செவ்வாய்க்கிழமை தோறும், சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

தமிழ்மாதம் முதல் நாளன்று, காலை சிறப்பு அபிஷேகமும், அலங்கார பூஜையும் செய்து, பின் சிறிய தேரில் அன்னை உலாவருவது வழக்கம்.

தைப்பூசத் திருவிழா பத்துநாட்கள் கோலாகலமாக நடைபெறுகிறது. திருத்தேரோட்டத்தில் திரளாக மக்கள் பங்கேற்றுச் சிறப்பிப்பர்.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.00 மணி – பகல் 12.30 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.30 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்
அருள்மிகு கொங்கலம்மன் திருக்கோயில், ஈரோடு.
தொலைபேசி : 0424- 2214421
மின்னஞ்சல் : arulmigukongalamman@gmail.com



அருள்மிகு
பெரிய மாரியம்மன் திருக்கோயில்

ஈரோடு

ஈரோடு நகரில் கோட்டைப் பகுதியில், காவல் தெய்வமாக வடக்கு நோக்கி அமைந்துள்ளது பெரிய மாரியம்மன் திருக்கோயில்.




ஈரோடு நகரில் சின்னமாரியம்மன், நடுமாரியம்மன், வாய்க்கால் மாரியம்மன், கருங்கல்பாளையம் மாரியம்மன், சூரம்பட்டி வலசு மாரியம்மன் என பல திருக்கோயில்கள் இருப்பதால், '**பெரிய மாரியம்மன்**' என அழைக்கப்படுகிறது. 1300 ஆண்டுகளுக்கு முன்பு, கொங்கு



அருள்மிகு
வேணுகோபாலசுவாமி திருக்கோயில்

சத்தியமங்கலம்



பவானியிலிருந்து மேற்கில் 54 கி.மீ. தொலைவில் உள்ளது சத்தியமங்கலம். ஈரோட்டிலிருந்து வட மேற்கில் மைசூர் செல்லும் சாலையில் 63 கி.மீ.

பவானியாற்றின் வடகரையில் வான் உயர் மலைகளும், பச்சைப் பசேலென சூழ்ந்திருக்கும் வயல் வெளிகளிடையே அமைந்துள்ளது.

வாகன மண்டபமும், அன்னதானமண்டபமும் தனியே அமைக்கப்பட்டுள்ளது.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத்திட்டத்தின்கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

நாள்தோறும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

திருக்கோயில் திறத்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு கரிவரதராஜபெருமாள் திருக்கோயில்,
புஞ்சைபுளியம்பட்டி
தொலைபேசி : 04295 221899

நூதன கருடன்

கும்பகோணத்தை அடுத்துள்ள நாச்சியார் கோயிலில் உள்ளது. 'கல்கருடன்', பட்சிகளின் அரசன் ஆனதால் பட்சிராஜன், பெரிய திருவடி வைந்தேயன் (வினதையின் மகன்) புள்ளரசன் என்ற பெயர்களும் உண்டு.

நாச்சியார் கோயில் கல்கருடன், சாளக்கிராமக் கல்லினால் வடிக்கப்பட்டது. இவர் வருடம் இருமுறை எம்பெருமானைச் சுமந்து செல்லும் பேறுபெற்றவர். மார்கழித் திருவிழாவிலும், பங்குனிப் பெரும் திருவிழாவிலும் இவர் மீதே பெருமாள் பவனி வருவார்.

மண்டபத்தின் உள்ளே இருக்கும்போது நான்கு பேரும், படிகளுக்கு வரும்போது எட்டுபேரும், அதனையடுத்து பதினாறு பேரும் இவரை சுமக்கும் அதிசயம் இங்கு நிகழ்கிறது. அதாவது, வெளியே வரவர கருடனின் எடை கூடுகிறதாம்.

அண்மையில் கருடாழ்வாருக்குத் தங்கக் 'கவசம்' அணிவிக்கப்பட்டு உள்ளது.

சோழர்களால் கட்டப்பட்டது என்கிறது தலவரலாறு.

ஈரோடு நகர மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு வழிபடும் தெய்வமாகப் பெரிய மாரியம்மன் விளங்குகிறாள். அவள் வடக்கு திசை நோக்கி அமர்ந்திருப்பது தனிச் சிறப்பு ஆகும். தலமரம் வேப்பமரம் ஆகும்.

ஈரோடில் மூன்று மாரியம்மன் திருக்கோயில்களில் ஒரே காலத்தில் திருவிழா நடைபெறுவதும், அதற்குப் பெரிய மாரியம்மன் திருக்கோயிலில் துவங்கும் சிறப்பு வழிபாடுகளும் குறிப்பிடத்தக்கவை. பங்குனி மாதம் நடைபெறும் தேர்த்திருவிழா தான் அது. பெரிய மாரியம்மன், சின்ன மாரியம்மன், வாய்க்கால் மாரியம்மன் ஆகிய மூன்று கோயில்கள் தான் அவை.

பங்குனி மாதம் முதல் செவ்வாய்க்கிழமை 'பூச்சாட்டுடன்' துவங்கும் விழா களைகட்டும். பிறகு கம்பம் நடுதல், மாவிளக்கு, கரகம் எடுத்தல், பொங்கல், தேர்வலம் வருதல், இறுதியாகக் கம்பத்தை காரை வாய்க்காலில் விடுதல், இப்படித் தொடரும். இறுதி நாளன்று, மூன்று கோயில்களின் கம்பங்களும், நகரின் முக்கிய வீதிகள் வழியே வலம் வந்து, வாய்க்காலைச் சென்றடையும். வழிநெடுகிலும் தாய்மார்கள் பக்தியோடு கம்பங்களுக்கு மஞ்சள் நீர் வார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்.

அன்னதானம் :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு பெரியமாரியம்மன் திருக்கோயில்,ஈரோடு நகர்
தொலைபேசி : 0424 -2258670
மின்னஞ்சல் : periyamariamman88@gmail.com



அருள்மிகு
மகாவீர ஆஞ்சநேயர் திருக்கோயில்

ஈரோடு



ஈரோடு நகரின் மையப் பகுதியில், பேருந்து நிலையத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில், வ.உ.சி. பூங்காவின் மத்தியில் அமைந்த திருக்கோயில்.

இங்கு பண்டைய காலத்தில் 'பேச்சிப்பாறை' என்று வழங்கப்பட்ட பாறையில் ஆஞ்சநேயரின் உருவம் பதிக்கப்பட்டுள்ளது. சஞ்சீவி மலையை எடுத்துச் செல்லும் கோலத்தில் காட்சி தருகிறார் ஆஞ்சநேயர்.

செய்திகள் கூறுகின்றன.

காரைச் செடிகளிடையே, தோன்றிய திருமேனியாக 'கரிவரதராஜப்பெருமாள்' கருதப்படுகிறார். கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், மதுரையில் கள்ளழகரை தரிசித்துத் திரும்புகையில் 'வெள்ளவாடி' எனுமிடத்தில் சிலரைக் காண்பீர், அவர்களுடன் சென்று, எனக்கு தொண்டாற்றுவீர் என அசரீரி எழுந்ததாகவும் செவிவழிச் செய்திகள் நிலவுகின்றன. அந்த மக்களே, கரிவரதராஜப் பெருமாள் கருவறை, மண்டபம் எல்லாம் கட்டி முடித்தனர்.


திருக்கோயிலுக்கு வெளியே தீபத்தம்பம் கொண்ட நான்கு கால் மண்டபம் உள்ளது. பதினாறு கால் மண்டபத்தில், தசாவதாரச் சிற்பங்கள் உள்ளன. உத்திர வரிசையில் ராமாயணக் கதைகள், பூதகணங்கள், நடனமாதர் சிற்பங்கள், திருக்கோயிலின் பழமைக்கு சான்றுரைப்பவை ஆகும். கரிவரதராஜப்பெருமாளின் இருபுறமும் ஜெய, விஜயர் உள்ளனர். கருவறைக்கு மேலே இருதள விமானம் அழகூட்டுகிறது.

வாமபாக வழிபாடு

கரிவரதராஜப்பெருமாளுக்கு வழிபாடு செய்திடும் அர்ச்சகர் தனது இடது கரத்தினாலேயே, பூசனைகளைச் செய்கிறார். அதற்குப் பரம்பரையாக வந்த செவிவழிச் செய்தி சுவையானதாகும். ஒருமுறை, வலக்கை ஊனமுற்ற ஒருவர் பெருமாளை பூசை செய்ய நேர்ந்தது. இடது கரத்தினால் அரசனுக்குப் பிரசாதம் வழங்கிய போது, மன்னன் சினம் கொண்டு, தனது பட்டாக்கத்தியால் அவரது தலையை வெட்ட, அது இடதுபுறம் விழுந்து மறைந்தது. அது தெய்வ வாக்காகக் கருதியதால், அன்று முதல் இடது கரத்தினாலேயே வழிபாடுகள் செய்து நடைபெற்று வருகிறது.

தெற்குச்சுவற்றில் 12 ஆழ்வார்கள் திருமேனிகள் உள்ள மண்டபம் ஒன்று உள்ளது. அங்கு, குழலூதும் கண்ணன், வேணுகோபாலசுவாமி எழுந்தருளியுள்ளது. கண்ணனின் சிரம் மீது ஐந்து தலை அரவம் குடை பிடிக்கிறது.

வடக்குச் சுவற்றில் வைகுந்தவாசல் உள்ளது. அதனையடுத்து



அருள்மிகு கரிவரதராஜப்பெருமாள் திருக்கோயில்

புஞ்சைபுளியம்பட்டி



சத்தியமங்கலத்திலிருந்து கோவை செல்லும் சாலையில் 17 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. புஞ்சை புளியம்பட்டி. அங்கிருந்து திருப்பூர் செல்லும் சாலையில் 2 கி.மீ. தொலைவில் கோவில் புதூர் எனுமிடத்தில் அமைந்துள்ளது இத்திருக்கோயில்.

அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட திருக்கோயில் எனக் கல்வெட்டுச்

தமிழில் அர்ச்சனை செய்வது மகாவீர ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு தனிச் சிறப்பு தருவதாகும். இளநீர் வைத்து ஆஞ்சநேயரை வழிபடுவதும் குறிப்பிடத்தக்கது.

மார்கழி மாதம் '**ஆஞ்சநேயர் ஜெயந்தி**' திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.30 மணி – இரவு 8.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு மகாவீர ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில்,
ஈரோடு நகர். தொலைபேசி : 0424-225535
மின்னஞ்சல் : mahaveeraanjaneyartemple.erode@gmail.com

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

அஷ்ட மங்கலச் சின்னங்கள்

மங்கலச் சின்னங்களாக எட்டு பொருட்கள், சிவ பூஜா பத்தியில் குறிப்பிட்டுள்ளன. கண்ணாடி, பூர்ணகும்பம் ரிஷபம், இரட்டை சாமரம், ஸ்ரீ வத்சம், ஸ்வஸ்திகம், சங்கு, அடுக்கு தீபம் ஆகியவையே அவை.

வேள்விச் சாலையில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள மேடையைச் சுற்றி எட்டு அப்சரப் பெண்கள், இந்த மங்கலப் பொருட்களைத் தாங்கி நிற்பதாக நூல்கள் கூறுகின்றன. அந்த எட்டு பெண்கள் ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை, சுமுகி, சுந்தரி, காமுகி, காமவர்த்தினி ஆகியோர் ஆவர்.

சில சிவாலயங்களில், இந்த அஷ்ட மங்கலச் சின்னங்கள், கருவறையின் நிலைப்படியில் புடைப்பு சிற்பங்களாக அமைந்திருப்பதைக் காணலாம். கும்பகோணத்தையடுத்த திருந்துதேவன்குடி (நண்டாங்கோயில்) கற்கடேசுவரர் கோயிலிலும், தஞ்சை பெரிய கோயிலில் அணுக்கன் வாயிலிலும், இந்த அஷ்டமங்கலச் சிற்பங்களைக் காணலாம்.



அருள்மிகு வேலாயுதசாமி திருக்கோயில்

திண்டல்மலை

ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து கோவை செல்லும் சாலையில் 8 கி.மீ. தொலைவில் உள்ளது இந்தச் சின்னஞ் சிறிய மலை. திட்டு போல அமைந்துள்ளதால் 'திட்டு மலை'யாக மருவி விட்டது.



சுமார் 800 ஆண்டுகள் பழைமை வாய்ந்த திருத்தலம் திண்டல் மலை. வட்ட வடிவமாகத் திகழும் அழகிய மலை மீது வேலாயுத சுவாமி எழுந்தருளியுள்ளார். ஈரோடு நகரைப் பார்த்தபடி ஈசான்ய மூலையில் அமைந்துள்ளது இத்திருக்கோயில்.

கொண்டுள்ளனர்.

'திருவிக்ரமநாராயணர்' சிலைவடிவம், நான்கடி உயரம் கொண்ட கருங்கல்சிலைவடிவம், கலைநுணுக்கம்மிகுந்து, அழகியதாகஉள்ளது . இது போன்ற திருமமேனி வேறு எங்கும் இந்த மாவட்டத்தில்லை என்றே கூறலாம். உற்சவர் திருமனிகளும் கருவறையில் இடம் பெற்றுள்ளன.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி - பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு திருவிக்ரமநாராயணப்பெருமாள் திருக்கோயில்,
நம்பியூர்.
தொலைபேசி : 04285 225442

ஆலிலைக் கண்ணனாய் !

ஆலமரத்திலை மேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழும் உண்டான் அரங்கத் தரவணையான்
கோல மாமணியாரமும் முத்துத்தாமமும்,
முடிவில்லத தோரெழில் நீலமேனி
ஐயோ நிறைகொண்டது என் நெஞ்சினையே ! ...

- திருப்பாணாழ்வார்.



அருள்மிகு
திருவிக்ரமநாராயணப் பெருமாள் திருக்கோயில்
நம்பியூர்

தான்தோன்றீசுவரர் திருக்கோயிலைப் போல நம்பியூருக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது திருவிக்ரமநாராயணப் பெருமாள் திருக்கோயில்.

உலகளந்த பெருமாளையே, திரு விக்ரம நாராயணப் பெருமாள் என்று பெயர் சூட்டியுள்ளார்.

திருவிக்ரமநாராயணப் பெருமாள், சங்கு, சக்கரம், கதாயுதம் ஆகியவற்றைத் தாங்கிய வண்ணம் நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார். இருபுறமும் நிலமகளும், திருமகளும் இடம்

மூலவர் வேலாயுதசுவாமி வேலைப் பிடித்தபடி, இடது கரத்தை இடுப்பில் வைத்தபடி காட்சி தருகிறார். அரசமரத்தடி விநாயகர் மிகவும் சக்திவாய்ந்தவர். இடும்பன், தன்னாசிச் சித்தர் தனிச் சந்நிதி கொண்டுள்ளனர். தங்கக் கவசம் சார்த்தியுள்ளபடி, வேலாயுதசுவமியை தரிசனம் செய்தோர் பாக்கியம் பெற்றவர்களே!

ஆறுமுகங்கள் கொண்ட ஆறுமுகப் பெருமானும் திண்டல் மலையில் இடம் பெற்றுள்ளார். 300 செவ்வரளிப் பூக்களால் இவருக்கு அமாவாசை, சஷ்டி, கிருத்திகை நாட்களில் 'திரிசதை' வழிபாடும் நடைபெறுகிறது.

தங்க ரதம் :

எண்ணற்ற பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்றிடும் வகையில் அருள்மிகு வேலாயுதசுவாமிக்கு, 'தங்கரதம்' ஒன்றும் அமைத்து, 'திருஉலா' நடத்திட வகை செய்யப்பட்டுள்ளது.

அன்னதானம் :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்படுகிறது. நாள்தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை 5.00 மணி – பகல் 1.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 9.00 மணி

தொடர்பு முகவரி: செயல் அலுவலர்,
அருள்மிகு வேலாயுதசாமி திருக்கோயில்,
திண்டல், ஈரோடு வட்டம்.
தொலைபேசி : 0424 -243014
மின்னஞ்சல் : thindalmurugantemple@gmail.com



அருள்மிகு
புஷ்பவனேசுவரர் திருக்கோயில்

அவல் பூந்துறை



ஈரோடு அறச்சலூர் வழியே காங்கேயம் மற்றும் தாராபுரம் செல்லும் சாலையில் ஈரோட்டிலிருந்து 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இத்தேவார வைப்புத் தலம்.

"**பூந்துறை**" என்றே மக்கள் குறிப்பிடுவர். நகரப் பேருந்துகள் ஈரோட்டிலிருந்து செல் கின்றன. திருக்கோயில் வாசலிலேயே பேருந்து நிறுத்தம் உள்ளது.

அழகிய திருநாமங்களைச் சூட்டி மகிழ்ந்துள்ளனர். நம்பியூரில் அப்படி எழுந்தவர் தான் தான்தோன்றீசுவரர். என்றே திருநாமம் கொண்டுள்ளதும் மிகப்பொருத்தமே !

திருக்கோயிலில் இராஜகோபுரம் இல்லை. பெரிய திருச்சுற்றுடன் கூடிய கோயில், நுழைவாயிலின் வலப்புறம் விநாயகர் சந்நிதி உள்ளது. கம்பீரமான பெரிய சிலை வடிவம் பதினாறு. அழகிய தூண்கள் தாங்கி நிற்கும் மண்டபத்தினுள்ளே மூன்று கருவறைகள். சோமாஸ்கந்தராக முருகப்பெருமான் இடையில் இருக்க வலப்புறம் தான்தோன்றீசுவரர் சந்நிதியும் இடப்புறம் தபோபத்தினி தானே தோன்றியவர் தான்தோன்றீசுவரர் அம்மன் சந்நிதியும் அமைந்துள்ளது.

கருவறையை இருதள விமானம் அழகுபடுத்துகிறது பரிவார தேவதைகளோடு, நவகிரகங்கள், பைரவர் சந்நிதிகள் உள்ளன.

நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு தான்தோன்றீவரர் திருக்கோயில், நம்பியூர்.

தொலைபேசி : 04285 225442





அருள்மிகு தான்தோன்றீசுவரர் திருக்கோயில்

நம்பியூர்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து அவிநாசி செல்லும் பாதையில் தென்கிழக்கே 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது நம்பியூர்.

சாலையின் இடதுபுறம், ஊருக்குள் கிழக்கே தான்தோன்றீசுவரர் மற்றும் திருவிக்ரமநாராயணப்பெருமாள் திருக்கோயிலும் அமைந்துள்ளன.

பல்வேறு திருத்தலங்களில், கருவறையில் குடிக்கொண்டுள்ள சிவலிங்கத் திருமேனி, தானே முளைத்தெழுந்ததாக, உளிபடாத திருமேனியாக இருப்பதைக் காணலாம். அங்கெல்லாம் ஈசனுக்கு

கொங்கு நாட்டின் இலக்கியச் சிறப்பில் பூந்துறை நாடு மிக்க புகழ் பெற்றது. **'மேன்மை பெறு பூந்துறை'**, **பொன் மேவும் பூந்துறை'**, **'பொன்னுலகோர் புகழ்ந்திடும் பூந்துறை'** என்றெல்லாம் புலவர்கள் இத்தலத்தைப் புகழ்ந்துள்ளனர்.

கொங்கு மண்டலத்திற்கே உரிய கல்லினாலான தீபத் தம்பம் திருக்கோயிலுக்கு வெளியே உள்ளது. அழகிய ஐந்து நிலை இராஜகோபுரம், திருக்கோயிலுக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகும். 'பூந்துறைநாதர், 'புஷ்பவனேசுவரர்' என்று திருநாமங் கொண்டு, தானே முளைத்தெழுந்த திருமேனியாக ஈசுவரர் எழுந்தருளியுள்ளார்.

அன்னை **'பாகம்பிரியாள்'** என்ற திருநாமத்துடன் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறாள்.

உள்சுற்றில் நவக்கிரகங்கள், தான்தோன்றீசுவரர், அறம் வளர்த்த நாயகி, சூரியன், பைரவர் சந்நிதிகள் உள்ளன.

வன்னிமரத்து விநாயகர், நாகர்களுடன் காட்சி தருகிறார். அருகில் வலம்புரி விநாயகர் சந்நிதியும் உள்ளது. பரிவார தேவதைகளும், தேவ கோட்டங்களில் இடம் பெற்றுள்ளன. பசுமையான சூழலில், பக்திப் பரவசமூட்டுவது பூந்துறை திருக்கோயில். நாள்தோறும் இரண்டு கால வழிபாடுகள் நடைபெறுகிறன்றன.

அன்னதானம் :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள் தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி.
தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு புஷ்பவனேசுவரர் திருக்கோயில், அவல் பூந்துறை.
தொலைபேசி : 0424 -2225535.



அருள்மிகு
அறச்சாலம்மன் திருக்கோயில்

அறச்சலூர்



ஈரோடு-காங்கேயம் வழித் தடத்தில் முக்கியமான சந்திப்பாக விளங்குவது அறச்சலூர். அறச்சாலம்மனின்பெயரிலேயே அமைந்துள்ள சிற்றூர் ஈரோட்டிற்கு தெற்கே 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

"பொன் அறச்சாலை அம்மன்" என்று போற்றி வணங்கப்பட்ட அன்னை பராசக்தி நாளடைவில் மக்களால் '**அறச்சாலம்மன்**' என்று பிரபலமாகி விட்டாள்.

சிறந்தபிரார்த்தனைத்தலமாகஅறச்சலூர்

கருத்திருமராயப் பெருமாள் என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளார். அப்போது நிறுவப்பட்ட கருங்கல்லினால் ஆன தீபத்தம்பம், வயல் வெளியொன்றில் உள்ளதாம்.

கருவறையில் கரிவரதராஜப்பெருமாள் , நிலமகளும், திருமகளும் இருபுறமும் அமைந்த நிலையில் நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார்.

மூலவர் எதிரே கரங்கூப்பியபடி கருடாழ்வார் இடம் கொண்டுள்ளார். ஆஞ்சநேயர் சந்நிதி தனியே உள்ளது.

பொதுமக்கள் கட்டணம் செலுத்திப் பயன்படுத்தும் வகையில் திருக்கோயில் வளாகத்திலேயே திருமண மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

திருவோணம், வைகுந்த ஏகாதசி ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.


நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி - பகல் 12.,00 மணி
மாலை 4.00 மணி - இரவு 7.00மணி
தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு கரிவரதராஜபெருமாள் திருக்கோயில்,
நஞ்சைபுளியம்பட்டி.
தொலைபேசி : 04294 250223

மோகினிச்சாமி

திருவரங்கத்தில் நடைபெறும் திருவிழாக்களில் வைகண்ட ஏகாதசித் திருநாள் மிகவும் சிறப்பானதாகும். 22நாட்கள் நடைபெறும் திருவிழா



மிகவும் சிறப்பானதாகும். 22 நாட்கள் நடைபெறும் திருவிழா நாடெங்கிலுமுள்ள பக்தர்களைத் தன்பால் இழுக்கிறது. அந்தப் பெருவிழாவில் பகல் பத்து என்று அழைக்கப்படும் பத்து நாட்கள் மிகவும் சிறப்பானவை. பகல் பத்து நாட்களும் காலையில் பெருமாள் ஒய்யார நடை நடந்து சேவை சாதிப்பதைக் காணலாம். அவர் ஒவ்வொரு படியையும், ஆடி ஆடி படியேறும் அழகே அழகு!. அடுத்த நாள் பெருமாள் மோகினி அலங்காரத்தில் எழுந்தருளுவார்.



அருள்மிகு
கரிவரதராஜப்பெருமாள் திருக்கோயில்
நஞ்சைபுளியம்பட்டி

கோபிசெட்டிப்பாளையத்திலிருந்து சத்தியமங்கலம் செல்லும் சாலையில் 6கிமீ தொலைவில் அமைந்துள்ளது நஞ்சைபுளியம்பட்டி கிராமம். முற்காலத்தில் கோட்டைத் திட்டு என்றும் புளியம்பட்டி கரை என்றும் அழைக்கப்பட்டது. கொடிவேரி அணை கட்டிய பிறகு இடம் பெயர்ந்து நஞ்சை புளியம்பட்டி என்று ஆயிற்று.



மைசூர் அரசர்கள் ஆண்ட காலத்தில் தான் கொடிவேரி அணை கட்டப்பட்டதாகக் கூறுவர். அப்போதெல்லாம் பெருமாள்

விளங்குவதுடன், எண்ணற்ற குடும்பங்களின் குல விளக்காய்த் திகழ்கிறாள் அறச்சாலம்மன்.

வெள்ளி, செவ்வாய் நாட்களில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

அருகிலேயே 'இலங்கைநாதர்' என்ற திருநாமத்துடன் கூடிய சிவாலயம் உள்ளது. தலவரலாறு இராமாயணத்தோடு இணைந்ததாகும். நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.


திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு அறச்சாலம்மன் திருக்கோயில், அறச்சலூர்.
தொலைபேசி : 04294 250223

அன்னையின் கண்கள்


மதுரை – அங்கயற்கண்ணி– மீனாட்சி
மீன் போன்ற கண்கள் கொண்டவள்
கோடிக்கரை – மையார் தடங்கண்ணி
மை எழுதிய பெரிய கண்கள் உடையவள்
திருக்கற்குடி – அஞ்சனாட்சி – தடங்கண்ணி
மை தடவிய கண்களை உடையவள்
திருமயிலை – முண்டகக் கண்ணி
தாமரை மலர் போன்ற கண்களை உடையவள்
வடுகூர் – வடுவகிர்க் கண்ணம்மை
பிளந்த மாவடுவைப் போன்ற கண்கள் உடையவள்
நாகை – நீலாதாட்சியம்மை
நீலோத்பல மலர் போன்ற கண்கள் கொண்டவள்
திருவாரூர் – கமலாயதாட்சியம்மை
தாமரை போன்ற கண்கள் உடையவள்
காஞ்சிபுரம் – காமாட்சியம்மன்
விரும்பத்தக்க கண்கள் கொண்டவள்
வாரணாசி – விசாலாட்சியம்மன் – நீள்நெடுங்கண்ணி
அகன்ற கண்கள் கொண்டவள்



அருள்மிகு நட்டாற்றீசுவரர் திருக்கோயில்

காங்கேயம்பாளையம்

காவிரியாற்றின் நடுவில் பரிசலில் சென்று ஈசுவரனை தரிசனம் செய்யும் வகையில் அமைந்துள்ள பெருமை படைத்தது, காங்கேயம்பாளையம் அருகில் அமைந்துள்ள நட்டாற்றீசுவரர் திருக்கோயில். ஈரோட்டிலிருந்து கரூர் செல்லும் பாதையில் 12 கி.மீ. பயணம் செய்து சாவடிப்பாளையம் என்ற ஊரை அடையலாம். அங்கிருந்து கிழக்கே 2 கி.மீ. சென்றால் பரிசல் துறை. கோடை காலத்தில்



உருவானது காசிபாளையத்து விசுவநாத சுவாமி ஆலயம். ஊரியன் பெயர் காசிபாளையம் என்று அமைந்ததால், ஈசனும் விசுவநாதர் என்று திருநாமங்கொண்டுள்ளார்.

விசுவநாதசுவாமி, அழகிய திருமேனி வட்ட வடிவமான ஆவுடையார் மீது அமைந்துள்ளது. விசாலாட்சியம்மை சந்நிதி, இடப்புறம் அமைந்துள்ளது. விநாயகர், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணிய சுவாமி நடராசப் பெருமான், சிவகாமியம்மன் ஆகிய திருமேனிகளும் உள்ளன.

காசித் திருத்தலத்திற்கு செல்ல முடியாதவர்கள் காசிபாளையத்தின் அமைதி மிகுந்த சூழலில் விசுவநாதசுவாமியை இங்கேயே தரிசித்து இன்புறலாம். நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.,00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயில், காசிபாளையம்.
தொலைபேசி : 04294 250223



பெரிய கொழுக்கட்டை

திருச்சி மலைக்கோட்டையில் உள்ள உச்சிப் பிள்ளையாருக்கும், மாணிக்க விநாயகருக்கும், விநாயகர் சதுர்த்தியன்று அரிசியினால் ஆன இரண்டு பெரிய கொழுக்கட்டைகள் நைவேத்யம் செய்யப்படும். இவற்றின் எடை 150கிலோ.

இதே போல மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் உள்ள முக்குறுணிப் பிள்ளையாருக்கும், பெரிய கொழுக்கட்டை நைவேத்யம் செய்யப்படுகிறது.



அருள்மிகு
விசுவநாதசுவாமி திருக்கோயில்
காசிபாளையம்



கோபியிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் சாலையில், கோபிக்கு மேற்கே 8கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. காசி பாளையம். சாலையின் வடக்கே, கிழக்கு திசை நோக்கியபடி அமைந்துள்ளது விசுவநாத சுவாமி திருக்கோயில்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர்,

ஆற்றில் நீர் குறைவாக இருக்கும் போது, வண்டிகள் கோயில் இருக்கும் பாறை வரை செல்ல முடிகிறது.

அகத்தியர் வழிபட்டதால் அகத்தீசுவரர் என்று திருநாமங் கொண்ட எம்பெருமான், காவிரி ஆற்றின் மையப்பகுதியில் ஒரு பாறை மீது அமைந்தபடியால், '**நட்டாற்றீசுவரர்**' என்று காரணப் பெயரையும் கொண்டு விட்டார். காவிரி நதியின் உற்பத்தித் தலமான குடகு முதல், அது கடலோடு சங்கமிக்கும் பூம்புகார் வழியில், நடுமையாக இந்தத் திருக்கோயில் அமைந்துள்ளது. இதனைச் சுற்றிலும் நான்கு திசைகளிலும் கொக்கராயன் பேட்டை முதல் மொளசி வரையில் ஐந்து சிவாலயங்கள் அமைந்து 'பஞ்சலிங்கத் தலம்' என்ற புகழையும் கொண்டுள்ளது.

அகத்தியர் படைத்த திருமேனி :

வில்லவலன், வாதாபி என்ற இரு அரக்கர்களும், தேவர்களையும், முனிவர்களையும் வதைத்து வந்தனர். வாதாபி மாங்கனி உருக்கொண்டுள்ள அவனை உணவாகக் கொண்டதும், வில்லவலன் "**வாதாபி! வெளியே வா!**" என்றழைக்க, மாம்பழத்தைச் சாப்பிட்டவர் வயிற்றைக் கிழித்து வெளியே வருவான் வாதாபி. இவர்களின் தந்திரம் அறிந்த அகத்தியர் ஒன்று மறியாதவர் போல் மாங்கனி வடிவில் இருந்த வாதாபியைச் சாப்பிட்டதும், வில்லவலன் அவனை அழைக்கும் போது, "**வாதாபி என் வயிற்றில் ஜீரணமாகிடுக!**" என்று கூறி வயிற்றைத் தடவினார். வாதாபியால் வெளியே வரமுடியாத நிலையில் வில்லவலன் அகத்தியரை அழிக்க முயன்ற போது, தானும் அழிந்தான்.

கொலைப்பழிக்கு உள்ளான அகத்தியர் தனது தோஷம் நீங்க, காவிரி ஆற்றின் நடுவே, வெள்ளிமலை, பிரம்மபுரி என்று அழைக்கபடும் இடத்தில் மணலால் சிவலிங்கத் திருமேனியை வடித்து பூசனை செய்தார். பிற்காலத்தில், சிவலிங்கத்திருமேனி இருந்த இடத்தில் அழகிய கோவிலும் உருவானது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருக்கோயில் என்று கூறலாம்.



பரிசல் பரமசிவம் :

ஒருஆண்டில்ஏறக்குறையஒன்பதுமாதங்கள் (பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை நீங்கலாக) வரை காவிரியாற்றில் நீர் வரத்து அதிகமிருப்பதால் ஆற்றைக் கடந்து நட்டாற்றீசுவரரை தரிசித்திட பரிசலில் தான் செல்ல வேண்டும். அதனால் பரிசல் பரமசிவம் என்றும் பெயர் கொண்டு விட்டார்.

திருக்கோயில் அமைந்துள்ள குன்றும், ஓங்கார வடிவில் அமைந்துள்ளதால், பிரணவபுரம் என்றும் இத்தலம் அழைக்கப்படுகிறது.

ஒரே ஒரு நாள் அபிஷேகம் :

காவிரியாற்றின் நடுவில் அமைந்தது என்பதாலும், மணலால் அமைந்த சிவலிங்கத் திருமேனி என்பதாலும், ஆடிப் பெருக்கு அன்று மட்டும், அகத்தீசுவரர்க்கு காவிரி நீரால் திருமஞ்சனம் செய்விக்கப்படும். சித்திரை முதல் நாள், ஆடிப்பெருக்கு கார்த்திகை சோமவாரம் ஆகிய நாட்களில் 108 சங்காபிஷேகம் செய்விக்கப்படும்.

அகத்தியர் வழிபட்டபோது, சுவாமிக்குக் கம்பு தானியத்தையே படைத்ததால், சித்திரை முதல் நாளன்று, நைவேத்யமாக '**தயிர் கலந்த கம்பங்கூழ்**' படைக்கப்பட்டுப் பக்தர்களுக்கு பிரசாதமாக அளிக்கப்படுகிறது.

நாள்தோறும்மூன்றுகாலவழிபாடுகளைக்காணும்நட்டாற்றீசுவரர், நாகாபரணம் அணிந்து, பட்டாடையோடு கம்பீரமாகக் காட்சி தருகிறார்.

பரிசலில் நடராஜர் :

திருவாதிரைத் திருநாளன்று 'நடராசப் பெருமான் புறப்பாடு', வித்தியாசமான முறையில் நடைபெறுகிறது. ஒரு பரிசலிலேயே

ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடு நடைபெறும். காமிக ஆகமப்படி வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

மத்யபுரீசுவரர் திருக்கோயிலுக்கு மிக அருகாமையில் அலர் மேலு மங்கைத்தாயார் உடனுறை கல்யாண வெங்கட்ரமணப் பெருமாள் ஆலயமும் உள்ளது. இக்கோயிலில் நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது. நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.



திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு மத்தியபுரீசுவரர் திருக்கோயில்,
கூகலூர்.
தொலைபேசி : 04285 291022

திருமூலர் கூறும் வழிமுறை

ஒவ்வொரு மனிதனும் தினமும் சுவாசிக்கும் 21,600 சுவாசத்தைக் குறிக்க சிதம்பரம் திருக்கோயில் கனகசபையின் பொன் ஓடுகள் 21,600 ஆகும். சிதம்பரம் திருக்கோயில் திருமூலரின் கொள்கைப்படியே அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் அமைத்த கோயிலிலும், வள்ளலார் அமைத்த சத்திய ஞானசபையிலும், இதே குறிப்பை காண முடிகிறது. பிராணயாம மாத்திரை அளவுகளான 16 மாத்திரை – பூரக அளவும், 64 மாத்திரை – கும்பக அளவும், 34 மாத்திரை – ரேசக அளவும் தூண்கள், படிகள், சாளரங்கள் இவற்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்கோயில் அமைப்பு முறை பூசை முறையாகவும் திருமூலரின் திருமந்திரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இக்கோயிலில் கண்டறியப்பட்டுள்ளன. எனவே, அதற்கும் முன்பே இந்தக் கோயில் அமைந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

இராஜகோபுரம் எதுவும் இல்லையாயினும், நெடிய மதில் சுவர், உள்சுற்றுக்கு அரணாக அமைகிறது. நுழைவாயிலில் அரசமரத்தடி விநாயகர், மகாமண்டபத்தின் முன்னே கொடிமரம், பலிபீடம் அமைந்துள்ள நந்தியெம்பெருமானைக் கடந்து, மகாமண்டபத்தினுள் செல்கையில் அங்கே சுப்பிரமணியசுவாமி சந்நிதி உள்ளது. வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளியுள்ள கோலம்.



கருவறையில் வட்டவடிவமான ஆவுடையார் மீது, மேற்கு பார்த்த நிலையில், சிவலிங்கத் திருமேனியாக மத்திய புரீசுவரர் எழுந்தருளியுள்ளார். சிறிய திருமேனியாகினும், ஒளிர்விடும் பேரொளியாகத் திகழ்கிறது. நட்டூர்நாதர் கருவறைக்கு வலப்புறம் **'பச்சைநாயகி'** தனிச்சந்நிதி கொண்டுள்ளார். வடமொழியில் மரகதவல்லி என்பது அவளது திருநாமம். வலப்புறம் அமைந்த அம்மன் சந்நிதிகள் ஒரு சிலவே நாட்டில் உள்ளன. அவை சுதந்திர சக்தியாக திகழ்கின்றன. இடது புறம் விநாயகர் சந்நிதி உள்ளது.

திருச்சுற்றில் பரிவார தேவதைகளோடு அறுபத்து மூவர் மற்றும் நால்வர் சந்நிதிகள் உள்ளன. மாதாந்திர சிவராத்திரி, பிரதோஷம்

ஆடவல்லான் எழுந்தருளி, காவிரியாற்றிலேயே திருக்கோயிலைச் சுற்றி வருவார். மேளதாள வாத்தியங்கள், பரிவாரங்களும் பரிசலிலேயே முன் செல்லும். இதே போல நவராத்திரி திருநாளில் விஜய தசமியன்று 'நல்லநாயகி அம்மன்' பரிசலிலேயே எழுந்தருளுவாள்.

நல்ல நாயகி :

அகத்தீசுவரரோடு இணைந்த அன்னபூரணியே, நட்டாற்றீசுவரருக்கு நல்ல நாயகியாக அமைந்துள்ளாள். ஆடிப் பூரத்தன்று அம்மனுக்கும் 108 சங்காபிஷேகம் நடைபெறுகிறது. நான்கு கரங்களோடு நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள் அன்னை. ஈசனுக்கு வலப்புறம் இடங்கொண்டுள்ளாள்.

பரிவார தெய்வங்களாக ராஜகணபதி, தெற்கு நோக்கியபடி முருகப் பெருமான், நால்வர், ஆலமரர் செல்வர், பைரவர், துர்க்கை மற்றும் சண்டிகேசுவரர் சந்நிதிகளும் உள்ளன. ஒவ்வொரு அமாவாசை நாளிலும் திருக்கோயில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

சீரிய திருப்பணி :

ஆண்டு முழுவதும் நட்டாற்றீசுவரரை மக்கள் எளிதில் தரிசித்திட வகை செய்யும் முன்னோடித் திட்டம் ஒன்றை, இந்து சமய அறநிலையத் துறை வரைந்துள்ளது.

அந்தப் பணிகள் விரைவில் முடிந்த பின், பரிசலில் ஆற்றைக் கடக்காமல் , நேராக திருக்கோயில் வரையில் வாகனங்கள் சென்று வர உதவிடும். நட்டாற்றீசுவரர் திருக்கோயில் சுற்றுலாத் தலமாகவும் மாறிவிடும். நாள் தோறும் மூன்று காலபூசை நடைபெறுகிறது. நடை சாத்தப்படும் வரையில் சிவாச்சாரியார் அங்கேயே தங்கியிருப்பது தனிச்சிறப்பு ஆகும்.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 6.00 மணி – மாலை 6.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு நட்டாற்றீசுவரர் திருக்கோயில், காங்கேயம்பாளையம்.

தொலைபேசி : 0424 - 2430114



அருள்மிகு
வரகிரீசுவரர் திருக்கோயில்

மொடக்குறிச்சி



ஈரோட்டுக்குத் தெற்கே முத்தூர், வெள்ளக்கோயில் செல்லும் சாலையில் 13 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது மொடக்குறிச்சி.

பிரதான சாலையிலேயே வரகிரீசுவரர் திருக்கோயில் அமைந்துள்ளது. கருவறை சுற்றிலும் கற்றளியாக அமைந்துள்ளதால், 600 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக அறியப்படுகிறது.

வரகிரீசுவரர் திருக்கோயில் மேற்குதிசை நோக்கிய நிலையில் அமைந்துள்ளதால்,



அருள்மிகு
மத்தியபுரீசுவரர் திருக்கோயில்

கூகலூர்

கோபிசெட்டிப்பாளையத்திலிருந்து அந்தியூர் செல்லும் பாதையில் வடகிழக்கே சுமார் 5கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

'நட்டூராண்ட நாயகர்' என்று அழகுத் தமிழில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இந்தக் கோயிலில் கண்டறியப்பட்டுள்ளன.

சிவாலயங்கள் மேற்குதிசை நோக்கி அமைக்கப்படுவது, ஒருசில குறிப்பிட்ட காரணங்களுக்காகவே. அவை பெரும்பாலும் பரிகாரத் தலங்களாக கருதப்படுகின்றன. கி.பி.1060ல் சுந்தர சோழ பாண்டிய மன்னன், நிலங்கள் மானியமாகக் கொடுத்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்கள்

ஐந்து நிலை கொண்ட இராஜகோபுரம், அதன் மத்தியில் ஒளிர்விடும் நெடிய **'சக்திவேல்'** கண்ணைக் கவருவதாக அமைந்துள்ளது. திருக்கோயில் எதிரே, கொங்கு நாட்டிற்கே உரித்தான தீபத்தம்பம் கொண்ட 4கால் மண்டபம். மண்டபத்தின் நான்கு மூலைகளிலும், மயில்கள் சுதை வடிவில் அமைந்துள்ளன.

தீபத்தம்பத்தையடுத்து, **'மயில்',** பீடத்தில் அமர்ந்தபடி உள்ளது. மேற்கு திசை நோக்கிய திருக்கோயில். திருக்கோயிலின் உள்ளே அழகிய திருச்சுற்றும் உள்ளது. கருவறையில் **'வள்ளி தெய்வானையுடன்'** ஆறுமுகப் பெருமான் காட்சி தருகிறாள்.

உள்சுற்றில், தட்சிணாமூர்த்தி, குக சண்டிகேசுவரர், நல்ல பிள்ளையார், இடும்பன், துர்க்கை, நவக்கிரகங்ள் தனித்தனி சந்நிதியாக இடங்கொண்டுள்ளனர்.



வெள்ளிக்கிழமைகளில் முருகனிடம் **'பூவாக்கு'** கேட்டிட மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடுவர். சஷ்டி, கிருத்திகை நாட்களிலும், மக்கள் திரளாக வந்து தரிசனம் செய்வர். நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 1.,00 மணி

மாலை 4.மணி – இரவு 7.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பச்சைமலை.

தொலைபேசி : 04285-222125.

பரிகாரத் தலமாக விளங்குகிறது. நுழைவாசல் அருகே கருங்கல் தீபத்தம்பம் உள்ளது. தலமரம் வன்னி மரம்.

16 தூண்கள் கொண்ட மகா மண்டபமும், அதனையொட்டி அமைந்த அர்த்த மண்டபமும், கருவறைக்கு மேலும் சிறப்பூட்டுகின்றன. கருவறையின் முன்னே இருபுறமும் திண்டி, முண்டி என்றழைக்கப்படும் துவாரபாலகர் திருமேனிகள்.

வரகிரிநாதர் சுயம்புலிங்கத் திருமேனியாக சதுரபீடத்தில் எழுந்தருளியுள்ளார் பெரியபாணம். கம்பீரமான தோற்றம், முகதீபம், அணையா விளக்கும் ஒளிவீசிட ஈர்க்கும் தரிசனம்.

வடிவுள்ள மங்கை எனத் திருநாமங்கொண்டு தனிச் சந்நிதி கொண்டுள்ளாள் அன்னை. நான்கு கரங்களுடன் நின்ற கோலம். அங்குசமும், மழுவும் மேற்கரங்களில் தாங்கியபடி அபய வரத நிலையில் அருள்பாலிக்கிறாள். எடுப்பான தோற்றம். விநாயகரும், முருகப் பெருமானும், தனித்தனி சந்நிதிகளில் உள்ளனர்.

வெளிச்சுற்றில் பஞ்சபூதலிங்கங்கள், சகஸ்ரலிங்கம், அறுபத்து மூன்று நாயன்மார்கள், ஜேஷ்டாதேவி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். **ஜேஷ்டாதேவி** திருக்கோலம் அமைந்த கோயில்கள், மிகவும் பழமை யானவையாக கருதப்படுகின்றது. நாள்தோறும் மூன்றுகால வழிபாடு நடைபெறுகின்றது.

வரதராஜப் பெருமாள் திருக்கோயில் :

அருள்மிகு வரகிரீசுவரர் திருக்கோயிலையொட்டியே அமைந்துள்ளது. மூலவர் கருவறை முன்பு 16 கால் மகா மண்டபமும், 4கால் அர்த்த மண்டபமும் அமைந்துள்ளன.

வரதராஜப் பெருமாள் நிலமகள், திருமகளோடு சங்கு, சக்கரம் ஏந்தியபடி நின்ற கோலத்தில் அபய வரதக் கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

அர்த்த மண்டபத்தில் ஆஞ்சநேயர் சந்நிதி அமைந்துள்ளது.

வைணவ அடியார்கள், ஆழ்வார்கள் திருமேனிகள் பலவும் மண்படத்தில் இடம் பெற்றுள்ளன. நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகின்றது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி - பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு வரகிரீசுவரர் திருக்கோயில், மொடக்குறிச்சி.
தொலைபேசி : 0424 - 221421

சொக்கப்பனை

திருக்கார்த்திகையன்று, பனைமரத்தை நடுவில் நட்டு, அதனைச் சுற்றிலும் ஓலையைக் கட்டுவர். '**சிவபார்வதி**' உலாத் திருமேனிகளை சப்பரத்தில் அமர்த்தி, அந்த இடத்திற்கு கொண்டு வருவர். பூசாரி, சுவாமிக்கு தீபாராதனை காட்டி, அந்தக் கற்பூர நெருப்பை ஓலையில் பற்றவைப்பார். தீ கொழுந்து விட்டு எரியும். மக்களும் தங்கள் கையில் கொண்டு வரும் ஓலைகளை அந்த நெருப்பில் போட்டு விட்டு, இறைவனை ஒளிவடிவாகக் கண்டு தரிசித்து மகிழ்வர்.

பல திருக்கோயில்களில் கார்த்திகையன்று சொக்கப்பனை கொளுத்தப்படுகிறது.

திருமால் வாமனாவதாரம் எடுத்து மாவலியைக் கொன்றது, கார்த்திகை பௌர்ணமி நாள் என்பதால், அதன் அடையாளமாக வைணவ ஆலயங்களிலும் '**சொக்கப்பனை**' கொளுத்துவர்.



அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

பச்சைமலை



கோபிசெட்டிபாளையத்திற்கு மிக அருகில், 3 கி.மீ. தொலைவில் பவானி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ளது பச்சை மலை. மலையை ஏறிட படிகளும் உள்ளன.

350அடி உயரத்தில் அழகுற அமைந்திருக்கும் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வாகனங்கள் செல்ல, சாலை வசதியும் உள்ளன.

மீண்டும் அதே குரல் ஒலித்தது. குழந்தைகளே! நான் இனி இங்கேயே இருக்கப் போகிறேன். **'கல்'** இருக்குமிடத்திலேயே அமர்ந்திடுவேன். என்னைக் காண வருவோர் அனைவரையும் காத்திடுவேன்! எனக்கு ஒரு கோயில் எழுப்பிடுங்கள் ! என்றது.

அதே நாளிரவு ஊர்ப்பெரியோர்கள் சிலரது கனவிலும் அன்னை தோன்றி மறைந்ததால் இந்த அற்புத நிகழ்ச்சியே 1917ல் அங்கு மாரியம்மன் கோயில் உருவாகக் காரணமாகியது. குழந்தைகளுடன் அம்மன் முதலில் உரையாடியதால், குழந்தை வடிவிலேயே சிலை அமைத்து, கல்லின் அருகில் பிரதிஷ்டை செய்தனர்.

நிறம் மாறாத தேங்காய்கள்

40 ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கோயிலுக்கு வருகை தந்த மடாபதிகள் அன்னையை வழிபாடு நடத்தியபோது அங்கு வைக்கப்பட்ட தேங்காய்கள் இரண்டையும் கருவறையிலேயே வைத்துச் செல்லுமாறு ஆணை பிறந்தது. அந்த மட்டைத் தேங்காய்கள் இன்றும் நிறம் மாறாமல் இன்றும் அப்படியே வைக்கப்பட்டுள்ளதுடன், செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் பூசனையும் பெறுகிறன்றன.

திருமண நிச்சயத்தார்த்தத்திற்கு உப்பு, மஞ்சள் மாற்றிக் கொள்ளும் பழக்கம் கொங்கு நாட்டில் எங்கும் பார்க்க முடியும். கோபி வட்டாரத்தில் உப்பு, மஞ்சள் மாற்றிக் கொள்ள, மக்கள் தேடிச் செல்வது சாரதா மாரியம்மன் கோயிலையே !

சித்திரை மாதம், அக்னி நட்சத்திர நாட்களில் 17 நாட்கள் பூச்சாட்டு விழா நடைபெறுகிறது. கோபியில் சாரதா மாரியம்மன் திருக்கோயில் தவிர, விசுவேசுவரர் திருக்கோயிலும், அதற்குத் தெற்கே வரதராஜப் பெருமாள் திருக்கோவிலும் உள்ளன. நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 1.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சாரதா மாரியம்மன் திருக்கோயில், கோபி.

தொலைபேசி : 04285 – 225442.

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் செயல்பட்டு வருகிறது.



அருள்மிகு
பாம்பலங்கார சுவாமி திருக்கோயில்
புஞ்சை கொளாநல்லி

ஈரோடு–கொடுமுடி நெடுஞ்சாலையில் கொடுமுடிக்கு வடக்கே எட்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது புஞ்சை கொளாநல்லி, காவிரியாற்றின் கரையில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

பழம் பாடல்கள் இத்திருத்தலத்தை **'குழா நிலை'** என்று குறிப்பிடுகின்றன. பாம்பு சுற்றிய வடிவமாக ஈசன் திருமேனி அமையப் பெற்றுள்ளதால் மக்கள் அழகுத் தமிழில் **'பாம்பலங்கார சுவாமி'** என்றே அழைக்கின்றனர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவே கருதப்படும் இத்திருக்கோவிலுக்கு, மைசூர் மன்னர் 114.58 ஏக்கர் நிலத்தை தானமாக அளித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். திருக்கோயிலின்

மதில் சுவருக்கும், எதிரில் உள்ள கருங்கல் தீபத்தம்பத்திற்கும் இடையே கரைபுரண்டோடும் காளிங்கராயன் வாய்க்கால் உள்ளது. எனவே பொதுமக்கள் கோயிலின் வடக்கு வாசலையை நுழைவாயிலாகப் பயன்படுத்துகின்றனர்.

கருவறையின் முன் மண்டபத்தில் இரண்டு நந்திகள் இடம் பெற்றுள்ளது. மகா மண்டபத்தில் நால்வர் மற்றும் உற்சவர் திருமேனிகள் உள்ளன. கருவறையில் தானே முனளத்தெழுந்து திருமேனியராக '**பாம்பலங்கார சுவாமி**' நாகேசுவரராக எழுந்தருளியுள்ளார். கம்பீரமான உயர்ந்த திருமேனி, பாம்பு சுற்றிய தடமும் தெளிவாகத் தெரிகிறது.

'**பங்கயற்செல்வி**' என்ற திருநாமத்துடன் அன்னை நின்ற கோலத்தில் தனிச் சந்நிதி கொண்டுள்ளாள், கருணையே வடிவானவள். சோமாஸ்கந்தராக முருகப் பெருமான் இடம் கொண்டுள்ளார். முருகப் பெருமானின் கருவறை விமானம் சற்று உயரமாக அமைந்துள்ளது.

பரிவார தேவதைகளோடு, '**அகோர வீரபத்திரர்**' சந்நிதி அமையப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

முருகன் சந்நிதியையொட்டிய மண்டபத்தின் சுற்றுச் சுவர்களில் கல்வெட்டுக்கள் சில உள்ளன. கருவறை உட்புறமும் சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. புடைப்புச் சிற்பங்கள் திருக்கோயிலின் பழமைக்கு சான்று கூறுகின்றன. '**சர்ப்பதோஷ**' பரிகாரத்தலமாகக் கருதப்படுகிறது. நாள்தோறும் இரண்டு கால வழிபாடுகள் நடைபெறுகின்றது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :
காலை 7.00 மணி - பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு பாம்பலங்கார சுவாமி திருக்கோயில்,
புஞ்சை கொளாநல்லி.
தொலைபேசி : 04204 - 222375

என்றழைக்கப் பட்ட கோயில், 40 ஆண்டுகளுக்கு முன்னர் '**சாரதா மாரியம்மன்**' என்ற புதிய பெயரால் அழைக்கப்படலாயிற்று !

அந்த வரலாறு மெய்சிலிர்க்க வைக்கும் வரலாறு. சிருங்கேரி சாரதா மடத்தின் 33வது பீடாதிபதி ஸ்ரீலஷ்ரீசந்திரசேகர பாரதி சுவாமிகள் இத்திருக்கோவிலுக்கு வருகை தர விரும்பினார். சைவ வழிபாடு மட்டுமே இனி செய்கிறோம் என்று வாக்குக் கொடுத்தால் வருகிறேன் எனத் தெரிவித்ததற்கு, ஊர்ப் பெரியவர்கள் சம்மதம் தெரிவிக்க, அவர் திருக்கோயிலுக்கு வந்தார்.

மாரியம்மனுக்குத் தேங்காய் வைத்து பூசை செய்தார். தேங்காயை அப்படியே வைத்து விடு என அம்மன் வாக்குத் தர சுவாமிகள் தேங்காயை வைத்துச் சென்றார். அப்போதிலிருந்து இத்திருக்கோயில் சாரதா மாரியம்மன் திருக்கோயில் என்று அழைக்கப்படலாயிற்று.


சுவாமிகள் இறைவன் திருவடிக்குச் சென்ற பின்பு 34வது பீடாதிபதியாக அருளாட்சி செலுத்த வந்த ஸ்ரீலஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்தரும் அவரைப் போலவே தேங்காய் வைத்து வழிபாடு செய்து கொடுத்துள்ளார். இவ்விரண்டு தேங்காய்களும் நிறம் மாறாமல் இருக்கின்றன. செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் மற்றும் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் இத்தேங்காய்களுக்கு லலிதா சகஸ்ரநாம வழிபாடும் மெதுவடை, பருப்புப் பாயாசம் நிவேதனமும் செய்யப்பட்டு சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

விவசாயிகளின் கால்நடைகளை மேய்த்திட சின்னஞ்சிறுவர் கூடிடும் இடம் அது. ஒருநாள் அங்கிருந்த வேப்பமரங்களிடையே பளிச்சென்று ஒன்று பேரொளியைக் கண்ட, அச்சிறுவர்கள் அஞ்சி ஓடத்துவங்கினர். அப்போது நில்லுங்கள் குழந்தைகளே! நானும் வருகிறேன்! உங்களோடு விளையாட! என்று ஒரு குரல் ஒலித்தது. அப்போது வீசிய பெருங்காற்றில் அங்கிருந்த வேப்பமரத்தின் இலைகள் உதிர்ந்து, ஒரு சிறு கல்லைச் சுற்றிலும் வட்டமாக விழுந்தன. அது கண்டு அதிசயித்த சிறுவர்கள் அந்தக் கல்லைத் தூக்க முயற்சித்து, தோற்றுப் போயினர். அப்போது



அருள்மிகு
சாரதா மாரியம்மன் திருக்கோயில்
கோபி

கோபிசெட்டிபாளையம், ஈரோட்டிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது இத்திருக்கோயில்.



பவானி நதிக்கரையில் **'வீரபாண்டி'** என்று அழைக்கப்பட்ட கிராமமே தற்போது **'கோபிசெட்டிபாளையம்'** என்ற பெயரில் விளங்குகிறது.

நகரின் மையப்பகுதியில் அமைந் திருந்ததால் **'டவுன் மாரியம்மன்'**



அருள்மிகு
வரதராஜப் பெருமாள் திருக்கோயில்
வெங்கம்பூர்

கொடுமுடிக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் அறச்சலூர் சாலை சந்திப்பில் அமைந்துள்ளது இத்திருத்தலம்.



காவிரியாற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ள திருக்கோயில்; வெண்தாமரை மலர்கள் நிறம்பிய குளங்கள் மிகுந்து காணப்பட்டதால், முன்பு **'வெண்ஆம்பலூர்'** எனப் பெயர் கொண்டிருந்ததாகக் கூறுவர்.

கி.பி. 1183 முதல் 1249 வரையில் ஆட்சி

செலுத்திய வீரராஜேந்திர சோழன், தனது தந்தையின் நினைவாக சோளீசுவரர் கோயிலையும், தனது துணைவியின் வேண்டுதலுக்கு இணங்க வரதராஜப் பெருமாள் கோயிலையும் கட்டியதாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

அழகிய இராஜகோபுரம், காண்போர் மனதைக் கொள்ளை கொள்கிறது. சோளீசுவரர் திருக்கோயிலும் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலும் ஒரே மதிற்சுவர் கொண்ட வளாகத்தில் அமைந்திருப்பது சைவ, வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

வடபுறம் சோளீசுவரர் மற்றும் சிவகாமியம்மன் சந்நிதிகள் அமைந்துள்ளன. பரிவார தேவதைகளும் உரிய இடத்தில் இடம் பெற்றுள்ளன. கருவறைச் சுவரில் கல்வெட்டுக்கள் புடைப்புச் சிற்பங்கள், திருக்கோயிலின் பழமைக்குச் சான்று.

தென்புறம் அமைந்திருப்பது வரதராஜப்பெருமாள் சந்நிதி ஆகும். சீதேவி, பூதேவியுடன் நின்ற கோலத்தில் வரதராஜப் பெருமாள் சேவை சாதிக்கிறார். ஆஞ்சநேயருக்கும் தனிச் சந்நிதி அமைந்துள்ளது.

வெங்கம்பூரில் இந்த இரு கோயில்கள் தவிர பொங்காளியம்மன் கோயில், அங்காளம்மன் கோயில், மாரியம்மன் கோயில் ஆகியவை உள்ளன.

பொங்காளியம்மன் :

பொங்காளியம்மன் திருக்கோயில், பொன்முத்துசாமி, கருப்பண்ண சாமிஆகிய காவல் தெய்வங்களும், அவற்றிற்கு சூலமும், பட்டாக் கத்தியும் கூடிய படைக்கலங்களும் உள்ளன.

இரு குதிரைகளோடு, முனியப்பன் சாமியும், '**சப்த கன்னியர்**' சிலைகளும் உள்ளன.

அங்காளம்மன் :

அங்காளம்மன் திருக்கோயில் தூண்களில் சிற்பங்கள் அழகுற அமைந்துள்ளன. அர்த்தமண்டபத்தில் '**அகோர வீரபத்திரர்**' இடம் பெற்றுள்ளார்.

பெரிய திருவடியைக் காணலாம் அழகிய சுதைச் சிற்பங்கள்.

இராஜகோபுரத்தின் முகப்பில் கண்ணபிரான் சாரதியாக அமர்ந்த கோலத்தில் காண்டீபனுக்கும் கீதோபதேசம் செய்திடும் காட்சி அற்புதமாக வண்ண சுதைச் சிற்பமாகக் காண்கிறோம். உபதேசம் செய்தபவர் உயர்ந்த நிலையிலும் அதனைப் பெறுவார். அதற்குக் கீழே சற்றுத் தாழ்ந்த நிலையில் அமைந்த போது, அனுமனின் கொடியுடன் கூடிய அழகு ரதமும், மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.



கருவறையில், ஸ்ரீதேவி, பூதேவியுடன் ஆதிநாராயணப் பெருமாள் நின்ற கோலத்தில் சேவை சாதிக்கிறார். உற்சவர் திருமேனிகள் கருவறைக்கு வடபுறம், தென்திசை நோக்கியபடி உள்ளது. யோக ஆஞ்சநேயரும், வெள்ளி கருடனும், தரிசிக்க வேண்டியவை ஆகும்.

பாஞ்சராத்திர ஆகமப்படி, நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது. வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு பகல்பத்து, இராப்பத்து உற்சவங்களும் நடைபெறுகின்றது. பௌர்ணமி நாட்களில் சிறப்புத் திருமஞ்சனமும், ஆராதனைகளும் உண்டு.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்


காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு ஆதிநாராயண பெருமாள் கோவில்,
பாரியூர்.
தொலைபேசி : 04285-291022.



அருள்மிகு
ஆதிநாராயணப் பெருமாள் திருக்கோயில்
பாரியூர்



கோபி-அத்தாணி செல்லும் பாதையில் பாரியூரை நெருங்கும் போதே, கருடத்தம்பத்தோடு கூடிய ஆதிநாராயணப் பெருமாள் கோயிலைக் காணமுடிகிறது.

மூன்று நிலைகள் கொண்ட அழகிய இராஜ கோபுரத்தில் கவின்மிகு சிற்பங்கள் உள்ளன. திருக்கோயிலின் முன்னே உள்ள கருடத்தம்பத்தின் மண்டபத்தில் நான்கு முனைகளிலும் அமிர்த கலசத்தை ஏந்தியபடி

சித்திரை மாதம், மாரியம்மன் கோயிலில் திருவிழாவும் அக்கினி சட்டி ஏந்துதலும், பொங்கல் வைத்தலும் சிறப்பு ஆகும்.

அன்னதானம் :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு வரதராஜப்பெருமாள் வகையறா திருக்கோயில்,
வெங்கம்பூர், ஈரோடு வட்டம்.
தொலைபேசி : 04204 -222475
மின்னஞ்சல் : Venkampurkovil@rediffmail.com

செங்கண்மால்

திருமால் வராக அவதாரம் எடுத்த கோலத்தில் தேவியுடன் எழுந்தருளியுள்ள திவ்விய தேசம் '**திருவிடந்தை**' ஆகும். சென்னை கிழக்கு கடற்கரை சாலையில், கோவளம் அருகே உள்ளது. இதற்கு நேர் மேற்கு திசையில், திருமால் ஒரு சிவலிங்கத்தை அமைத்து வழிபட்டார் என்று கூறப்படுகிறது. அந்தத் தலம் செங்கண்மால் என்றழைக்கைப்படுவதுடன், அந்த ஈசுவரர் '**செங்கண்மாலீசுவரர்**' என்றும் அழைக்கப்படுகிறார்.

திரு அண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 'செங்கம்', முன்பு செங்கண்மால் என்றே அழைக்கப்பட்டு வந்தது.



அருள்மிகு பொன்காளியம்மன் திருக்கோயில்

தலையநல்லூர்

ஈரோடு-தாராபுரம் சாலையில் 30 கி.மீ. தொலைவில் அமைந்த **'விளக்கேத்தி'** எனும் ஊருக்கு தென்கிழக்கில் 5 கி.மீ. தொலைவில் உள்ள சிவகிரி அருகில் அமைந்துள்ளது தலையநல்லூர்.

'ஆயிரம் தீவட்டி அம்மன்' என்ற சிறப்புப் பெயர் கொண்டது. பங்குனித் திருவிழாவின் போது, தேர் வலம் வரும் போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீப்பந்தங்களை ஏந்தி, முன்னே செல்லும் காட்சி மெய் சிலிர்க்க வைப்பதாகும்.

கரியகாளியம்மன், கொங்காலம்மன், குலவிளக்கம்மன், குழலியம்மன், கோனியம்மன், சின்னம்மன் என்று பல சகோதர தெய்வங்களை உடையவள் பொன்காளியம்மன். அரண்மனை போல அமைந்த திருக்கோயிலுக்கு நான்கு புறமும் நுழைவாயில்

திசை நோக்கிய கோயில்.

அமரபணீசுவரர் சௌந்தரநாயகி அருள்பாலிக்கும் திருக்கோயில். திருச்சுற்றில்பரிவாரத்தேவதைகள்அனைத்தும்இடம்கொண்டுள்ளனர். பளிங்கினால் செய்யப்பட்ட **'பஞ்சமுக விநாயகரையும்'**, உள்ளே நுழையும் போது காணலாம். நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு அமரபணீசுவரர் திருக்கோயில், பாரியூர்.

தொலைபேசி : 04285-291022.



சப்பாணி

தூநிலா முற்றத்தே போந்து விளையாட
வான்நிலா அம்புலி சந்திரா! வா! என்று
நீ நிலா நின்புகழா நின்ற ஆயர்தம்
கோ நிலாவக் கொட்டாய் சப்பாணி
குடந்தைக் கிடந்தானே ! சப்பாணி – பெரியாழ்வார்.



அருள்மிகு அமரபணீசுவரர் திருக்கோயில்

பாரியூர்



பாரியூர் கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயிலுக்குச் செல்லும் பாதையிலேயே, வலது புறம், கிழக்கு நோக்கியபடி அமைந்துள்ள அழகிய கோயில்.

மூன்று நிலை கொண்ட இராஜகோபுரமும் அழகிய மதில் சுவரும் கொண்ட திருக்கோயில். கோபுரத்தின் நிலைகளின் இருபுறமும் துவாரபாலகர், கோபுரம் தாங்கிகள், கோடிபூதங்கள் மற்றும் ரிஷபங்கள், சுதைச் சிற்பங்களாக அழகூட்டுகின்றன. கிழக்கு

கள் உள்ளன. அழகிய ராஜகோபுரம் வடக்கு நோக்கி அமைந்துள்ளது.

கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம் ஆகிய அத்தனையும் வடதிசை நோக்கியே அமைந்துள்ளன. வசந்த மண்டபத்தில் சிம்மமும், பலிபீடமும் இருக்க மகா மண்டபத்தில் காவல் பூதங்களாக நீலன்–நீலி சிலைகள் உள்ளன.

மூன்று தளங்கள் கொண்ட விமானத்தின் மீது மூன்று கலசங்கள் ஒளிவீச, கருவறையில் பிரதான தெய்வமாக பொன்காளியம்மனே விளங்குகிறாள். அக்கினி சுவாலையை மகுடமாக அணிந்து, எட்டு கரங்களோடு, அரக்கனை இடது காலால் மிதித்த படி, வலது காலை **மண்டியிட்டுக்** காட்சி தருகிறாள். எண் கரங்களிலும் அக்னி, கேடயம், மணி, கபாலம், திரிசூலம், டமருகம், குறுவாள், அரவம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளாள். காதுகளிலும், கழுத்திலும் அழகிய ஆபரணங்கள் பளிச்சிடுகின்றன.

முதல் காவல் தெய்வமாக வண்ணாரக் கருப்பண்ணன் உள்ளார். தனிக் கோயிலில் மேற்கு முகமாக அமைந்த சந்நிதி. பொன்காளியம்மன் கோயிலின் நான்கு திசைகளிலும், வடக்கில் அத்தனூரம்மன், கிழக்கில் ஆத்தூரம்மன், தெற்கில் புத்தூரம்மன், மேற்கில் மாரியம்மன் ஆகியோர் கோயில் கொண்டு மையமாக பொன்காளியம்மன் கோயில் உள்ளது.

மாதேசியப்பன், மூலவிநாயகர், மசூரியம்மன், பேச்சியம்மன் ஆகிய துணை தெய்வங்களும் தனி சந்நிதிகளில் இடம் பெற்றுள்ளனர். அருவுருவாகத் திகழும் மாதேவியப்பன், கால்நடைகளுக்கு காவலனாகத் திகழ்கிறார்.

இத்திருக்கோவிலில் **'பல்லி சகுனம் பார்த்தல்'** வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை 3 மணி முதல் 6 மணி வரை கேட்கப்படுகிறது. மனநோய் உள்ளவர்கள் திருக்கோயிலில் தங்கி குணமடைந்து செல்கின்றனர். நாள்தோறும் இரண்டு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன.

பங்குனி மாதத்தில் திருவிழா நடைபெறுவதும், தேரில் அன்னை வலம் வரும்போது, விளைபொருட்களை, தேரின் மீது வீசுவதும், ஆயிரக்கணக்கான மக்கள் தீப்பந்தங்கள் ஏந்தியபடி உடன்

வருவதும் கண் கொள்ளாக்காட்சி ஆகும்.

அன்னதானம் :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.



திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு பொன்காளியம்மன் திருக்கோயில்,
தலையநல்லூர், ஈரோடு வட்டம்
தொலைபேசி : 0424 222375
மின்னஞ்சல் : ponkaliammankovil@gmail.com

சமயபுரத்தாள் பெறும் சீர்வரிசை

சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாக்களில் '**தைப்பூசத்திருவிழா**' முக்கிய இடம் பெறுகிறது. தை மாதம் பூச நட்சத்திரத்தில் வரும் பத்தாவது நாள். காலையில் அம்மன் கண்ணாடிப் பல்லக்கில் பவனி வருகிறாள். டோல்கேட், நொச்சியம் வழியே சென்று, ம ாலையில் கொள்ளிடம் வட காவேரியில் தீர்த்தவாரி கண்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.

இரவு பத்து மணியளவில் சமயபுரம் மாரியம்மனுக்கு, ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி திருக்கோயிலிருந்து சீர்வரிசை புறப்பட்டு வரும் நிகழ்ச்சி நடைபெறும். ரங்கநாதர் திருக்கோயில் பணியாளர்கள் யானை மீது வைத்த அம்பாரியில், அண்ணார் வீட்டு சீர்வரிசையை, மங்கல வாத்தியம் முழுங்கிடக் கொண்டு வந்து, அன்னை சமயபுரத்தாளுக்கு வழங்குவர்.

நள்ளிரவு ஒரு மணி முதல் மூன்று மணி வரை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்று, அதிகாலையில் வட திருக்காவேரியில் மகா அபிஷேகம், ஷோடச தீபாராதனை நடைபெறும். காலை ஐந்து மணிக்கு அங்கிருந்து புறப்படும் அம்மனின் கண்ணாடிப் பல்லக்கு இரவு பத்து மணிக்கு சமயபுரத்தை அடைந்து, கொடி இறக்குதல், காப்பு அவிழ்த்தல் முதலியன முடிந்து தைப்பூசத் திருவிழா முடிவடைகிறது.

யன்று, பூப்பல்லக்கில் அன்னையை அமர்த்தி, திருக்கோயிலை வலம் வருவர்.

பூமிதித்தல்

பொதுவாக அம்மன் கோயில்களில் நடைபெறும் தீமிதித் திருவிழாவைப் பூ மிதித்தல் என்று கூறுவர். கொங்கு நாட்டில் எண்ணற்ற கோயில்களில் வழிவழியாக நடந்து வரும் அதிசய நிகழ்ச்சி இது. பண்ணாரி மாரியம்மன், அந்தியூர் பத்திரகாளியம்மன், கணக்கன்பாளையம் பகவதியம்மன், பாரியூர் கொண்டத்துக்காளியம்மன் ஆகிய கோயில்களில் நடைபெறும் குண்டம் திருவிழாக்கள் குறிப்பிடத்தக்கவை. அவற்றில் பாரியூர் தனிச்சிறப்பு பெற்றுள்ளதால் அம்மனுக்கு அடைமொழியாகப் பாரியூர் கொண்டத்துக் காளியம்மன் என்று வழங்கப்படுகிறது. 17 நாட்கள் நடைபெறும் திருவிழா அது! குண்டம் என்பதே பேச்சு வழக்கில் கொண்டம் ஆகியுள்ளது.

தங்கரதம்

எண்ணற்ற பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்றிடும் வகையில் கொண்டத்துக் காளியம்மனுக்கு **'தங்கரதம்'** ஒன்றும் அமைத்து **'திருஉலா'** நடத்திட வகை செய்யப்பட்டுள்ளது.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – இரவு 8.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு கொண்டத்துகாளியம்மன் திருக்கோயில், பாரியூர்.
தொலைபேசி : 04285-291022.
மின்னஞ்சல் : pariyuramman_temple@sancharnet.in

மகாமண்டபம், வழவழப்பான கரும்பளிங்குக் கற்களிலான கருவறை.

பாராளும் நாயகியாகப் பாரியூர் அம்மனாக கொண்டத்துக் காளியம்மன் கருவறையில் கொலுவீற்றிருக்கிறாள். எட்டு கரங்கள். வலது கரங்களில் சூலம், டமருகம், வில், கத்தி ஆகியனவற்றையும், இடது கரங்களில் கபாலம், மணி, கேடயம், அக்னி ஆகியவற்றையும் ஏந்தியபடி, இடது காலை அசுரனின் உடலை மிதித்தபடி, வலது காலை மடித்து அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கிறாள்.

தீவினைகளை எரித்திடும் கண்கள், பக்த கோடிகளுக்கு அருளை அள்ளித் தருபவனாக ஒளிர்விடுகின்றன. அந்தப் பரவசக் கோலம் காண, பக்தர்கள் இருபுறம் வரிசையாக இருகரங்கூப்பி நிற்கிறார்கள்.



அன்னையின் பொற்பாதங்களில் வைத்துப் பூசிக்கப்பட்டமஞ்சள்கயிறுகளைமக்கள்பணிவோடு பெற்றுச் செல்கின்றனர்.

மகாமண்டபத்தின் முன்பகுதியில் 50அடி நீளம் கொண்ட**'திருக்குண்டமும்'**குண்டத்தின்முனையில் விளக்குக் கம்பமும் உள்ளன.

கல்யாண விநாயகர், சப்தகன்னியர் சந்நிதிகளும் மேற்கில் உள்ளன. வடக்கே ஒரு வாசலும் உள்ளது. கருவறையின் முன்னே அர்த்தமண்டபத்தில் ராஜராஜேசுவரி, பத்ரகாளி, மகாலட்சுமி ஆகிய சிலைகள், தூண்களோடு சேர்ந்து வடிக்கப்பட்டுள்ளன.

சிறப்பு விழாக்கள்

அன்னையைவலம்வந்துஉற்சவத்திருமேனியான**'சின்னம்மனை'** தரிசித்திடலாம்.

ஆடி மாதத்தில், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு அலங்காரங்கள் செய்விக்கப்படும். மூன்றாவது வெள்ளிக்கிழமை, அழகிய ஊஞ்சலில் அம்மனை அமர்த்தி, அதனை ஆட்டி மகிழ்வர். கடைசி வெள்ளிக்கிழமை



அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில்

கொடுமுடி



'மூவர் கண்ட மூவர் தலம்' என்று போற்றப்படும் கொடுமுடி, ஈரோடு மாவட்டத்தின் திருமுடியாய்த் திகழ்கிறது. ஈரோட்டிற்கு தெற்கே 39 கி.மீ. ஈரோடு-கரூர் செல்லும் பாதையில் உள்ளது.

'திருக்கொடுமுடி என்றதும் - தீவினை சுருக்கெடும்; இது கை கண்ட யோகமே' என்று திருநாவுக்கரசர் பெருமான் போற்றிப் புகழ்ந்த திருத்தலம் தான் கொங்குநாட்டுக் கொடுமுடி, கொங்கு நாட்டில் நால்வரில் மூவராகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரது பாடல் பெற்ற தலம் இது

ஒன்றே ஆகும். "மும்மூர்த்தித் தலம்" என்றும் புகழ் பெற்றது. மகுடேஸ்வரர், வீரநாராயணப் பெருமாள் மற்றும் பிரம்மா ஆகிய மூவரும் ஒரே திருக்கோவியில் குடி கொண்டுள்ள பெருமை மிக்கது.

"கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி

நற்றவா உனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே."

என்று சுந்தரர் தமது ஐந்தெழுத்துப் பதிகத்தைப் பாடி அருளியதும் இந்தத் திருத்தலத்தில் தான்.



சடையமர் கொன்றையினாருஞ் சாந்த வெண்ணீறணிந்தாரும் புடையமர் பூதத்தினாரும் பொறிகிளர்பாம் பசைத்தாரும்

விடையமருங் கொடியாரும் வெண்மழுமூ விலைசூலப்

படையமர் கொள்கையினாரும் பாண்டிக் கொடுமுடியாரே

என்று திருஞானசம்பந்தர் பெருமான் போற்றிய தலம்.

"**மலைக் கொழுந்தீசுவரர்**" என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுவது மேருமலையின் ஆயிரம் சிகரங்களில் ஒன்று, ஐந்து மணிகளாக உடைபட்டு சிதறியபோது, '**வைரமே கொடிமுடி**' ஆனது என்பதைக் குறிப்பதாகும்.

அப்போது சிதறிய ஐந்து மணிகள் **சிவப்பு-மரகதம்-மாணிக்கம்-நீலம்-வைரம்** ஆகியவை முறையே திரு அண்ணாமலை, ஈங்கோய் மலை திருவாட்போக்கி, பொதிகை மற்றும் கொடுமுடியாக ஆயின என்கிறது தல வரலாறு. அப்படி சிதறி விழுந்த மணியே, இத்தலத்தில் சிவலிங்கத் திருமேனியாக உள்ளது என்றும் கூறுகிறது. சதுரபீடத்தில் அமைந்துள்ளது மூலவர் திருமேனி.

பிரம்மன் வழிபட்டதால் **பிரமபுரி,** திருமால் பூசித்ததால் **அரிகரபுரம்,** கருடன் பூசித்து தேவலோகம் சென்று அமுதம் கொண்டு வந்ததால், **அமுதபுரி,** கன்மாடன் என்ற வேதியன் வழிபட்டு களங்கம் நீங்கப் பெற்றதால், **கன்மாடபுரம், கறையூர்**

கொண்டத்துக் காளியம்மன் கோயில்கள்' ஏழு உள்ளன என்று பெருமையாகச் சொல்வர். பக்தர்கள் அனைவராலும் **'பாரியூர் அம்மன்'** என்றே மிகுந்த பெருமிதத்தோடு அழைக்கப்படும் கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில் மிகவும் பழமையானது.

அங்கப் பிரதட்சணம் செய்தல், வேப்பிலை ஆடை உடுத்தி, தீச்சட்டி எடுத்தல், பால்குடம் ஏந்தி வருதல் இப்படி எண்ணற்ற பிரார்த்தனைகள் உண்டு. கிராமங்களில் உள்ள அம்மன் கோயில்களில் முக்கியமாக அனுசரிக்கப்படும் நேர்த்திக்கடன் **'அக்னிகுண்டம்'** இறங்குதலே ஆகும். தங்களது பிரார்த்தனைகள் நிறைவேறிய மகிழ்ச்சியில் எண்ணற்ற பக்தர்கள் இந்த நேர்த்திக்கடனை நிறைவேற்றிச் செல்வதால் பாரியூர் அம்மன் **'குண்டத்துக் காளியம்மன்'** என்ற திருநாமத்தால் வணங்கப்பட்டாள். அந்தப் பெயரே நாளடைவில் **'கொண்டத்துக் காளியம்மன்'** ஆக மருவியது.



பூக்கேட்டல்

கோபி வட்டாரத்தில் சுற்றிலும் உள்ள கிராமத்து மக்கள் அனைவரும் தங்களது இல்லங்களில் மங்கல நிகழ்ச்சிகள் நடத்துவது, புதிய தொழில் துவங்குவது என்ற எந்தக் காரியமாக இருப்பினும், கொண்டத்துக் காளியம்மனிடம் பூப்போட்டுச் சம்மதம் கேட்டபிறகே துவங்கிடுவர்.


ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் கூடிய அழகிய திருக்கோயில். நான்கு புறத்திலும் உயர்ந்த மதில்கள் சூழ்ந்த பரந்தவெளி. மையப்பகுதியில் அழகிய சுதைச் சிற்பங்களை முகப்பில் கொண்டுள்ள



அருள்மிகு
கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில்

பாரியூர்

ஈரோட்டிலிருந்து வடமேற்கில் 34 கி.மீ. தொலைவிலும், கோபி–அந்தியூர் சாலையில், கோபியிலிருந்து வடக்கில் 3 கி.மீ. அந்தியூரி லிருந்து18 கி.மீ.தொலைவிலும்உள்ளடங்கிய தலம்.



'குண்டத்துக்காளியம்மன்' என்ற பெயரேநாளடைவில்**'கொண்டத்துக்காளி'** என்றும் மருவியதாகும். பவானி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

'கொங்குநாட்டில்மிகப்புகழ்கொண்ட

பாண்டியன் மலையத்துவசன் திருப்பணி செய்வித்ததால் **"பாண்டிக் கொடுமுடி"**, பரத்வாச முனிவருக்கு சதுர தாண்டவக் காட்சி அளித்ததால் **"பரத்வாசபுரம்"** மேருமலைச் சிகரத்தின் ஒரு துண்டு இத்திருத்தலத்தில் விழுந்து, அதுவே மூலலிங்கமாக அமைந்துள்ளதால் 'கொடுமுடி' என்றும் '**தென்கைலாயம்**' என்றும் பெயர் பெற்றது.

சுந்தர பாண்டிய கேசரிவர்மன், கோமாறவர்மன், தேர்மாறன், தண்டிசைக் காளியண்ணன், நரசிம்மப் பல்லவன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் இத்தலம் **'அதிராஜராஜ மண்டலத்துக் காவிரி நாட்டுக் கறையூர்த் திருப்பாண்டிக் கொடுமுடி'** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை தவிர திருவேள்விக் குடிச் செப்பேட்டிலும், "மழக்கெங்கம் அடிப்படுத்திப் பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது பத்மபாதம் பணிந்தேத்திக் கனகராசியும், கதிர்மணைக் குவியலும் குடுத்திட்டுக் கொங்கர் நறுங்கண்ணிக் கங்கராசனோடு சம்பந்தஞ் செய்தான்" என்றும் குறிப்பு உள்ளது.

காவிரிக் கரையில் மூன்று கோபுரங்கள் :

'திருப்பாண்டிக் கொடுமுடி' திருக்கோயில் காவிரி நதியின் மேற்குக் கரையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மகுடேசுவரர், வடிவுடைநாயகி மற்றும் வீரநாராயணப் பெருமாள் ஆகியோரது சந்நிதிகளுக்குரிய மூன்று ராஜகோபுரங்கள் ஒரே வரிசையில் அமைந்திருப்பது தனிச்சிறப்பு ஆகும்.

திருக்கோயிலின் உட்புறம் வடக்கில் சுவாமி சந்நிதியும், தெற்கில் அம்மன் சந்நிதியும், அம்மன்–சுவாமி சந்நிதிகளின் பின்புறம் நடுவில் வீரநாராயணப் பெருமாள் சந்நிதியும் அமைந்துள்ளன.

தலமரமாகிய வன்னிமரத்தினடியில் பிரம்மா சந்நிதி அமைந்துள்ளது. இத்தலத்து விநாயகர் "காவிரி கண்ட விநாயகர்" என்று அழைக்கப்படுகிறார். திருச்சுற்றில் அறுபத்து மூவர் திருமேனிகளும், நால்வர், காசி விசுவநாதர், அகத்தீசுவரர், கஜலட்சுமி, பைரவர், சப்தமாதர் மற்றும் நவக்கிரகங்கள் உள்ளன.

சித்திரை பௌர்ணமி நாளில் பரத்வாச முனிவருக்கு நடனக்காட்சியருளிய சதுரதாண்டவர், முயலகன் இல்லாது காட்சி தருகிறார். அதே போல் தென்திசைக் கடவுளான ஆலமரர் செல் வரின் பாதத்தடியில் முயலகனும், நான்கு முனிவர்களுக்கு பதிலாக

ஒரே ஒருவருடைய வடிவமும் உள்ளது. ஆறுமுகப் பெருமான் பன்னிருகரங்களுடன், தமது இருதேவியருடன் மயில் வாகனராகக் காட்சி தருகிறார்.

தீர்த்தங்கள் :

திருக்கோயிலின் எதிரில் தெற்கு நோக்கி வரும் காவிரி நதி, கிழக்கு நோக்கிப் பாய்கிறது. விநாயகப் பெருமான் வெள்ளைக் காகம் உருக் கொண்டு, அகத்தியரின் கமண்டல நீரைக் கவிழ்த்திய இடமே "**கொடுமுடித்துறை**" என்று அழைக்கப்படுகிறது. அதற்கேற்ப காவிரியின் நடுவே "**அகத்தியர் பாறையும்**" உள்ளது. கங்கையிலும் புனிதமானது காவிரி என்று ஒரு ஆழ்வார் பாடியுள்ளார்.



இது தவிர, வன்னிமரத்தினடியில் தேவதீர்த்தமும், நவகிரகங்கள் அருகில் பரத்வாச தீர்த்தமும், மடைப்பள்ளி அருகில் பிரம்ம தீர்த்தமும் உள்ளன.

சூரியன் வழிபாடு:

ஆவணி, பங்குனி மாதங்களில் நான்கு நாட்கள், சூரியனின் ஒளிக்கதிர்கள் சுவாமி, அம்மன் திருமேனிகளின் மீது பொழிந்து, '**சூரிய பூசை**' நடைபெறுவது மேலும் சிறப்பாகும்.

மகுடேசுவரர்:

ஆதிசேஷனுக்கும், வாயுவிற்கும் ஒருமுறை நடைபெற்ற பலப்பரீட்சையில், வாயுவினால் பறித்தெறியப்பட்ட மேருமலையின் சிகரம் ஒன்று, சிதறிப் போய் கொங்கு நாட்டில் காவிரிக்கரையில் விழுந்து பூமிக்குள் அழுந்தியதாம். பூமிக்குள் இறங்கிய மலையின் சிகரம் வெளியே நீட்டிக் கொண்டிருக்க அதுவே சுயம்புலிங்கத் திருமேனியாகக் காட்சியளித்ததாம். அதனால் கொடுமுடிநாதர், ம குடேசுவரர் எனப் பெயர் கொண்டார் எம்பெருமான். வைரமாக விழுந்த மேருமலையின் பகுதியே அது என்பர்.

பூமிக்குள் அழுந்தி இறங்கத் துவங்கிய திருமேனியை, அகத்தியர் பாய்ந்து சென்று தனது இரு கரங்களினால் இறுகப் பற்றினார். அவரது கைப்பிடியளவில் சிவலிங்கத் திருமேனி நின்றதோடு, அவரது கைவிரற்பதிவும் அதன் மேல் படிந்தது.

மகுடேசுவரரை, கொடுமுடிநாதர், கொடுமுடீசுவரர், மலைக் கொழுந்தீசுவரர், திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர், ஆளுடைய

ஈரோடு - மேற்கு



1. பாரியூர்
2. கோபிசெட்டிப்பாளையம்
3. சத்தியமங்கலம்
4. பண்ணாரி
5. புஞ்சை புளியம்பட்டி
6. நம்பியூர்
7. பெருந்தலையூர்
8. கூகலூர்
9. அளுக்குளி

தொலைவில், பவானியாற்றின் வடகரையில் அமைந்துள்ள திருத்தலம் ஆப்பக்கூடல். **‘ஆவுக்கூடல்’** என்று முன்னர் பெயர் பெற்றிருந்து காலப்போக்கில் ஆப்பக்கூடலாக மருவியுள்ளது. ஆலமரத்து ஒன்றின் கீழ், ஆடு, மாடுகள் கூடி நின்ற படி இருந்த இடம் ஆவுக்கூடல் என அழைக்கப்பட்டதாம்.

சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில். திருக்கோயில் முன்பு, தீபத்தம்பம் உள்ளது. வில் அம்பு ஏந்திய வீரபத்திரர் திருவுருவம் அதன் அடிப்பாகத்தில் இடம் பெற்றுள்ளதை காணலாம்.

காசி விசுவநாதருக்கும், அன்னை விசாலாட்சிக்கும் தனித்தனி சந்நிதிகள். திருச்சுற்றில் பரிவார தேவதைகள், **‘வாமண அவதார சிற்பம்’** ஒன்றும் அங்கு இடம் பெற்றுள்ளது. நவக்கிரக சந்நிதி அருகில் பின்னிப் பிணைந்த நாகர் சந்நிதியும் உள்ளது. நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை7.00 மணி – பகல் 11.00 மணி
மாலை 4.,00 மணி – இரவு 7.00 மணி

அருள்மிகு கணேச பாலதண்டாயுதபாணி திருக்கோயில்

காசிவிசுவநாதர் திருக்கோவிலுக்கு மிக அருகாமையில் சாலையை ஒட்டி அமைந்துளள குன்று ஒன்றின் மீது குமரன் கோயில் ஒன்றும் உள்ளது. 108 படிகள் கொண்ட இந்த முருகன் கோயில் **‘கணேச பாலதண்டாயுதபாணி’** கோயில் என்று அழைக்கப்படுகிறது. நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 11.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்

சிவாலயத்தையொட்டியே நுழைவாயிலின் எதிரில் கருடத்தம்பத்தைக் கொண்ட வரதராஜப் பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. நீளாதேவி, ஸ்ரீதேவியுடன் வரதராஜர் நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார். தாயார் சந்நிதியுடன் ஆண்டாள் ஆஞ்சநேயர், கருடாழ்வார் சந்நிதிகளும் உள்ளன.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்
அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில், ஆப்பக்கூடல்.
தொலைபேசி : 04256 230191


நாயனார் என்றும் அழைப்பர். பட்டாடை அணிவித்து, நாகாபாரணமும் சார்த்தப்பட்டு ஒளிச்சிதறல்களாக கொடுமுடிநாதர், பிரதிபலிப்பதைக் கண்குளிரக் காணலாம்.

வடிவுடை நாயகி :

பண்மொழியம்மை, வடிவுடைநாயகி, சௌந்திராம்பிகை என்று அழைக்கப்படும் அன்னை, நான்கு திருக்கரங்களுடன், நின்ற கோலத்தில் காட்சி தருகிறாள். தனது குழந்தைகளின் தவறுகளையெல்லாம் மன்னித்தருளும் கருணையே வடிவாக, அழகுக் கோலம் கொண்டுள்ளாள்.

வீரநாராயணப் பெருமாள் :

ஆதி நாராயணர், அனந்த நாராயணர், வேதநாராயணர் என்று முற்காலத்தில் அழைக்கப்பட்ட எம்பெருமான், சயனக் கோலத்தில் வீரநாராயணப் பெருமானாக சேவை சாதிக்கிறார். திருவடியருகில் ஸ்ரீதேவி, பூதேவியும், தலையருகில் கருடாழ்வாரும், சுற்றிலும் ஆஞ்சநேயர், விபீஷணன், பிரம்மா, வாசுதேவன் ஆகியோர் காட்சி தருகின்றனர். திருச்சுற்றில் பன்னிரு ஆழ்வார்களும், பரமபதநாதர், வெங்கடேசப் பெருமான், கருடன் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். அடுத்து அமர்ந்த கோலத்தில் திருமங்கை நாச்சியார் எழிலரசி வீற்றிருக்கிறார். அன்னையை அடுத்து ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது.



வன்னிமரத்தடியில் பிரம்மா :

கொடுமுடி திருத்தலத்தின் தலமரமான வன்னிமரம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதெனக் கூறுவர். அந்த மரத்தின் கீழ் தவக்கோலம் கொண்டு பிரம்மா காட்சி தருகிறார். நான்முகன் இங்கே மூன்று முகங்களோடு காட்சி தருகிறார். வன்னிமரத்தையே நான்காவது முகமாகக் கொள்வர்.

திங்கட்கிழமைகளிலும், வியாழக்கிழமைகளிலும், பிரம்மாவின் சந்நிதி விழாக் கோலம் காண்கிறது. வெளிமாநிலத்து மக்கள் பெருந்திரளாக வாடகைப் பேருந்துகளில், கொடுமுடித் தலத்தில் கூடுகிறார்கள்.

நாகதோஷம் நீங்கிட :

ஆதிசேஷன் உருவாக்கிய தலம் என்பதால் நாகர் வழிபாடு இங்கே தனிச்சிறப்பு பெறுகிறது. ராகு-கேது தோஷ பரிகார பூசைகள் பெருமளவில் நடைபெறுகின்றன. கோயிலைச் சுற்றிலும் நாகர் பிரதிஷ்டை காணலாம்.

அமாவாசை நாட்களில் '**நீத்தார் கடன்**' நிறைவேற்றிட காவிரிக் கரையில் ஏராளமான மக்கள் கூடுவர். ஆடிப்பெருக்கு அன்று ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வருவர்.

நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பௌர்ணமியையொட்டி பெருந்திருவிழா நடைபெறுகிறது. நவராத்திரி ஒன்பது நாட்களும் சிறப்பு வழிபாடு உண்டு.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்கதர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள் தோறும் மூன்று கால பூஜை நடைபெறுகிறது.

கருணை இல்லம்

ஏழை மாணவர்கள் பயன்பெறும் வகையில் "**கருணை இல்லம்**" ஒன்று திருக்கோயிலில் நிதியிலிருந்து பராமரிக்கப்படுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி - பகல் 12.00 மணிவரை

மாலை 4.00 மணி - இரவு 8.00 மணிவரை

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு மகுடேஸ்வரர் மற்றும் வீரநாராயணப்பெருமாள் திருக்கோயில்,
கொடுமுடி. ஈரோடு வட்டம்.
தொலைபேசி : 0424 -222375
மின்னஞ்சல் : kodumudikovil@gmail.com








அருள்மிகு
காசிவிசுவநாதர் திருக்கோயில்
ஆப்பக்கூடல்

பவானியிலிருந்து மேற்கே 12 கி.மீ. தொலைவில், பவானியாற்றின் வடகரையில் அமைந்துள்ள திருத்தலம் ஆப்பக்கூடல். '**ஆவுக்கூடல்**' என்று முன்னர் பெயர் பெற்றிருந்துகாலப்போக்கில்ஆப்பக்கூடலாக மருவியுள்ளது. ஆலமரத்து ஒன்றின் கீழ், ஆடு, மாடுகள் கூடி நின்ற படி இருந்த இடம் ஆவுக்கூடல் என அழைக்கப்பட்டதாம்.



சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில். திருக்கோயில் முன்பு, பவானியிலிருந்து மேற்கே 12 கி.மீ.

புன்னம் கிராமத்தின் காவல் தெய்வமாக விளங்குபவள் சொக்கநாச்சியம்மன். திருவிழாக் காலங்களில் மக்கள் தீச்சட்டி, பால்குடம், மாவிளக்கு, முளைப்பாரி ஆகிய நேர்த்திக் கடன்களை சமர்ப்பிப்பர். அலகு குத்தியபடி பக்தர்கள் ஆடி வருவதும் உண்டு.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – இரவு 8.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்

அருள்மிகு சொக்க நாச்சியம்மன் திருக்கோயில், புன்னம்.

தொலைபேசி : 04256 230191



அண்ணாமலை

திருவண்ணாமலையின் வயது, புவியியல் மற்றும் வரலாற்றுப்படி பார்த்தால் 260 கோடி ஆண்டுகள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இறைவனே சுயம்பு வடிவாய் தென்மேற்கு திசையில் அல்லிகளை அருகில் **'அல்லிக்குகை'** உள்ளது.

கிரிவலப்பாதை 14கி.மீ. தூரம் கொண்டது. அண்ணாமலையார் திருக்கோயில் 24ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. (10லட்சத்து 67 ஆயிரத்து 993சதுர அடி ஆகும்) திருஅண்ணாமலை கோபுரம் தமிழகத்தின் மூன்றாவது பெரிய இராஜகோபுரம் ஆகும். 216 அடி உயரமும், 98 அடி அகலமும், 11 கிலைகளையும், உச்சியில் 11 கலசங்களையும் கொண்டதாகும். திருமஞ்சன கோபுரம் 157அடி உயரமும், அம்மணி கோபுரம் 171 அடிவாரமும் மேற்கு கோபுரம் 144 அடி உயரமும் கொண்டவை.



அருள்மிகு நாகேசுவரர் திருக்கோயில்

கொந்தளம்

ஈரோட்டிற்கு தெற்கே 23 கி.மீ. தொலைவிலுள்ள '**விளக்கேத்தி**' எனும் ஊருக்கு கிழக்கே 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது '**கொந்தளம்**'.

பரிகாரத்தலங்களாக காவிரியாற்றின் கரையில் தெற்கிலிருந்து கொடிமுடி முதல் மேட்டூர் வரையில், பல திருத்தலங்கள் அமைந்துள்ளன. கொடுமுடி, ஊஞ்சலூர், புஞ்சை கொளாநல் லியோடு கொந்தளமும், பரிகாரத் தலமாக அமைகிறது.

ஆதிசேஷன்வழிபட்டதலங்களும்,நாகர்கள்வழிபட்டதலங்களும், சர்ப்ப தோஷ பரிகாரத் தலங்களாக அமைகின்றன. அங்கெல் லாம் இறைவன் நாகேசுவரர், நாகநாதர், நாகரத்தின சுவாமி,

நஞ்சுண்டேசுவரர், பாம்புரநாதர், பாம்பலங்கார சுவாமி, சேஷபுரீசுவரர் என்றெல்லாம் திருநாமங்கொண்டு அருள்பாலிக்கிறார்.

கொடுமுடிக்கு வடக்கில் அடுத்தடுத்து மூன்று திருத்தலங்களில் '**நாகேசுவரர்**' என்ற திருநாமத்துடன் இறைவன் எழுந்தருளியிருப்பது தனிச்சிறப்பு ஆகும்.

மூலவர் நாகேசுவரர் சிறிய சிவலிங்கத் திருமேனி. அன்னை அமிர்தவல்லி என்ற திருநாமங்கொண்டுள்ளார். கொடிய நஞ்சின் வீரியம் குறைத்திட, அமிர்தத்தையே தனது திருநாமத்தில் இணைந்துள்ளாள் அன்னை. நான்கடி உயரத்தில், நான்கு கரங்களுடன் நின்ற திருக்கோலம் கொண்டு கம்பீரமாக காட்சியளிக்கிறாள்.

கன்னிமூலையில் கணபதி, முருகப் பெருமான், தட்சிணாமூர்த்தி, சண்டிகேசுவரர், பைரவர் சந்நிதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திருத்தலத்திற்கு அருகிலேயே வரதராஜப் பெருமாள் ஆலயம் உள்ளது. நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகின்றது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :
காலை 7.00 மணி - பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்
அருள்மிகு நாகேஸ்வரர் திருக்கோயில், கொந்தளம்.

தொலைபேசி : 04204 222375





அருள்மிகு
சொக்க நாச்சியம்மன் திருக்கோயில்
புன்னம்

பவானிக்கு மேற்கில் உள்ள ஆப்பக்கூடலுக்கு வடக்கே, பருவாச்சி என்னும் ஊருக்குச் செல்லலும் பாதையில் 6கி.மீ. தொலைவில் உள்ளது. அக்கம்பக்கம் பதினெட்டுப்பட்டி கிராம மக்களுக்கும் இங்கே உள்ள சொக்கநாச்சியம்மனே குலதெய்வம்!

சொக்கநாச்சியம்மன் எட்டு கரங்களோடு அமர்ந்த கோலத்தில் அசுரனைக் காலால் மிதித்த படி சூலாயுதத்தை வலது கரத்தில் ஏந்தியபடி காட்சி தருகிறாள்.

சூலம், வில், கத்தி, உடுக்கை, நெருப்பு, மணி, கபாலம், அக்னி ஆகியவற்றை ஏந்தியுள்ள அற்புதக் கோலம்.

பாடம்' என்ற வழிபாட்டைச் செய்கிறார். அதற்கென இங்கே கூடும் மக்கள் எண்ணற்றவர். **'செம்முனீசுவரரை வழிபட்டால் செய்வினைகள் தொலையும், நரகவாழ்க்கை தொலைந்து சொர்க்கம் தேடி வரும்'** என்று தூய தமிழில் எழுதிய கல்வெட்டும் உண்டு.



சித்திரை மாதத்தில் முதல் வெள்ளிக்கிழமை **'பூச்சாட்டுதல்'** நடைபெறுகிறது. தொடர்ந்து 15ஆம் நாள் **'முதல் பூஜை'** சிறப்பாக நடைபெறுமாம்.மூன்றுஅலங்கரிக்கப்பட்டதேர்கள்பூசாரியூரிலிருந்து புறப்பட்டு, பட்லூர் செம்முனீசுவரர் கோயிலை சென்றடையும். வைகாசி மாதத்தில் மறுபூஜை நடைபெறும்.

சிறுசிறு உருண்டைகளாகத் தரப்படும் வேப்பிலைப் பத்திரியே அருட்பிரசாதம், நோய்க்கு மருந்தாக மக்கள் பக்தியுடன் அதனை ஏற்பதைக் காணலாம்.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 8.00 மணி - இரவு 6.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு செம்முனீசுவரர் திருக்கோயில்,
பட்லூர்.

தொலைபேசி :04294 - 22565



அருள்மிகு குலவிளக்கு அம்மன் திருக்கோயில்

காளமங்கலம்

திருக்கோயிலின் இருப்பிடம் மற்றும் சிறப்பு

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஒன்றியம், நஞ்சைக்காளமங்கலம் (வழி) ஈரோட்டில் இருந்து கரூர் செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் 20 கி.மீ. தொலைவில் கணபதிபாளையம் நால்ரோடு என்கிற பஸ் நிலையம் உள்ளது. மேற்படி கணபதிபாளையம் நால்ரோட்டில் இருந்து வடக்கு நோக்கி சுமார் 3 கி.மீ. தொலைவில் இருபக்கமும் பசுமை நிறைந்த வயல்களும், காவிரி கரையோரத்தில் அமைந்த புனித ஸ்தலம்.

குலவிளக்கம்மன் என பெயர் வரக் காரணம்:



காவிரியின் உற்பத்திக்கும் சங்கமத்திற்கும் மையப்பகுதியான காளமங்கலத்தில் காவிரியின் தென்கரைமேல் வடக்கு நோக்கிய வண்ணம் அன்னை பராசக்தி ஆனவள் குலவிளக்கு அம்மன் என்ற திருப்பெயரில் தன்னை வணங்கும் அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் பொழிந்து வருகிறாள்.

அம்மனுக்கு குலவிளக்கு அம்மன் என்ற பெயர் ஏற்பட்டதற்கு வேறு ஒரு காரணம் கூறப்படுகிறது. ஒரு சமயம், ஈரோடு வட்டம் சிவகிரி கிராமத்திற்கு அருகே உள்ள குலவிளக்கு என்ற கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அம்மனுக்கும், காளமங்கலத்து அம்மனுக்கும் ஒரே இடத்தில் திருவுருவ சிலைகள் வடிக்கப்பட்டு அம்மனுக்கும் பிதிஷ்டை செய்யப்படுகையில் கவனக்குறைவினால் காளம ங்கலத்து அம்மனின் சிலை குலவிளக்கிற்கும், குலவிளக்கு அம்மன் சிலை காளமங்கலத்திற்கும் மாற்றப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது. இதனால், காளமங்கலத்து அம்மனுக்கு குல விளக்கு அம்மன் என்ற பெயர் ஏற்பட்டு அதுவே பின்னர் காரணப்பெயராகவும், சிறப்பு பெயராகவும் ஆகிவிட்டது (செவி வழிச் சொல்ல காரணமாக உள்ளது).



குலவிளக்கம்மனின் சிலை அமைப்பு :

அம்மன் இருந்த கோலத்தில் (வலது காலை மடக்கி, இடது காலை கீழே போட்ட) மகிஷாசூரம ர்த்தினியாகக் காணப்படுகிறாள். பீடம் ஓரடி உயரம் கொண்டது. அம்மன் சிலை மூன்றடி உயரம் கொண்ட கல் சிலையாகும். பீடமும் ஒரே கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் சிலையின் பின்பக்கம் எந்த வடிவ அமைப்பும் இல்லை. தலையின் பின்னால் தலையை ஒட்டி அக்கினி சுவாலை எழும்புவது போன்ற வடிவ அமைப்பு காணப்படுகிறது. அக்கினி வடிவமாகக் காணப்பட்டாலும் தாய் சாந்தவடிவ குணமுடையவளாகவும் மிக அழகிய முகப்பொலிவுடனும் காணப்படுகிறாள். கோரப்பல் இருந்தாலும் சாந்தவடிவில் உள்ளாள். சடையில் தலையின் கிரீடத்தில் பஞ்சநாக உருவங்கள் காணப்படுகின்றன. ஐந்து பிரியும், கழுத்தணியும், மாண்பணியும் உள்ளன. பூ அணிந்ததாவும் காணப்படுகிறது. நான்கு கைகளைக் கெண்ட அம்மனின் வலது மேல் கையில் திரிசூலமும் வலது கீழ்க்கையில் கபாலமும் காணப்படுகின்றன.



அதே நேரத்தில் இப்பகுதிவாழ் மக்களிடையே பெரும் தாக்கத்தையும் பக்தியையும் ஏற்படுத்தி வரும் கோயிலாக அமைந்துள்ளது இங்குள்ள செம்முனீசுவரர் கோயிலே ஆகும். எண்ணற்ற குடும்பங்களுக்குக் குலதெய்வமாக இருந்து, அவர்களை நல்வழிப்படுத்துபவராக வீரமே உருவான செம்முனீசுவரர் திகழ்கிறார். பூசாரியூர் எனுமிடத்தில் அமைந்துள்ள இக்கோயிலை பூனாட்டி எனுமிடத்திலிருந்து எளிதில் சென்றடையலாம்.

கோயிலுக்கு வடபுறம் ஒரு குளமும், குளத்தின் அருகில் **'மருவுப் பாறை'** எனும் பாறையும் உள்ளது. அதன்மீது செம்முனீசுவரரின் பாதம் பதிந்துள்ளதைக் காட்டுவர்.

கோயிலில் நுழைந்ததும் முதலில் கம்பீரமாக அங்கே அமர்ந்துளள மகாமுனியைக் காண்கிறோம். **'வாமினிச்சாமி'** என்று இவரை அழைக்கின்றனர்.



நுழைவாயிலுக்கு எதிரில் மாதேசுவரன் சந்நிதி அமைந்துள்ளது. அருகிலேயே பச்சைநாயகியையும் காணலாம். வரிசையாக வாடமுனி, முத்துமுனி, தவமுனி, தன்னாசிமுனி, வேதமுனி, கருமுனி, வனமுனி, கொடுமுனி என வரிசையாகப் பல காவல் தெய்வங்கள். அவர்களது குணங்களுக்கேற்ப வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன.

பாம்பாட்டி சித்தர், யானைகள், குதிரைகள் எல்லாம் சுதை வடிவிலான சிற்பங்கள், மிகப்பெரிய வளாகம் முழுவதுமே சுதைச் சிற்பங்கள்.

தீவினையால் பாதிக்கப்பட்டவர்களுக்கென்று, பூசாரி **'வேப்பிலைப்**



அருள்மிகு
செம்முனீசுவரர் திருக்கோயில்

பட்லூர்

பவானிக்கு வடமேற்கில் 20 கி.மீ. தொலைவில் உள்ளது பட்லூர். மிகவும் பழமையானது. கல்வெட்டுக்களில் **'பட்டிலூர்'** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம சிறுதேவதைகளின் பெரிய கோயிலாக இங்கு செம்முனீசுவரர் கோயில் அமைந்துள்ளது. கி.பி.1206ல் கொங்கு நாட்டை ஆண்டுவந்த வீரராசேந்திரர் ஆட்சிக் காலத்தில் வடகரை நாட்டு அரசப் பிரதிநிதியால் கட்டப்பட்ட பல கோயில்கள் இப்பகுதியில் உள்ளன. அருள்மிகு சத்யாவாகீசுவரர் மற்றும் சென்றாயப் பெருமாள் கோயில்கள் தான் இவை.

அம்மனது வலது கால் மகிஷாசூரனின் கண்டப்பகுதியைக் குத்துவது போலவும் உள்ளது. சூலாயுதம் அவனது மார்புப்பகுதியைக் குத்துவது போலவும் உள்ளது. அசுரனது வலது கையில் கத்தியும், இடது கையில் கேடயமும் காணப்படுகின்றன. அவன் படுத்த கோலத்தில் கீரிய தலையைச் சற்று தூக்கிப்பார்ப்பது போல உள்ளது. அவன் இரண்டு கால்களையும் சற்று தூக்கிய நிலையில் சாந்த முகத்துடன் காணப்படுகிறான். இது பழிவாங்கும் நிலையல்ல. பாவவிமோசன நிலை என்பதை காட்டுகிறது.



தலவிருட்சகம் & திருக்கோயிலின் முக்கியத்துவம்

இத்திருக்கோயிலின் தல விருட்சகமாக ஆலாமரம் திருக்கோயிலின் தல விருட்சகமாகும். காளமங்கலம் என்னும் திருத்தலத்தில் அருள் பெறும் கருணையோடு தன்னை நாடி வருவோருக்கு வேண்டும் வரம் யாவையும் வேண்டிபடி அருளும் அருள்மிகு குலவிளக்கம்மன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இத்தலத்தில் புண்ணிய நதிகளில் ஒன்றாகிய காவேரி கோயிலின் வட திசையில் அமைந்து மேற்கில் இருந்து கிழக்கு பாய்வது ஒரு தனி சிறப்பு. இங்கும் ஓடும் புண்ணிய நதியாம் காவேரியில் நீராடி அருள்மிகு குலவிளக்கமனை தரிசிப்பவர்களுக்கு மனக்கவலை, பிணி, தீவினை துன்பம், துயரம், தொல்லைகள் ஒழிந்து வாழ்வு வாய்க்கும் அறியலாம்.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :


காலை 6.00 மணி – பகல் 12.30 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.30 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு குலவிளக்கம்மன் திருக்கோயில், காளமங்கலம்.
தொலைபேசி : 0424-2351616
மின்னஞ்சல் : arulmigukulavilakkuamman@gmail.com



ஈரோடு - தென்மேற்கு



1. பெருந்துறை
2. வெள்ளோடு
3. சென்னிலை
4. விஜயமங்கலம்
5. திங்களூர்
6. காஞ்சிக்கோயில்
7. தங்கமேடு
8. முகாசி அனுமன்பள்ளி

உருவாக்கப்பட்ட கோயில் என்பதை அறிய முடிகிறது. அதற்கு ஆதாரமாகக் கல்வெட்டுக் குறிப்புகளும், மீன் சின்னங்களும் காண முடிகிறது.

காவிரியாற்றை எதிர் நோக்கியபடி அமைந்துள்ள அழகிய திருக்கோயில், மகாமண்டபம், கருவறை விமானம் ஆகியவை புதிய வண்ணப்பூச்சுடன் மிளிர்கின்றன. நுழைவாயிலின் இடதுபுறம் **'சரவணப் பொய்கை'** போன்ற தடாகம் ஒன்றை அமைத்து, கார்த்திகைப் பெண்கள் அறுவர், தாமரை மலர்களில் உள்ள ஆறு குழந்தைகளையும் அள்ளி அணைக்கத் தயாராக உள்ளது போன்ற அமைப்பு, கலை நயத்தோடு விளங்குகிறது.

பலிபீடம், கொடிமரத்தைக் கடந்ததும், மகாமண்டபத்தின் முகப்பை அடைகிறோம். கொடுங்கையின் முகப்பிலே, மீனாட்சியம்மையின் திருமணக்காட்சி, சுதை வடிவில் அழகு செய்கிறது. பாண்டியநாட்டு அரசியின் கரம்பிடித்த அந்த சொக்கேசர், கொங்கு நாட்டு மக்களுக்கு அருள்பாலிக்க எழுந்தருளியுள்ள அற்புதக் கோலம்.

மீனாட்சியம்மையும் வலப்புறம் தனிச்சந்நிதி கொண்டுள்ளாள். திருச்சுற்றில் அருணாச்சலேசுவரர், வீரபத்திரரோடு அத்தனை பரிவார தேவதைகளும் அவரவர்க்குரிய இடத்தில் நிலை கொண்டுள்ளனர்.

சொக்கேசர் – மீனாட்சியம்மையை தரிசித்தவாறு கிழக்கே நோக்கினால் சலசலவெனப் பாய்ந்தோடும் காவிரியாறு, நம்மை வா, வா என அழைப்பது போலக் காண்கிறோம். மெய்சிலிரிக்கும் அனுபவம்.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.



திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 11.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சொக்கநாத சுவாமி திருக்கோயில்,
அம்மாபேட்டை.
தொலைபேசி : 04256 227787.



அருள்மிகு
சொக்கநாதசுவாமி திருக்கோயில்
அம்மாப்பேட்டை



பவானிக்கு வடக்கே 19 கி.மீ. தொலைவில் உள்ளது அம்மாப்பேட்டை, பவானி-மேட்டூர் சாலையின் நடுவே அமைந்ததலம். காவிரியாற்றின் மேற்குக் கரையையொட்டி அமைந்துள்ள திருக்கோயில்களின் வரிசையில், ஈரோடு-சேலம் மாவட்டங்களின் எல்லையையொட்டி அமைந்துள்ளது.

'சொக்கநாத சுவாமி' என்ற பெயரைக் கேட்டதுமே, இது பாண்டிய மன்னர்களால்



அருள்மிகு
சோழீசுவரர் திருக்கோயில்
பெருந்துறை



ஈரோட்டிற்குத் தென்கிழக்கே 15 கி.மீ. தொலைவில், கோவை செல்லும் சாலையில், புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ளது பெருந்துறை. கி.பி. 871 முதல் கி.பி.907 வரை தஞ்சையை ஆண்டுவந்த விஜயாலய சோழன், 894ல் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினான். அந்த சோழர் பரம்பரை 300 ஆண்டுகள் கொங்கு நாட்டை ஆண்டபோது, கி.பி.1115 – 1193ல் உருவானது இந்தக் கோயில், பல படையெடுப்புக்களால்

பெரிதும் சிதைந்து திருக்குளம், நந்தவனம் எல்லாம் மறைந்து போன நிலையில், 400 ஆண்டுகளுக்கு முன் மீண்டும் திருப்பணி செய்விக்கப்பட்டு, புத்தொளி பெற்ற திருக்கோயில், மூன்று நிலை இராஜகோபுரத்துடன் அமைந்தது.

சோழ மன்னர்கள் உருவாக்கி, வழிப்பட்டதால் இத் திருத்தலத்து ஈசுவரன், சோழீசுவரர் என்றே அழைக்கப்படுகிறார்.

சோழீசுவரர் சந்நிதிக்கு வலப்புறம் வேதநாயகி அம்மன் சந்நிதி உள்ளது. இடப்புறம் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியர் சந்நிதி உள்ளது.

இங்கு விநாயகரை "**ராஜகணபதி**" என்று அழைக்கின்றனர் ஈசானிய மூலையில் நவகிரகங்கள் உள்ளன. பரிவாரதேவதைகள் முறையாக இடம்பெற்றுள்ள அழகிய திருக்கோயில் இது.



மாதந்தோறும் சிறப்பு ஆராதனைகள் செவ்வனே நடைபெறுகின்றன. மார்கழி மாதம் திருவாதிரை அன்று நடராஜப் பெருமான் திருமஞ்சனம் சிறப்பாக நடைபெறும்.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சோழிஸ்வரர் திருக்கோயில், பெருந்துறை நகர்
தொலைபேசி : 04294-222565
மின்னஞ்சல் : arulmigusoleeswarar@gmail.com
இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

சிற்பங்கள், கருத்தைக் கவருவதாக உள்ளன. திருக்கோயிலின் எதிரில் , 60அடி நீளம் கொண்ட **'குண்டம்'** உள்ளது. நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றதும் இருபுறமும் **'எசவடக் குதிரைகள்'** நிலை கொண்டுள்ளன. பலிபீடம் அருகில் **'ஊஞ்சல்'** வைக்கப்பட்டுளளது. மகாமண்டபத்தில், கருவறைக்கு முன்னே நீலன், நீலி சிலைகள் உள்ளன. கருவறை விமானமும், மூன்றுநிலை இராஜகோபுரம் போலவே அமைந்து, மூன்று கலசங்களுடன் கம்பீரமாக உள்ளது.

சூலத்தால் அசுரனை மாய்த்திடும் கோலத்தில் எட்டுக் கரங்களிலும் ஆயுதங்களை ஏந்தியபடி தன்னை நாடிவருவோர்க்கு அபயம் தந்திடும் அருட்கோலத்தில் பத்திரகாளியம்மன் காட்சி தருகிறாள். மகாமண்டபத்தில் விநாயகர் சந்நிதி உள்ளது. திருச்சுற்றில் நளன், தமயந்தி என்று கூறப்படும் தம்பதியர் சிலை ஒன்றும் உள்ளது.

திருச்சுற்றின் கிழக்குப்பகுதியில் நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் உள்ள அம்மன் சிலையொன்றும், நந்தி, பலிபீடம் ஆகியவையும் உள்ளன. ஜம்பை கிராமத்தில் இடம் கொண்டிருந்த ஈசுவரன் கோயில் சிலைகள் அவை என்று அறிகிறோம். ஜம்புகேசுவரர் என்ற பெயரோடு இவ்வூரில் முன்பு சிவாலயம் ஒன்று இருந்திருக்கக் கூடும்.

ஆண்டுதோறும் வைகாசி மாதம் நடைபெறும் குண்டம் மற்றும் பொங்கல் திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். ஜம்பையைச் சுற்றியுள்ள ஏழு கிராமங்களுக்கு இதுவே முதன்மைக் கோயில் ஆகும். திருவிழாவின் போது ஆயிரக்கணக்கில் மக்கள் குண்டம் இறங்குவர்.

ஜம்பை பத்திரகாளியம்மன் கோயிலுக்குத் துணைக் கோயில்களாக மாரியம்மன் கோயில், கோமுனியப்பன் கோயில் ஆகியன உள்ளன. நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.



திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – இரவு 7.00 மணி.
தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு பத்திரகாளியம்மன் திருக்கோயில். ஜம்பை.
தொலைபேசி : 04256 - 230191.



அருள்மிகு
பத்திரகாளியம்மன் திருக்கோயில்

ஜம்பை



அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோவில்
ஜம்பை

பவானியிலிருந்து ஆப்பக்கூடல் மற்றும் சத்தியமங்கலம் செல்லும் சாலையில் 5கி.மீ. தொலைவில் உள்ளது ஜம்பை.

பவானி ஆற்றின் வடகரையில் சின்னியம்பாளையம் செல்லும் பாதையில் வடக்கு திசை நோக்கிய படி அமைந்துள்ளது பத்திரகாளியம்மன் திருக்கோயில்.

நுழைவாயிலுக்கு மேலே 3நிலை இராஜகோபுரம் கம்பீரமாக உள்ளது. ஒவ்வொரு நிலையிலும் அழகிய சுதைச்



அருள்மிகு
பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில்

பெருந்துறை



சோழீசுவரர் கோயிலோடு இணைந்ததாக உள்ள பிரசன்ன வெங்கடரமண சுவாமி திருக்கோயில் சுமார் இருநூறு ஆண்டு களுக்கு முன்னர் கட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது.

கருடத்தம்பம் கோயிலின் முன்னே அமைந்துள்ளது. திருக்கோயிலின் உள்ளே கருடாழ்வாருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. அதனைக் கடந்து மகாமண்டபத்தில் விஷ்வக் சேனர், ராமானுஜர், நம்மாழ்வர் சந்நிதிகள்

அமைக்கப்பட்டுள்ளன.

கருவறையில் திருமகள், நிலமகளோடு பிரசன்ன வெங்கடரமணப் பெருமாள், வலது மார்பில் மகாலட்சுமி தாயாருடன் சேவை சாதிக்கிறார்.

பாஞ்சராத்ர ஆகமப்படி வழிபாடுகள் நடத்ததப்படுகின்றன. உத்தரயண, தட்சிணாயன காலங்களில் **'சூரிய ஒளி'** கருடாழ்வார் சந்தியைக் கடந்து, மூலவர் சிரசு முதல் பாதம் வரை, ஒளிர்வது தனிச்சிறப்பு ஆகும்.

வைகுண்ட ஏகாதசி, சொர்க்கவாசல் திறப்பு, ஆண்டின் மிகப்பெரிய திருவிழா ஆகும்.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி



தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு பிரசன்ன வெங்கடரமணசுவாமி திருக்கோயில்,
பெருந்துறை.
தொலைபேசி : 04294 - 22565

விளக்கொளிப்பெருமாள்

சிவபெருமான் திருவண்ணாமலையில் சோதிவடிவாய் வீற்றிருப்பது போல, திருமாலும் காஞ்சிபுரத்தில் சோதிவடிவில் தனிக்கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார். இவரை **'தீபப்பிரகாசர்'** என்ற பெயரில் **'விளக்கொளிப் பெருமாள்'** என்று போற்றுகின்றனர். வைணவர்கள் கார்த்திகை தீபத்தன்று விளக்கொளிப் பெருமானை வழிபடும் முகமாக, தீபங்களை ஏற்றுவர், இதனைப் **'பெருமாள் கார்த்திகை'** என்பர்.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி பகல் 12.00 மணி.


அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில்

மாதேசுவரர் திருக்கோயிலுக்கு மிக அருகில் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலும் அமைந்துள்ளது. நீளாதேவி, பூமிதேவி சமேதராக வரதராஜப் பெருமாள் சேவை சாதிக்கிறார்.

சனிக்கிழமைகளில் பெருமளவில் பக்தர்கள் கூடுவர். நாள்தோறும் ஒரு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்
காலை 7.00 மணி – பகல் 12.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோயில், குறிச்சி.
தொலைபேசி : 04256 -230191



தமிழ்மொழியும், முருகனும்

முருகனின் பன்னிருகரங்களும் 12 உயிர் எழுத்துக்களை குறிக்கும் ஆறு தலைகள். வல்லினம், மெல்லினம், இடையினம் என்பவற்றில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஆறு எழுத்துக்களை குறிக்கும். அவனது வேல் ஆயுத எழுத்தை குறிக்கும். **'முருகு'** என்ற சொல்லில் **மு**-மெல்லினம், **ரு**-இடையினம், **கு**-வல்லினம் ஆகும். தமிழ் என்ற சொல்லில் **த**-வல்லினம், **மி**-மெல்லினம், **ழ்**-இடையினம் ஆகும். எனவே, தமிழோசை இணைந்த தமிழ்க்கடவுள் ஆகிறான் முருகன்.

சொக்கநாச்சியம்மன், பத்திரகாளியம்மன் என்று வேறு பெயர்களில் வழிபடுகிறார்கள்.

எண்கரங்கள் கொண்டு அசுரனைக் காலால் அழுத்தியபடி சூலம், வில், டமருகம், கத்தி, கபாலம், மணி, அம்பு மற்றும் அக்னி ஆகியற்வற்றை ஏந்தியபடி தீயோரை அழித்து நல்லோரைக் காத்திடுபவளாக அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறாள்.

பரிவார தேவதைகள், பேச்சியம்மன், எசவடக் குதிரைகள் எல்லாம் இடம்பெற்றுள்ள கோயில். நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி - பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி

அருள்மிகு மாதேசுவரர் திருக்கோவில்

அறுநூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருக்கோயில் குறிச்சி மாதேசுவரர் கோயில் கி.பி.1350ல் மலையமான் அதிராயன் காலத்தில் கட்டப்பட்டதாக ஒரு குறிப்பு உள்ளது.

'மாதேசுவரர்' விவசாயிகளின் கண்கண்ட தெய்வமாக இப்பகுதியில் விளங்குகிறார். தங்கள் நிலங்களில் அறுவடையாகும் நெல்மணிகளின் பகுதியை, ஈசனுக்குப் படைத்த பின்னரே, அதனை வேறு வகையில் பயன்படுத்துகிறார்கள். அதனையே ஏழை எளியவர்களுக்கு அன்னதானமாகவும் பயன்படுத்துகிறார்கள். தலமரம் வில்வம்.

கருவறையைச் சுற்றி, விநாயகர், முருகப்பெருமான், சண்டிகேசுவரர், பைரவர், நவகிரகங்கள் உள்ளனர். முருகப்பெருமான், பாலசுப்ரமணியராக உள்ளார். அன்னை மரகதவல்லி தெற்கு நோக்கியபடி எழுந்தருளியுள்ளார். மடப்பள்ளி சாம்பலே திருநீறாக பக்தர்களுக்கு வழங்கப்படுவது மாதேசுவரர் கோயிலின் சிறப்பு.

நாள்தோறும் ஒரு கால வழிபாடு நடைபெறுகிறது.



அருள்மிகு
செல்லாண்டியம்மன் திருக்கோயில்

பெருந்துறை

பெருந்துறை நகரின் மையப் பகுதியில் குன்னத்தூர் சாலையில் அமைந்துள்ளது அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயில். இதன் துணை கோயில்களாகக் கோட்டை மாரியம்மன், முனியப்ப சுவாமி கோயில்கள் உள்ளன.



கொங்கு வேளாளர் இனத்தவர்களில் காடைகுலம், மேதிகுலத்தோரின் குலதெய்வமாக இருந்து அருள்பாலிப்பவள் செல்லாண்டி அம்மன். **'பூவாக்கு'** கேட்டு எந்தக் காரியத்தையும் துவங்கிட முனைவர் கொங்கு வேளாள குலத்தவர்.

‘பூவாக்கு கேட்டால் பூவால் பதில் தருவாள்’ நாவார வாழ்த்த நலம் தருவாள் – அம்மன் என்பது பழம்பாடல்.

இந்தத் திருக்கோயிலைப் பற்றிய வரலாறு அரிய **‘செப்பேடு பட்டயம்’** மூலமாக அறிய வந்துள்ளது. பவ ஆண்டு பங்குனி மீ.13ம் நாள் (ஆங்கில ஆண்டு 1886 மார்ச்) அன்று நசியனூர் கவுண்டன் தனது மகளைத் திருமணம் செய்வித்து. காணியாட்சி வாங்கித் தனது மகளை திருமணம் செய்வித்து, காணியாட்சி வாங்கித் தந்ததை உறுதிப்படுத்தும் விவரம் அது, காடை, மேதி குலத்தாரின் குல தெய்வமாக இத்திருக்கோயில் விளங்குவதும் அதிலிருந்து தெரிகிறது.

‘வடக்கு வாயிற் செல்வியாக’ அமர்ந்து அருள்பாலிக்கிறாள் அருள்மிகு செல்லாண்டியம்மன். ஆதிமுதலாகவே, சைவ முறைகளில் வழிபாடு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் கற்றளியாகத் திருத்தியமைக்கப்பட்ட கோயில், கோயிலின் உள்ளே எசவடக் குதிரைகள் இரண்டு கம்பீரமாக நிற்கின்றன.

மகா மண்டபத்தில் இடப்புறம் விநாயகர் சந்நிதி உள்ளது. கருவறை, அர்த்தமண்டபத்தைச் சுற்றி பக்தர்கள் வலம் வரும் வகையில் ‘திருச்சுற்று’ அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் நடைபெறும் **‘பொங்கல் திருவிழா’** மிகவும் சிறப்பானதாகும். பெருந்திரளாக மக்கள் குடும்பத்தோடு வந்து அம்மனுக்குக் கரும்பும் பொங்கலும் படைத்து வழிப்பட்டுச் செல்வார்கள்.

நேர்த்திக்கடனாக **‘அங்கப்பிரதட்சணம்’** செய்வோர் எண்ணற்றவர். கார்த்திகை முதல் வெள்ளியன்று, அம்மன் பூப்பல்லக்கில் திருவீதி உலாவந்து காட்சிதருவதோடு திருவிழா நிறைவுறும்.

‘பூவாக்கு’

தாம் நினைத்த காரியம் நல்லபடி நிறைவேற மக்கள் அம்மன் சந்நியில் **‘பூவாக்கு’** கேட்டு அருள்பெறுவது, செல்லாண்டியம்மன் திருக்கோயிலின் தனிச் சிறப்பு ஆகும்.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.



அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோயில்

குறிச்சி

பவானிக்கு வடக்கே மேட்டூர் செல்லும் சாலைக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. குறிச்சி சித்தாறு அருகில் உள்ளது. சித்தார் எனுமிடத்திற்கு அருகில் உள்ள பூனாச்சியிலிருந்து 8கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

‘வடக்கு வாயிற் செல்வி’ யாக இங்கு சொக்கநாச்சியம்மன் கோயில் கொண்டுள்ளாள். மகிஷாசுரமர்த்தினி, நிசும்பசூதனி, துர்க்கையம்மன் என்றெல்லாம் அழைக்கப்படுபவள் ஆதிபராசக்தி.

அவளையே சாமானியர்கள் குலதெய்வமாகக்கொண்டு மாரியம்மன், செல்லியம்மன், அழகு நாச்சியம்மன் ,

அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கியவாறு தென்திசை நோக்கி விரைந்து செல்லும்போது, உலகவிடங்கர் கோயிலுக்கு மேலே செல்லும்போது அசைவற்றவனாகிவிட்டான்.கீழே.குடிகொண்டுள்ள **'உலகவிடங்கேசுவரரே'** அவனது கவனத்தை ஈர்த்தவராம்.

விடங்கர் என்றால் உளிபடாத திருமேனி என்று பொருள். உலக விடங்கேசுவரர் உளியால் செதுக்கப்படாத, தானே முளைத்தெழுந்த திருமே னியாகும். கிழக்கு திசை நோக்கியபடி அருள் பாலிக்கிறார். அழகிய 3 நிலை இராஜகோபுரமும், மாணிக்கப்பட்டையுடன் கூடிய மதில் சுவரும், நம் கவனத்தை கவருகின்றன.

திருச்சுற்றில் கன்னி மூலையில் கணபதியும், அவரையடுத்து விடங்கரின் சந்நிதியின் பின்னே வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகப்பெருமான் சந்நிதியும் உள்ளன. வடகிழக்கு மூலையில் கஜலட்சுமி சந்நிதி கருவறையைச் சுற்றிலும் தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரம்மா துர்க்கை, சண்டிகேசுவரர், பைரவர் சந்நிதிகள்.

கொங்குச் சோழன் ஆதித்த கரிகாலன் அமைத்த திருக்கோயில்களில் உலகவிடங்கேசுவரர் கோயிலும் ஒன்று. நடுகல் உள்பட, பல அரிய கல் வெட்டுக்களும் சிற்பங்களும் உள்ளன. அவை இராசகேசரி வீரராசேந்திரன் காலத்தவை ஆகும்.

உலக விடங்கேசுவரர் சந்நிதிகள் முன்னே நந்திதேவர் **'பிரதோஷ நந்தி'** யாக அமர்ந்துள்ளார். உற்சவர் திருமேனிகள், கலைநயம் மிக்கவை. மகாமண்டபத்தில் வடபுறம் தனிச் சந்நிதி கொண்டு அருள்பாலிக்கிறாள் உலகநாயகி. அன்பே வடிவான அழகுத் திருமேனியாக.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு உலகேசுவரர் திருக்கோயில், ஓலகடம்.

தொலைபேசி : 04256 - 261774



திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொலைபேசி : 04294 – 223999

கோட்டைமாரியம்மன் திருக்கோயில்

கி.பி.1746யில்மைசூரைஆண்டுவந்தசிக்கதேவனின்பிரதிநிதியாகக் கோவை கோட்டத்தை ஆண்டவர் சங்கரய்யா. அவரே கோட்டை மாரியம்மன் கோயிலைக் கட்டியவர் ஆவார்.

முன் காலத்தில், பெருந்துறை நகரின் எல்லையாக இரு குளங்களும், ராஜபாட்டையில்கோட்டையும்அதன்கிழக்குவாசலில்அம்மன்கோயிலும் இருந்தனவாம் !

பெருந்துறை நகரின் கவால் தெய்வமாக, வடக்கு முகமாக நின்று அருள் செய்பவள் கோட்டை மாரியம்மன், மாரியம்மனோடு முனியப்பசாமியும் காவல் தெய்வமாக அமைந்துள்ளார். வடக்கு நோக்கியுள்ளார் முனியப்பர்.

ஐப்பசி மாதம் நடைபெறும் பொங்கல் திருவிழா மிகச் சிறப்பானதாகும். கம்பம் நட்டு, பூச்சாட்டுடன் துவங்கும் திருவிழா சிறப்பு வாய்ந்தது.

மாவிளக்கும், பொங்கலும் படைத்து அம்மனை வழிபட ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவர். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடுவர்.

நாள்தோறும் இரண்டுகால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில், பெருந்துறை

தொலைபேசி : 04294 - 223565

மின்னஞ்சல் : Sellandiammanmarriamman@gmail.com

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் செயல்பட்டு வருகிறது.



அருள்மிகு
சர்வலிங்கமூர்த்தி திருக்கோயில்
வெள்ளோடு



ஈரோடு – சென்னிமலைச் சாலையில் ஈரோட்டிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது. வெள்ளோடு. வடமுகம் வெள்ளோடு, தென்முகம் வெள்ளோடு என்று இரு பகுதிளாகப் பிரித்துப் பேசப்படுகிறது.

சமணர் காலத்திய கல்வெட்டுக்களும், சமணர் சமய முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர் கோயிலும் அமைந்துள்ளதால், ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டதாகக் கருதலாம்.



அருள்மிகு
உலகேசுவரர் திருக்கோயில்
ஒலகடம்



பவானியிலிருந்து வடமேற்கில், வெள்ளித்திருப்பூர் செல்லும் பாதையல் 15 கி.மீ. தொலைவில் உள்ளது ஒலகடம். **‘உலகடம்’** என்பதை **‘ஒலகடம்’** என்று அழைக்கின்றனர். அந்தியூருக்கு கிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ள **‘உலகவிடங்கம்’** கூட்டுரோடு வழியாகச் செல்வது எளிதானது.

இராமாயணக் கதையுடன் தொடர்பு கொண்டதாகப் பேசப்படுகிறது ஒலகடம்.

காமாட்சியம்மன் தனிச்சந்நிதி கொண்டுள்ளார். திருமாலும் திருமகள் நிலமகளுடன் தனிக் கோயில் கொண்டு சேவை சாதிக்கிறார்.

ஆடி மாதம் இங்கு நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு மிகப் பெரிய ‘கால்நடைச்’ சந்தை நடைபெறுகிறது. குதிரைகள், மாடுகள் மிக அதிக அளவில் விற்பனைக்குக் கொண்டுவரப்படுகின்றன.



நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி - பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு குருநாதசுவாமி திருக்கோயில், அந்தியூர்.
தொலைபேசி : 04256 - 261774.



உண்டியல் காணிக்கைகள்

திருக்கோயில்களில் பக்தர்கள் பிரார்த்தனையாகவும், காணிக்கையாகவும், உபயமாகவும், நேர்த்திகடனாகவும் செலுத்துவோர் அவற்றை திருக்கோயில்களில் இந்து சமய அறநிலையத்துறையால் வைக்கப்பட்டிருக்கும் **உண்டியலிலேயே** செலுத்த வேண்டும்.

வேறுவகையான திட்டங்களுக்கு நிதி அளிப்போர் **திருக்கோயில் அலுவலகத்தில்** அவற்றிற்கு உரிய **அச்சு ரசீது** பெற்றுக்கொண்டு அவைகளை செலுத்திப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- இந்து சமய அறநிலையத்துறை

ஊரின் மையப்பகுதியிலிருந்து ஈரோடு சாலையில் 1 1/2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சர்வலிங்க மூர்த்தி திருக்கோயில் கி.பி.1275-80க்குள் கட்டப்பட்ட கோயில் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். ஜேஷ்டாதேவியின் சிலைவடிவம், திருக்கோயிலினுள்ளே காணப்படுகிறது இதனை உறுதிப்படுத்துகிறது.

மூன்று தள விமானங்கொண்ட கருவறையில் சர்வலிங்க மூர்த்தி எழுந்தருளியுள்ளார். தானே முளைத்தெழுந்த உளிபடாத பெரிய திருமேனி, பெயருக்கேற்ப கம்பீரமான தோற்றம்.

கருவறை வாயிலின் இருபுறமும் துவாரபாலகர்கள் இடம்பெற்றுள்ளனர். சுவாமி, அம்மன் இருசந்திகளுக்கும் பொதுவான பெரிய மகாமண்டபம்.

அன்னை **‘பாடகவல்லி’** என்ற திருநாமத்துடன் ஈசனின் வலப்புறம் எழுந்தருளியுள்ளாள். மதுரை போன்ற ஒரு சில கோயில்களில் மட்டுமே, சுவாமியின் வலப்புறம் அம்பிகை இடம்பெறுகிறாள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அம்மன் சந்நிதி வாயிலிலும் துவார சக்திகள் உள்ளனர்.

கல்வெட்டுக்கள் இத்தலத்தில் கண்டறியப்பட்டுள்ளன. கருங் கல்லினாலான தீபத்தம்பம் உள்ளது. வெளிச்சுற்றில் பரிவார தேவதைகளோடு, விநாயகர், சண்டிகேசுவரர், நவகிரகங்கள் பைரவர் உள்ளனர். முருகப் பெருமான் வடக்கு நோக்கிய சந்திதி கொண்டு அருள்பாலிக்கிறார்.



அருகிலேயே ஆதிநாராயணப் பெருமாள் ஆலயம் உள்ளது.

நாள்தோறும் இரண்டுகால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :
காலை 7.00 மணி - பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி
தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சர்வலிங்கமூர்த்தி திருக்கோயில், வெள்ளோடு.
தொலைபேசி : 04294 - 223565



அருள்மிகு
சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
சென்னிமலை



ஈரோடு மாவட்டம், பெருந்துறையிலிருந்து தெற்கே 15 கி.மீ தொலைவில், 1750 அடி உயரம் கொண்ட மலைக்கோயில். 3000 ஆண்டுகள் பழமையாகக் கருதப்படும் பிரார்த்தனைத் தலம்.

சிரகிரி, சிகரகிரி, மகுடகிரி, புஷ்பகிரி, சென்னியங்கிரி என்று வேறு பல பெயர்களாலும் அழைக்கப்படும் திருத்தலம். தலவரலாற்றை இயற்றியவர் **சரவண முனிவர்** ஆவார். 23 மான்மியங்களையும்,



அருள்மிகு
குருநாதசுவாமி திருக்கோயில்
புதுப்பாளையம், அந்தியூர்

அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையானது, அந்தியூரை அடுத்து உள்ள புதுப்பாளையம் குருநாத சுவாமி கோயில்.

திப்பு சுல்தான் காலத்திலிருந்தே, இங்கு குதிரைச் சந்தை பிரசித்தம். சுல்தானின் குதிரை லாயமும், இங்கு இருந்ததாம், அதன் தாக்கம் இன்னும் சந்தையில் குதிரைகள் கூடுவதைக் காண்கிறோம்.

'குருநாதசுவாமி' என்பது, அப்பனுக்கு புத்திசொன்ன சுப்பன் என்றழைக்கப்படும் முருகப் பெருமானைத்தான். ஆனால் புதுப்பாளையத்திலோ அப்பனும் மகனும் இணைந்தபடி குருநாதசுவாமியாக அருள்பாலிக்கிறார்.

செய்ததாகவும், பெரும் சிவபக்தனாக அவன் விளங்கியதாகவும் கூறுவர். அந்தியூரைச் சுற்றிலும் உள்ள ஏழு சிவாலயங்களை அவன் நாள்தோறும் வழிபட்டதாகவும் கூறுவர். பத்திரகாளியம்மன் திருக்கோயிலின் பின்புறம் கிழக்கு நோக்கி அமைந்துள்ள திருக்கோயில் இதுவாகும்.

மகாமண்டபம் திருச்சுற்று, பலிபீடம், நந்தி ஆகியவை விதிப்படி அமைந்துள்ளன. கன்னிமூலையில் விநாயகரும், வடமேற்கில், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியரும் இடம் கொண்டுள்ளனர். வடகிழக்கில் ஈசான்ய மூலைக்கு அருகில் பைரவரும், நுழைவாயிலின் இருபுறமும் சூரிய சந்திரனும் அமைந்துள்ளனர்.

மகாமண்டபத்தில், கனகசபை உள்ளது. கருவறையில், குடிகொண்டுள்ளவரே செல்லீசுவரர் **'செல்லீசுவரம் உடையார்'** என்று அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வெட்டு அழைக்கிறது. பராசர முனிவர் வழிபட்டதாகத் தலவரலாறு கூறுகிறது. திருச்சுற்றின் உள்ளேயே அன்னை செல்லீசுவரி தனிச்சந்நிதி அமைந்துள்ளது.

நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு செல்லீஸ்வரர் வகையறா திருக்கோயில்,
அந்தியூர் நகர் மற்றும் வட்டம்.

தொலைபேசி : 04256 - 261774.
மின்னஞ்சல் : anthiyurselleeswarar@gmail.com

667 திருவித்தங்களையும் கொண்டதாகும். சென்னிமலை என்றால் தலைமையான மலை என்று பொருள்.

சுமார் மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த பிரார்த்தனைத் தலமாக விளங்கும் சென்னிமலைத் திருக்கோயில் சிவாலயச் சோழ மன்னர்களால் கட்டப்பட்டது ஆகும். 1750 அடி உயரத்தில் அமைந்துள்ள மலைக்கோயில் இது. 1300 படிகளைக் கொண்டது செங்குத்தாக இராமல் எளிதில் ஏறிச் செல்லக் கூடியதாக அமைந்துள்ளது. வாகனங்கள் செல்ல 4 கி.மீ. தூரம் கொண்ட தனிப்பாதையும் உள்ளது.

சென்னிமலையின் அடிவாரத்தில் எட்டு திசைகளிலும், பல்வேறு கோயில்கள் அமைந்துள்ளன. மலையின் தென்புறம் செவ்வந்தீசுவரர், கன்னிமூலையில் இந்திரவிநாயகர், சிவன் கோயிலுக்கு மேற்கில் பெருமாள் கோயில், வடமேற்கில் நர்த்தன விநாயகர், துர்க்கையம்மன் கோயில், ஈசான திசையில் காமாட்சியம்மன் கோயில், அக்னி மூலையில் மாரியம்மன் கோயில், தெற்கே செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில் ஆகிய கோயில்களுக்கு நடுநாயகமாக கைலாசநாதர் கோயில் அமைந்துள்ளது.



ஆதிசேஷனுக்கும், வாயுதேவனுக்கும் பலப்பரீட்சை நிகழ்ந்த போது, மேருமலையை அனந்தன் சுற்றிக் கொண்டு கெட்டியாகப் பிடித்துக் கொள்ள, வாயுதேவன் புயல் போல காற்றை கடுமையாக வீசி, அவனது பிடியிலிருந்து மலையை விடுவிக்க முயன்றார். அப்போது மேருவின் சிகரப்பகுதி முறிந்து பூவுலகில் பூந்துறை நாட்டில் விழுந்ததாம். அதுவே **'சிரகிரி'** என்று அழைக்கப்படுவதாக தலவரலாறு கூறுகிறது.

கொடுமணல் தந்த கோமான் :

நொய்யலாற்றின் கரையில், சென்னிமலைக்கு 5 கி.மீ. தொலைவில் **கொடுமணல்** எனும் கிராமம் உள்ளது. மிகவும் தொன்மையான ஊர். பண்ணையாரின் பசுக்களில் ஒன்று ஓரிடத்தில் தானே வலியச் சென்று பாலைச் சொரிவது கண்டு அதிசயித்து, அந்த இடத்தைத் தோண்டச் செய்தார். அப்போது அவருக்கு கிடைத்தது, அதிசயிக்கத்தக்க முருகப் பெருமான் திருமேனி.

சிலையின் இடுப்புக் கீழே, சிற்பி அரைகுறையாக வேலைப்பாடுகளை செந்திருந்தது கண்டு, அதனை முழுமையாக்கிட பண்ணையார் கருதி, சிற்பி ஒருவரை வரவழைத்தார். உளிகொண்டு சிலையைச் செதுக்கிட முற்பட்டபோது, குருதி பீறிட்டதால், அப்படியே நிறுத்தி விட்டனர்.

மேற்கொண்டு ஏதும் செய்து தெய்வ அபசாரத்திற்கு உள்ளாகக் கூடாதெனக் கருதி, அந்தச் சிலையை அப்படியே அருகில் உள்ள குன்றின் மீது பிரதிஷ்டை செய்தார். அங்கேயே அழகிய திருக்கோயிலும் உருவானது. இன்றும் தண்டாயுதபாணியாக நிற்கும் முருகனின் அருட்கோலத்தை, திருமஞ்சனம் செய்யும் போது உற்று நோக்கினால் இடுப்பிற்கு கீழே சிலையின் வேலைப்பாடுகள் முழுமை பெறாதிருப்பதை உணரலாம்.

கந்தர் சஷ்டி கவசம்


'சஷ்டியை நோக்கச் சரவணபவனார்' என்று துவங்கும் கந்தர் சஷ்டி கவசத்தை உலகம் முழுவதும் முருகபக்தர்கள் மனம் உருகிப் பாராயணம் செய்வதைக் காண்கிறோம். அதனை இயற்றிய தேவராய சுவாமிகள், பாப்பினி எனும் ஊரையடுத்த மட விளாகத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவர் இயற்றிய இந்த அரிய **'போற்றித்துதி'** சென்னிமலை ஆண்டவர் திருக்கோயிலில் தான் அரங்கேற்றப்பட்டது என்பது பெருமைக்குரிய செய்தி ஆகும்.

பின்-நாக்குச் சித்தர்

பதிணென் சித்தர்களின் ஒருவர் புண்நாக்குச் சித்தர் **'பொய் சொன்ன நாக்கு புண் நாக்கு'** என்று எப்போதும் உபதேசித்தவர் அவர். நாக்கினை பின்பக்கமாக மடித்து அருள்வாக்கு கூறிவந்த அவரை மக்கள் **'பின்-நாக்குச் சித்தர்'** என்றே அழைக்கத் துவங்கினர். அவர் தவமிருந்த குகை சென்னிமலையில் உள்ளது. அவர் முக்தி பெற்ற தலமும் இதுவே.

படிகளின் வழியே !

சந்நிதித் தெருவின் முகப்பில் இரண்டு யானைகள் கொண்ட இந்திர விநாயகர் சந்நிதி உள்ளது. அதற்கு மேற்கே படிக்கட்டுகளுடன் கூடிய தெப்பக்குளம் உள்ளது. இது சாகாவரம் பெற்ற மார்க்கண்டேய தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இந்தத் திருக்குளத்தில் தான் தைப்பூசத்



அருள்மிகு செல்லீசுவரர் திருக்கோயில்

அந்தியூர்



அந்தியூர் கோட்டையின் மேற்குப்புறம் அமைந்துள்ளது செல்லீசுவரர் கோயில். கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. **கி.பி.1265 -1285** காலத்தில் கல் வெட்டுக்கள் இரண்டு இங்கு கண்டறியப்பட்டுள்ளன. நஞ்சராயர் காலத்து (கி.பி. 1489 - 1511) கல்வெட்டு ஒன்றும் கோயிலுக்கு நிலதானம் வழங்கிய செய்தியைக் கூறுகிறது.

கன்னடமொழியில் பல கல்வெட்டுக்கள் இக்கோயிலில் கண்டறியப்பட்டுள்ளன.

அந்தியூரைத் தலைநகராகக் கொண்டு **'செல்வக்கடுங்கோ'** என்ற மன்னன் ஆட்சி

தரக்கூடிய செய்தி ஆகும். ஊரின் தெற்குப்பகுதியில் 'அகழியுடன் கூடிய மண் கோட்டை' ஒன்று, மூன்று சுற்றுக்களுடன் நதியோரம் இருந்ததாம். இன்று அந்தப் பகுதிக்குள் இருந்த செல்லீசுவரர், அழகுராசப் பெருமாள் மற்றும் பத்திரகாளியம்மன் திருக்கோயில்கள் மட்டுமே உள்ளன.

வடக்கு வாயிற் செல்வியாக பத்திரகாளியம்மன் திருக்கோயிலும், அதன் முன்னே அறுபது அடி நீளமுள்ள 'குண்டம்' உள்ளது. குண்டத்திற்கு மேற்கில் கணபதி இடம் கொண்டுள்ளார். திருக்கோயிலின் வாசலில் நீலன், நீலி பூதகணங்கள் சுதைவடிவில் இடம் பெற்றுள்ளனர். கோயிலின் கிழக்குப் பகுதியில் 'களப்பலி' தந்த வீரர்கள், மன்னர்கள் மனைவியருடன் இருக்கும் சிலைகள் உள்ளன.

மகா மண்டபத்தில் விநாயகர், தண்டபாணி ஆகியோருடன் கிழக்கு நோக்கியபடி உள்ளனர். கருவறையினுள்ளே அன்னை பத்திரகாளியம்மன், மகிஷாசுரமர்த்தினியாகக் காட்சி தருகிறாள்.

பங்குனி மாதத்தில் கொடியேற்றத்துடன் குண்டம் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும். கொடியேற்றத்திலிருந்து குண்டம் வரை நாள்தோறும் பத்திரகாளியம்மன் ஒருவாகனத்தில் அமர்ந்தபடி வீதி உலா வருவது கண்கொள்ளாக் காட்சி ஆகும். மஞ்சள் நீராட்டுடன் திருவிழா நிறைவுபெறும்.

குண்டம் திருவிழா தவிர, சித்திரா பௌர்ணமி, தீர்த்தக்குடத் திருவிழா, 108 சங்காபிஷேகம், துர்க்காஷ்டமி போன்ற நாட்களிலும் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 8.00 மணி – பகல் 12.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 8.30 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு பத்திரகாளியம்மன் திருக்கோயில், அந்தியூர்.
தொலைபேசி : 04256 – 261774.

திருநாளில், **'தெப்ப உற்சவம்'** நடைபெறும்.

சில படிகளை ஏறியதும் ஒரே வரிசையில் கடம்பவனேசுவரர், கந்தவேள், இடும்பன் சந்நிதிகள், அதனையடுத்து மேலே மண்டபத்தில் வள்ளியம்மன் பாதம். அதனையும் கடந்து சென்றால் முருகப் பெருமானின் நவவீரர்களில் ஒருவரான **'முத்துக்குமார சரவணன்'** சந்நிதி உள்ளது.

கோயிலுக்கு மேலே ஆற்றுமலை விநாயகர் சந்நிதி. இவரை ஆதிவிநாயகர், ஆத்தி விநாயகர் என்றும் அழைப்பர். விநாயகர் கோயிலுக்கு மேலே **'துரட்டி மரம்'** உள்ளது. தீவினைகளைத் துரத்தியடிக்குமாம் இந்த மரம். அதனால் **'துரட்டி'** என்று பெயர் வந்ததாம்.

ஞானதண்டாயுதபாணியாக

இப்போது, சென்னிமலை ஆண்டவர் சந்நிதிக்கு அருகில் உள்ளோம். உள் சுற்றின் தென்பகுதியில் இமையவல்லியுடன் கூடிய மார்க்கண்டேசுவரர், கன்னிமூலையில் விநாயகர், வடக்கு பகுதியில் விசாலாட்சியுடன் காசிவிசுவநாதர் சந்நிதிகள்.

நடுநாயகமாக, சென்னிமலையாண்டவரின் திருச்சந்நிதி உள்ளது. வலது கரத்தில் ஞானதண்டாயுதத்தை ஏந்தியபடி, இடது கரத்தை இடுப்பில் வைத்தபடி பெருங்கருணை கொண்ட பேரழகனாக, பேரருளாளனாக பேரொளியுடன் காட்சி தருகிறார். இந்தப் பேரழகினை தரிசிக்கத்தானே இத்தனை படிகளையும் சிரத்தையுடன் ஏறிவந்தோம் என்ற மனநிறைவு ஏற்படுகிறது.

வள்ளி தெய்வானை



ஆண்டவர் கோயிலுக்கு மேற்கே சில படிகள் ஏறிச் சென்றால், முருகப்பெருமானையே மணந்திட வேண்டும் என்று கடும் தவம் மேற்கொண்டு அழகனின் திருவருள் பெற்ற அமிருதவல்லி, சுந்தரவல்லி ஆகியோர் வள்ளி, தெய்வானையாக சிலை வடிவில் உள்ளனர். ஒரே கற்சிலையாக இருவரும் ஒரே பீடத்தில் இருபுறம் நிற்க, நடுவில் கீழே ஒரு சிவலிங்கத் திருமேனியும் உள்ளது.

இந்தச் சந்நிதிக்கு பின்புறம் மேலும் சில படிகளைக் கடந்து சென்று **'பின்**

நாக்குச் சித்தர்' சந்நிதியை அடையலாம். **"தன்னாசி அப்பன்"** கோயில் என்றும் இதனை அழைப்பர்.

புனித தீர்த்தங்கள்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும், ஒரு திருத்தலத்திற்குப் பெருமை சேர்ப்பவை ஆகும். சென்னிமலையின் சிறப்புக்கு மலையில் உள்ள **'எண்ணற்ற தீர்த்தங்களும்'** குறிப்பிடத்தக்கவை. இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், இயம தீர்த்தம், காசிப தீர்த்தம், பட்சி தீர்த்தம், சிவகங்கை தீர்த்தம், மாமாங்கத் தீர்த்தம், வரடி தீர்த்தம், காளி தீர்த்தம், தேவி தீர்த்தம், செங்கழுநீர் வாவி, விஷ்ணு தீர்த்தம்,பிரம தீர்த்தம், நவவீர தீர்த்தம், சாரதா தீர்த்தம் ஆகியவை இவை.

மலையின் பின்புறம் சரிவில் உள்ளவை மாமாங்க தீர்த்தமும், பட்சி தீர்த்தமும் ஆகும். பட்சி தீர்த்தத்து நீர், அரிய மருத்துவ குணங்களைக் கொண்டதாம்.

திருமஞ்சன நீர், பொதி காளைகள் படியேறி !

சென்னிமலைஆண்டவருக்குத்திருமஞ்சனம்செய்திடவும்,நைவேத்தியம் படைத்திடவும், **'திருமஞ்சன நீரை'** இரண்டு பொதி காளைகள் 1320 படிகள் வழியே மலைக்கு கொண்டு செல்லும் சிறப்பு தமிழகத்தில் வேறு எங்கும் காணக்கிடைக்காத சிறப்பு.

முதன் முதலாக இருபத்தி ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இரட்டை மாட்டு வண்டி மலைப்படிகளில் ஏறிய அதிசயம் கண்ட தலம் இது.

அருணகிரி நாதருக்கு படிக்காசு

சென்னி ஆண்டவர் மீது அற்புதமான **'திருப்புகழ்'** பாடிய அருணகிரி நாதர் முருகப் பெருமானிடம் **'படிக்காசு'** பெற்றார்.

சிரசுப்பூக் கேட்டல்



தங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளைத் துவங்கிடவும், சென்னி ஆண்டவரிடம் உத்திரவு பெறுவது இப்பகுதியில் தொன்றுதொட்டு நடைபெறுகிறது.



அருள்மிகு
பத்திரகாளியம்மன் திருக்கோயில்
அந்தியூர்



பவானிக்கு வடமேற்கில், 16 கி.மீ. தொலைவில், கோபி – மேட்டூர் சாலையில் அமைந்துள்ளது. ஈரோட்டிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது.

கொங்கு நாட்டில் வடகரை நாட்டின் தலைநகராகத் திகழ்ந்தது அந்தியூர். பர்கூர் மலைச் சாரலில் அமைந்த ஊர். பவானி நதிக்கு வடகரையில் உள்ளது,

'அகநானூறு'ல் 71ம் பாடலைப் பாடிப் புகழ்ப்பெற்ற புலவர் **'அந்தி இளக்கீரனார்'**, அந்தியூரைச் சேர்ந்தவர் என்பது பெருமை

வேண்டுதலை நிறைவேற்றி **'அலகு'** குத்தியபடி அணிவகுக்கும் பக்தர்களை, பங்குனி மாதம் நடைபெறும் 15 நாட்கள் திருவிழாவில் காணலாம். குழந்தைகளைத் தூக்கியவண்ணம் தாய்மார்களும் குண்டத்தில் இறங்கி ஓடுவது, பக்திப்பரவசத்தைத் தரும் காட்சியாகும்.

48 நாட்கள் விரதமிருக்கும் பெண்கள், மாவிளக்கேற்றி, முளைப்பாரியைத் தலையில் சுமந்த வண்ணம் வருவது, வழிவழியாகக் கொங்குநாட்டுப் பெண்கள் கடைப்பிடிப்பதாகும்.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – இரவு 8.00 மணிவரை

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோயில், கூத்தம்பூண்டி.
தொலைபேசி : 04256 261774.



'பூ' ஜோசியம்

'தேக்கம்பட்டி' வனபத்திரகாளியம்மன் திருக்கோயில், உதகை செல்லும் வழியில் மேட்டுப்பாளையம் அருகில் உள்ளது. மிகவும் வரப்ரசாதியாகக் கருதப்படும் வனப்பத்திர காளியம்மனுக்குப் பலவகையான பிரார்த்தனைகள் செலுத்தப்படுகிறது.

'பூக்கேட்டல்' – புதிதாகத் தொழில் துவங்கிட விரும்புவோர், அம்மன் முன் **'பூ'** போட்டு, கேட்பது வழக்கம்.

'தாலியை உண்டியலில் சேர்த்தல்' – தாங்கள் நினைத்த காரியங்கள் செவ்வனே முடிந்தால், பெண்கள் தங்கள் கழுத்தில் உள்ள திருமாங்கல்யத்தை உண்டியலில் போட்டு, நேர்த்திக்கடன் செலுத்துவதும் இங்கு வழக்கத்தில் உள்ளது.

முருகப் பெருமானுக்கு சிறப்பு அர்ச்சனை செய்து, **'சிரசுப்பூ'** கேட்டு நல்ல உத்திரவு கிடைத்த பின்பு, மன நிறைவு பெற்று செயல்படுவது வழக்கமாகியுள்ளது.

கோஷ்ட தேவதைகளாக நவக்கிரகங்கள்

சென்னி ஆண்டவர், செவ்வாய் கிரத்துக்குரிய அதி தேவதையாகும் சிறப்பைப் பெறுவது சென்னிமலையில் தான்! கருவறையில் நடுநாயகமாக செவ்வாய் கிரகமாக அமைந்து, மூலவரைச் சுற்றியுள்ள தேவ கோஷ்டங்களில் பிற எட்டு கிரகங்களும் இடம் பெற்றுள்ள சிறப்பு சென்னிமலையில் மட்டுமே!

அடிவாரக் கோயில்

சென்னிமலையின் அடிவாரத்தில் கைலாசநாதர் திருக்கோயில் அழகிய நான்கு வீதிகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. சென்னிமலை தலபுராணத்தை எழுதிய சரவண மாமுனிவர் வழிபட்ட அறுபத்து மூவர் திருமேனிகள் இங்கு உள்ளன. ஐந்து நிலைகளுடன் கூடிய இராஜ கோபுரத்துடன் கூடிய திருக்கோயில், மேற்கு வாசலில் மூன்று நிலை கோபுரம் உள்ளது. கைலாசநாதர், பெரியநாயகி அருள்பாலிக்கும் திருக்கோயில்.



சென்னிமலைக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ள பிடாரியூரில், திருமுகமலர்ந்த நாகர், திருந்தார் குழலியம்மை அருள்பாலிக்கும் திருக்கோயில். திருக்கைநாராயணப்பெருமாள்சந்நிதியும் இக்கோயிலுள்ளே உள்ளது. மைசூர் ஹைதர்அலி இக்கோயிலுக்கு, நிலங்களை இனாமாக வழங்கியுள்ளார்.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

பேருந்து வசதி

பக்தர்கள் அடிவாரத்திலிருந்து மலைக் கோயிலுக்குச் செல்ல திருக்கோயில் மூலம் இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மாதந்தோறும் திருவிழாக்கள்

மாதந்தோறும் வளர்பிறை சஷ்டி நாளன்று, சஷ்டி விரதமிருக்கும் எண்ணற்ற பக்தர்கள், மலைக்கோயிலில் குவிகின்றனர். தமிழ்ப்புத்தாண்டு வைகாசி விசாகம், ஆடிக்கிருத்திகை, நவராத்திரி, கந்தர் சஷ்டி, சூரசம்காரம், மாசிமகம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்கள் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

தைப்பூசத்தையொட்டி நடைபெறுவது திருக்கோயிலின் பெருவிழா ஆகும். நாள்தோறும் ஆறுகால பூசை சிறப்புடன் நடைபெறுகின்றது. இத்தலத்தின் குடமுழுக்கு கடந்த 07.07.2014 அன்று சிறப்பாக நடைபெற்றது.




வேங்கை மரத்தேர்

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி – இரவு 8.00 மணி
(மதியம் நடை சாத்துவதில்லை)

தொடர்பு முகவரி: செயல் அலுவலர்,
அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில்,
சென்னிமலை, பெருந்துறை வட்டம்.
தொலைபேசி : 04294 -250223
மின்னஞ்சல் : chennkovil@gmail.com

இத்திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் செயல்பட்டு வருகிறது.



அருள்மிகு
சொக்க நாச்சியம்மன் திருக்கோயில்
கூத்தம்பூண்டி

பவானிக்கு மேற்கில் சக்திநாதர் வழியே அத்தாணி செல்லும் பாதையில் உள்ளது கூத்தம்பூண்டி.

நானூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருக்கோயில், மிகப் பெரிய குண்டத்துடன் அமைந்துள்ளது.

பவானி வட்டத்திலே, வேறு எங்கும் காணாத வகையில் அறுபது அடி நீளம் கொண்ட **‘குண்டம்’** அமைந்த அழகிய திருக்கோயில்.

எட்டு கரங்களோடு, அசுரனை வதம் செய்யும் கோலத்தில், அசுரனின் உடலை மிதித்த வண்ணம் அமர்ந்த கோலத்தில் அழகு சொக்க நாச்சியம்மன் அருள்பாலிக்கிறாள்.

என்பது கொங்கு நாட்டவரின் அசையா நம்பிக்கை.

ஊருக்கு வெளியே சற்றுத் தொலைவில் அமைந்துள்ள திருக்கோயில், எண் கரங்களுடன் அசுரனைக் காலால் மிதித்தபடி அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கிறாள் கொண்டத்துக்காளி.

வெள்ளி, செவ்வாய் ஆகிய நாட்களில் பெருந்திரளாக மக்கள் கூடுவர். அம்மனுக்குப் பொங்கலிட்டு மாவிளக்கேற்றி வழிபாடு செய்வது, பெரும் எண்ணிக்கையில் காணலாம். நாள்தோறும் மூன்று கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி - பகல் 11.00 மணி

மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி.

தொடர்பு முகவரி:

செயல் அலுவலர்,

அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில்,

கவுந்தபாடி, ஈரோடு.

அலைபேசி : 7373684780

அரதைப் பெரும்பாழி

சம்பந்தர் பெருமானின் பாடல் பெற்றதலம் **'அரித்துவார மங்கலம்'** என்றழைக்கப்படுகிறது. அழலுருவாய், கோடி சூரிய பிரகாசராக நின்ற இறைவனின் திருவடியைத் தேடி திருமால் வராக உருவத்துடன், பெரும் பள்ளதைத் தோண்டியபடி பாதாளம் வரை சென்றார் என்றும், அரியால் பெரும் பள்ளம் தோண்டப்பட்ட இடம் **'அரதைப் பெரும் பாழி'** என்றும் பெயர் பெற்றது. ஆலயத்தின் கருவறையில் சிவலிங்கத் திருமேனியின் முன்னே, உள்ள பள்ளத்தை வட்ட வடிவம் கொண்ட கல்லினால் மூடப்பட்டுள்ளதைக் காணலாம். எம்பெருமான் பாதாளேசுவரர் என்று திருநாமங்கொண்டுள்ளார்.

அருகிலேயே கோடிசூரியபிரகாசராக பேரொளி கொண்டு நின்ற பெருமானை கண்டு பயந்ததால் **'பயஹரி'** என அழைக்கப்பட்ட தலம் தற்போது **'பயரி'** என ஆகியுள்ளது. எம்பெருமான் **'கோடி சூரியப்பிரகாசம்'** என்று திருநாமங் கொண்டுள்ளார்.



அருள்மிகு நாகேசுவரர் திருக்கோயில்

விஜயமங்கலம்

ஈரோடு மாவட்டம் ஈரோடு - கோவை நெடுஞ்சாலையில் பெருந்துறைக்கு மேற்கில் 10கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது விஜயபுரி எனும் விஜயமங்கலம்.

இறைவன்மேற்குநோக்கியபடிஎழுந்தருளியுள்ளதிருத்தலங்கள் **'தோஷ பரிகாரத் தலங்களாகக்'** கருதப்படுகின்றன. விஜய மங்கலத்தில் உள்ள அருள்மிகு நாகேசுவரர் திருக்கோயிலும், மேற்கு திசை நோக்கியபடி அமைந்துள்ளது.

கொங்கு சோழர் கல்வெட்டுக்கள் உள்ளன. திருக்கோயிலின் எதிரில் அழகிய தீபத்தம்பம், கொங்கு நாட்டுப் பாணியை உறுதிப்படுத்துகிறது. முகமண்டபத்தின் தூண்கள் அழகிய சிற்பங்களைக் கொண்டுள்ளன.

கருவறை கற்றளியாக அமைந்து, அழகிய விதானத்துடன் கூடியது. சுவரின் நெற்றியில் யாளிவரிசை, பூதகணங்கள், நாட்டிய மங்கைகள் அழகிய சிற்பங்களாக அழகூட்டுகின்றன.

மூலவர் நாகேசுவரர், மேற்கு நோக்கியபடி எழுந்தருளியுள்ளார். பெரிய திருமேனி அன்னை பெரியநாயகி திருச்சுற்றில் நாகேசுவரருக்கு இடதுபுறம் தனிச்சந்நிதி கொண்டுள்ளாள். ஈசுவரன் கருவறையைச் சுற்றிலும் திருக்கோயிலின் பழமையைப் பறைசாற்றும் கல்வெட்டுக்கள் உள்ளன.

மகாமண்டபத்தில், தெற்கு முகமாக, ஆறுமுகப் பெருமான் மயில் வாகனராக எழுந்தருளியுள்ளார்.

நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 11.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு நாகேசுவரர் திருக்கோயில், விஜயமங்கலம்.

தொலைபேசி : 04294 -262052

எண்குணத்தீசன்

ஒன்றவன் தானே
இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள்
நான்கு உணர்ந்தான் ;
ஐந்து வென்றனன்
ஆறு விரிந்தனன்
ஏழும்பர்ச் சென்றனன்
தானிருந் தான் உணர்ந்து எட்டே !

– திருமந்திரம்.



அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில்

கவுந்தபாடி



பவானி – கோபி செல்லும் பாதையில் மேற்கில் 12 கி.மீ. தொலைவில் உள்ளது கவுந்தபாடி.

கொங்கு நாட்டில் ஏழு **'கொண்டத்துக் காளியம்மன்'** திருக்கோயில்கள் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வடக்கு நோக்கிய நிலையில் உள்ள இத்திருக்கோயிலில் மிகவும் பழமையானது.

கொண்டத்துக் காளியம்மன் துணையிருந்தால், வாழ்வில் வளம் பெறலாம். எதனையும் வெற்றி கொள்ளலாம்

திருச்சுற்றில் அறுபத்துமூவர், வீரபத்திரர், ராமநாதேசுவரர், பருவதவர்தனி, பாலதண்டாயுதபாணி, பஞ்சபூதலிங்கங்கள், கல்யாண சுப்பிரமணியர், சனீசுவரர் (தனி சந்நிதியில்) நவகிரகங்கள் இடம் பெற்றுள்ளனர்.

பசுமை நிறைந்த பூஞ்சோலைகளுக்கிடையே, கூடுதுறையை எதிர்நோக்கியபடி அமைந்துள்ள பவானி சங்கமேசுவரர் திருக்கோயில், வணங்கிடுவோர் வாழ்வினை வளமாக்கிடும்.

ஆண்டு முழுவதும், மாதந் தோறும், சிறப்பு வழிபாடுகள் பல நடைபெற்று வருகின்றன. சித்திரை மாதத்தில் நடைபெறும் திருவிழாவே பெருந்திருவிழா ஆகும்.

நாள்தோறும் ஆறுகால வழிபாடு நடைபெறுகிறது.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 6.00 மணி - பகல் 12.00 மணி வரை
மாலை 4.00 மணி - இரவு 7.30 மணி வரை

தொடர்பு முகவரி:

செயல் அலுவலர்,
அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயில், பவானி வட்டம்
தொலைபேசி : 04256 -230192
மின்னஞ்சல் : tn.eosangameswarar@gmail.com





அருள்மிகு கரிவரதராஜப் பெருமாள் திருக்கோயில்

விஜயமங்கலம்

பெருந்துறைக்கு மேற்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ள விஜயமங்கலத்தில் அமைந்துள்ள வைணவ ஆலயம் கரிவரதராஜப் பெருமாள் திருக்கோவில். நாகேசுவரர் திருக்கோயிலைப் போலவே, கரிவரதராஜப் பெருமாள் திருக்கோயிலும் மிகவும் பழமையானது ஆகும். கொங்கு மண்டல சதகம் எனும் நூலில் விஜய மங்கலத்தைப் பற்றிய அரிய குறிப்புக்கள் உள்ளன.

திருக்கோயிலை எதிர் நோக்கியபடி அமைந்த தீபத்தம்பமும், முகமண்டபமும், ஒரே காலத்தில், இப்பகுதியில் அமைக்கப்பட்ட திருக்கோயில்களின் பாணியை குறிக்கின்றன. மகாமண்டபத்தில் மிகவும் பழமையான ஆஞ்சநேயர் திருமேனி உள்ளது. கருவறையில் நிலமகள், திருமகளுடன் கரிவரதராஜப் பெருமாள் எழுந்தருளியுள்ளார்.

முதலை வாயில் சிக்கிக் கொண்ட கஜேந்திரன் என்ற யானைக்கு அருளிய திருமால், **'கரிவரதராஜன்'** எனத் திருநாமம் கொண்டுள்ளார்.

நாள்தோறும் ஒரு கால வழிபாடு நடைபெறுகிறது. சனிக்கிழமை, பௌர்ணமி நாட்களில் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :
காலை 7.00 மணி – பகல் 11.00 மணி
மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி
தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு கரிவரதராஜப் பெருமாள் திருக்கோயில், விஜயமங்கலம்.
தொலைபேசி : 04294 -262052

சீர்வரிசை பெறும் ரங்கநாதர்

திருவரங்கம் திருத்தலத்தில், ரங்கநாதர் பெருமாள் தீபாவளிப் பண்டிகை கொண்டாடும் முறை, வித்தியாசமானது. தீபாவளியை முன்னிட்டு, முந்தைய நாள் கோயில் சிப்பந்திகள் அனைவருக்கும் நல்லெண்ணெய், சீயக்காய்த்தூள், இனிப்புகள் ஆகியவை பெருமாள் சார்பில் வழங்கப்படும்.

தீபாவளியன்று விடியற்காலையில் மூலவர் உற்சவர்களுக்கு, புத்தாடை, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, ஆசாரியர்களோடு, புறப்பட்டு, பெரிய சந்நிதிக்கு கிழக்கிலுள்ள கிளிமண்டபத்திற்கு வந்து பெருமானுக்காகக் காத்திருப்பார். அப்போது பெருமாளின் மாமனார் நம்மாழ்வார், மாப்பிள்ளைக்கு சீர் தருவதற்காக காத்திருப்பார்.

காலை பத்துமணியளவில், பெரிய சந்நிதியிலிருந்து உற்சவர் நம்பெரும ாள், மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு, சந்தனுமண்டபம் வருவார். அங்கு திருமஞ்சனம் முடிந்து சிறப்பு அலங்காரத்துடன் எழுந்தருளுவார். அப்போது நம்மாழ்வாரின் பிரதிநிதியாக அரையர்கள் சீர் வழங்குவர். பெருமாள் திருவடிகளைச் சுற்றி நாணய மூட்டைகள் வைக்கப்படும். அவையே சீர்வரிசை, ஆயிரம் ஒரு ரூபாய் நாணயங்களை, புதிய தைலிகளில் மூட்டையாகக் கட்டி பெருமானின் திருவடிகளில் மேளதாளம் முழங்க, வேதபாராயணம், நாதசுவர இசையோடு சமர்ப்பிப்பர்.

பெயரும், அதனைக் காணிக்கையாக்கிய நாளாகிய 11.1.1804ல் அதில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

பிறமதத்தவரையும் தனது அடியார்களாகச் சேர்த்துக் கொள்ளும் பெருமையை, பவானியில் நிகழ்ந்த இந்த அற்புதம்! விளக்குகிறது. அல்லாத சாதிகளும்,அங்குஅழல்மேல்கைகூப்பஅடியார்கூடி...என்றுஞானசம்பந்தர், ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே பாடி விட்டாரே.

நான்கு கரங்களோடு நின்ற கோலத்தில் காட்சி தரும் வேதநாயகி அம்மன் தரிசனம் நினைவை விட்டு நீங்காதபடி இந்த அற்புதமும் நம் உள்ளத்தில் இடம் பெறுகிறது. அர்த்தமண்டபத்தில் விநாயகர், நாகரோடு, திருச்சுற்றில் சப்தமாதர், சண்டிகேசுவரி இடம் கொண்டுள்ளனர்.



அம்மன் சந்நிதியையொட்டி சண்முகசுப்பிரமணியர் சந்நிதி, அருணகிரிநாதரால் போற்றிப்பாடப்பட்ட சந்நிதி, அருகிலேயே விசாலாட்சியுடன் காசி விசுவநாதர் எழுந்தருளியுள்ளார். அடுத்துப் பிணி தீர்க்கும் **'சுரகசேசுவரர்'** சந்நிதி.

அபிஷேக மண்டபத்தினருகில் அமுதலிங்கேசுவரர், சகஸ்ரலிங்கேசுவரர், காயத்ரி லிங்கேசுவரர் சந்நிதிகள் உள்ளன. தலமரம் இலந்தை மரத்தை வலம் வந்து சங்கமேசுவரர் சந்நிதிக்குச் செல்ல வேண்டும்.

சங்கமேசுவரர்

பலிபீடம், கொடிமரம், தீபத்தம்பம் ஆகியவற்றைக் கடந்து நண்ணாவுடையார், சங்கமேசுவரர் சந்நிதியை அடைவோம். சங்கமுகநாதர், வக்கிரேசுவரர், மருத்துலிங்கம், அழகேசன், வானிலிங்கேசுவரர், நட்டாற்றீசுவரர் என்று எத்தனையோ பெயர்கள் அவருக்கு!

நண்ணாவில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தாய் **'சங்கமேசுவரர்'** பராசரர், விசுவாமித்திரர் ஆகிய முனிவர்களால் வழிபடப்பட்டவர். நிம்மதி தரும் தரிசனம் !...

கருவறையைச் சுற்றிலும் பரிவார தேவதைகள். ஆலமர் செல்வர் சந்நிதியில் அமைந்த மண்டபத்தின் சிற்பவேலைப்பாடுகள் பிரமிக்க வைக்கின்றன. கற்சங்கிலிகள் அனைவரின் கவனத்தையும் கவர்வன ஆகும்.

கோவைப்பகுதியை நிர்வகித்தவர், வெள்ளைத்துரை வில்லியம் காரோ! திருக்கோயில் அருகே கூடுதுறைக்கு திரளாக மக்கள் வந்து நீராடி விட்டு, அன்னை வேதநாயகியை தரிசித்துச் செல்வதை, பயணியர் இல்லத்திலிருந்தே உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளார். அன்னையின் கருணையைப் பற்றியும் திருவருளைப் பற்றியும் காண்போர் எல்லாம் புகழ்ந்துரைப்பது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது ! அந்த அருட்கோலத்தை நான் காண முடியுமா? எனக் கேட்க, பிறமதத்தவர் திருக்கோவிலுக்குள் வர அனுமதி இல்லை என்ற மரபினைச் சுட்டிக் காட்டினர். அதே நேரத்தில், அவருடைய உதவியாளர் ஒருவர் துரையின் பேராவலைப் புரிந்து கொண்டு அவருக்கு உதவ முன் வந்தார்.

அன்னை வேதநாயகி சந்நிதி எதிரே உள்ள சுவரில் மூன்று துவாரங்களைச் செய்து, அதன் மூலம், மங்கிய ஒளியில் சுடர்விடும் பேரொளியைக் கண்டு ஆனந்தம் கொண்டார் ஆங்கிலேயத்துரை. இப்படியே பல நாட்கள் கடந்தன. ஒருநாள் இரவு..., ஆய்வாளர் மாளிகையினுள் படுத்துறங்கிக் கொண்டிருந்தார் சீமைத்துரை, வானில் கருமேகங்கள் சூழ்ந்திட, இடியுடன் கூடிய மின்னல் பளிச்சிட்டது. காரோவின் அருகே யாரோ ஒருவர் நெருங்கி வந்து அவரைத் தட்டியெழுப்புவது போல உணர்ந்தார். அரைத் தூக்கத்தில் கண் விழித்த அவரை ஒரு சிறுமி தனது பிஞ்சுக்கரத்தின் சைகையால் வெளியே வரும்படி அழைப்பதை உணர்ந்தார். மந்திரத்தால் கட்டுண்டவர் போல, எழுந்து வெளியே வந்தார் துரை.



அப்போது அந்த அதிசயம் நிகழ்ந்தது ! துரை வெளியே வந்த சில விநாடிகளில் இடி தாக்கி அந்தக் கட்டிடம் இடிந்து நொறுங்கியது. அவர் மழையில் நனைந்தபடியே தன்னை வலுக்கட்டாயமாக வெளியே இழுத்து வந்து தன் உயிரைக் காத்த அந்த சிறுமியை நோக்கினார். அவளோ திருக்கோயில் அம்மன் சந்நிதிக்குள் ஓடி மறைந்ததை அவர் மட்டுமே உணர்ந்தார்.

அன்னையின் கருணையை வியந்த அந்த அயல்நாட்டுத் துரை, தனது நன்றிக் காணிக்கையாக தந்தத்தினாலே செய்யப்பட்ட கட்டில் ஒன்றைச் செய்து வேதநாயகிக்கு காணிக்கையாக்கினான். அவரது



அருள்மிகு
சந்திரமௌலீசுவரர் திருக்கோயில்
திங்களூர்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் உள்ள திருத்தலம் திங்களூர். ஈரோட்டிலிருந்து 26 கி.மீ. பெருந்துறைக்கு வடமேற்கில் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. **‘பிறையணியும் பெருமான்’** என்பதே சந்திரமௌலீசுவரர் என்பதன் தமிழாக்கம் ஆகும். தக்கனின் சாபத்தினால், உருக்குலைந்து தேய்ந்து வந்த சந்திரனுக்கு அபயம் தந்து, தனது சிரத்தில் ஈசுவரன் அணிந்து கொண்டதால் **‘சந்திர மௌலீசுவரர்’** ஆனார்.

திங்களூர் வரலாற்றுச் சிறப்பு மிக்க வாணிகத்தலமாக விளங்கியது மதுரை–சத்தியமங்கலம், கோவை–பவானி வாணிகப் பெருவழியும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளதால், இங்கு பல்

வேறு திக்கிலிருந்தும் வணிகர்கள் கூடினர்.

திங்களூரின் வடமேற்கு எல்லையில் சந்திரமௌலீசுவரர் திருக்கோயில் அமைந்துள்ளது. திருக்கோயிலின் முன்புறத்து முகமண்டபத்தில் அழகிய சிற்பங்களோடு, அரிய செய்தியைக் கூறும் கல்வெட்டும் உள்ளது. கி.பி. 1010ம் ஆண்டில் கொங்கு நாட்டை ஆண்ட சேரநாட்டான் விக்கிரம சோழதேவனின் ஆட்சிக் காலத்தில் இந்தக் கல்வெட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திங்களூர் சிவாலயம் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது தெளிவாகிறது.

விமானத்துடன் கூடிய கருவறை, அர்த்தமண்டபம், முகமண்டபம், திருச்சுற்று ஆகியவற்றோடு, பலிபீடம், பரிவார தேவதைகள் சந்நிதிகளும் உடையது. திருக்கோயிலுக்கு வெளியே **'தீபத்தம்பம்'** கொங்குநாட்டின் தனித்தன்மைக்குச் சான்றுரைக்கிறது.

கருவறையில் உளள சிவலிங்கத் திருமேனி, கம்பீரமாகக் காட்சி தருகிறது. திங்களூருக்கு அபயம் அளித்த பேரருளாளனாக சந்திரமௌலீசுவரர் அருள்பாலிக்கிறார். அன்னை பெரிய நாயகி, தனிச்சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

திருக்கோயிலுக்கு வெளியே உள்ள தீபத்தம்பம் அருகில் தனது தலையைத் தானே அரிந்து கொள்ளும் **'நவகண்டச் சிற்பம்'** ஒன்று உள்ளது. நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி – பகல் 11.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சந்திரமௌலீசுவரர் திருக்கோயில், திங்களூர்.
அலைபேசி : 94439 44640

இவை தவிர, சனகாதி முனிவர்கள், விசுவாமித்ரர், கலிங்கத்துமன்னன், அவந்தி நாட்டு சங்கோசன், பிங்கலை என்ற கணிகைக்கு திருவருள் கிட்டியது, மதுகைடபர் கைப்பற்றிய வேதங்கள் மீட்டக்கபட்டு, மீண்டும் முறையாகச் செய்தது போன்றவையும் தலவரலாற்றில் இடம் பெற்றுள்ளன.

ஆதிகேசவப் பெருமாள்



இராஜகோபுரத்தைக் கடந்து சென்றால், இராஜவிநாயகர், முத்துக் குமாரசுவாமி சந்நிதிகள். அவற்றை அடுத்து மேல் புறம் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும், சௌந்தரவல்லித் தாயார் சந்நிதியும் உள்ளது. இவற்றிற்கு இடையே இலட்சுமி நரசிம்மர் சந்நிதி அமைந்துள்ளது. ரங்க மண்டபம் என்றழைக்கப்படும் மகாமண்டபம், இதன் வடபுறம் வேணுகோபால் சுவாமி சந்நிதி உள்ளது. மண்டபத்தில் இராமானுஜர், நம்மாழ்வார், ஆஞ்சநேயர் மற்றும் நவநீதகிருஷ்ணன் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

ஆதிகேசவப் பெருமாள், சௌந்தரவல்லித் தாயார் சந்நிதிகளுக்கு முன்பு உள்ள திருமண மண்டபத்தில் அழகிய கதை சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் பெருமானும், தனது தேவாரப் பதிகத்தில் **'பூமியளந்தானும் போற்ற மன்னி'** என்று கூடுதுறையில் எழுந்தருளியுள்ள பெருமாளைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

வேதநாயகி அம்மன்



'பண்ணார் மொழியாள்' என்று கல்வெட்டுக்கள் கூறும் அன்னை வேதநாயகி சாதி, மொழி, இனம் அனைத்துக்கும் அப்பாற்பட்டவள். இல்லாவிட்டால், ஆங்கிலேய கலெக்டர் வில்லியம் காரோவுக்கு, அவள் மீது எப்படி அத்தனை ஈடுபாடு பிறந்திருக்கும்? ஆம்! 1802ல் நிகழ்ந்த அற்புதம் அது. அருளாளர்க்கும், அடியார்களும், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் புகழ்ந்து பாடிடும் கூடுதுறையில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த மெய்சிலிர்க்கும் நிகழ்வு அது !

திசையிலும், வக்ராசுரனை சண்டகாதினி வதம் செய்து வடதிசையிலும், காவல் தெய்வமாக அமர்ந்தனர். வக்ராசுரன் ஈசனை வேண்டி வழிபட்டு, **'வக்ரபுரம்'** என்ற பெயரும் இத்தலத்திற்கு நிலைத்தது.

அசுரர் தொல்லை அழிந்ததும், பராசர முனிவர், நிருதி மூலையில் மறைத்து வைத்திருந்த அமுத கலசத்தை, எடுத்திட முனைந்தார். பலகாலமாக கல்லும் மண்ணும் நிறைந்த இடத்தில் அமிழ்ந்திருந்ததால் அமுதம் கல்லைப்போல கெட்டியாகி, லிங்க வடிவில் காட்சியளித்தது. இலந்தை மரத்தடியில் தோன்றிய அந்த சிவலிங்கத் திருமேனியை அங்கேயே பிரதிஷ்டையும் செய்தார் பராசரர். அருகிலேயே அமுத தீர்த்தமும் உருவானது. தேவர்களும் பூமாரி பொழிந்து, ஈசனின் சந்நிதி எதிரில் தேவதீர்த்த்தை உருவாக்கினார். அமுத தீர்த்தத்தில் நீராடி ஈசனை வழிபடுவோர் சகல நலன்களும் பெறுவர் என்பது தேவர்வாக்கு ஆனது.



குபேரன் வழிபடல்

அளகாபுரிக்குத் தலைவனான குபேரன் சிறந்த சிவபக்தன். தனது புஷ்பக விமானத்தில் பூவுலகை வலம் வருகையில் பத்ரிவனத்தின் அழகால் ஈர்க்கப்பட்டு, அதன் அமைதியான சூழலில் ஆனந்தமடைந்தான். இலந்தைமரத்தடியில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டு, வரம் பல பெற்றான். தனது தலைநகரம் அளகாபுரியின் பெயரே இத்தலத்திற்கும் அமைய வேண்டினான். அதுமுதல் **'தட்சிண அளகை'** என்று பெயர் கொண்டது திருநணா. ஈசுவரன் **'அளகேசன்'** என அழைக்கப்பட்டார்.

யக்ஞசர்மன்

யக்ஞசர்மன் என்ற வேதியனின் மகன் தர்மசர்மன், மாறுதான முனிவரின் கோபத்திற்குள்ளாகி சாபம் பெற்றான். மறையோர் அறிவுரைப்படி, சங்கமத்தில் நீராடி ஈசனை வழிபட்டு, சாபம் நீங்கப் பெற்றான்.

பிரம்மன் வழிபட்டது

பேரழகியாகிய திலோத்தமையைப் படைத்த நான்முகன், அவள் பேரழகால் ஈர்க்கப்பட்டுநிலைகுலைந்து, படைப்பாற்றலையும் இழந்தான், சங்மேசுவரனை வழிபட்டு மனநிறைவோடு மீண்டும் படைப்புத்தொழிலை இயற்றலானான்.



அருள்மிகு
அழகுராஜப் பெருமாள் திருக்கோயில்

திங்களூர்



திங்களூரில் கீழ்ப்புறம் கிழக்கு திசை நோக்கியபடி அமைந்துள்ளது அழகுராஜப்பெருமாள் திருக்கோயில். கி.பி. 1251-1282ல் கொங்கு நாட்டில் ஆட்சி புரிந்த கொங்குப் பாண்டியரின் கல்வெட்டு ஒன்று, இத்திருத்தலத்தை, **"சுந்தரபாண்டியன் விண்ணகரம்"** என்றும், **'அழகப் பெருமாள்'** என்று திருமாலின் பெயரையும் குறிப்பிடுகிறது. சந்திர மௌலீசுவரர் திருக்கோயிலைப் போலவே ஆயிரம்

ஆண்டுகளுக்கு முற்பட்ட கோவில்.

முகப்பு முன் மண்டபத்தின் தூண்களில் சிலவற்றில் கண்ணப்ப நாயனார், சிவலிங்கம் போன்ற சிவாலயத்தில் காணும் சிற்பங்கள், சந்திரமௌலீசுவரர் கோயிலுக்காக வடிக்கப்பட்ட தூண்களாக அவை இருக்கக் கூடும் என்பதை எடுத்துரைக்கின்றன. அவை தவிர தசாவதார சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் எனும் மூன்று பகுதிகளாக அமைந்த கோவில். கருவறைக்கு மேலே விமானம் இல்லை. திருமகள், நிலமகளோடு அழகுப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.

அர்த்தமண்டபத்தில் உள்ள ஆஞ்சநேயர் சிலை, கலையழகு மிக்கதாக உள்ளது. வியாசராஜர் பிரதிஷ்டை செய்த பல ஆஞ்சநேயர் திருமேனிகளில் இதுவும் ஒன்று என்று கூறப்படுகிறது.

மகாமண்டபத்தின் தூண்களில் நரசிம்மர், குழல் ஊதும் கண்ணன், குழந்தைக் கண்ணன், கோதண்டராமர் ஆகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. விஷ்வக்சேனர் சங்கு சக்கரங்களோடும், ராமானுஜர், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் ஆகிய அடியார்களின் திருமேனிகளும் இடம் பெற்றுள்ளன.

கி.பி.1251-1283ல் ஆட்சிபுரிந்த கொங்குச் சுந்தர பாண்டியன், தம் பெயரில் சுந்தரபாண்டியபுரம் என்று இந்த ஊரினை ஏற்படுத்தி ஆலயங்களை எழுப்பி, அவற்றின் பராமரிப்புக்கும், விளக்கெரிப்பதற்கும், திருவமுதுக்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்த செய்திகள் கல்வெட்டுகளாகத் திகழுகின்றன. நாள்தோறும் ஒருகால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்:
காலை 7.00 மணி - பகல் 12.00 மணி
மாலை 4.00 மணி - இரவு 7.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு அழகுராஜப் பெருமாள் திருக்கோயில், திங்களூர்.
அலைபேசி : 94439 44640

கொண்டதாக அமைந்துள்ளது. வடக்கு வாயிலே பிரதான வாயிலாக, அழகிய ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் உள்ளது. கோபுரத்தின் ஒவ்வொரு நிலையின் இருபுறமும் துவாரபாலகர்களும் அழகிய பலவண்ணச் சுதை சிற்பங்களும் அழகூட்டுகின்றன.

முதலை வாய் மதலை மீண்டகதை, சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்டது. மாணிக்கவாசர் குரு உபதேசம் பெறுதல், காமதகனர் போன்றவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆகும். இராஜகோபுரத்தை யொட்டியே சொர்க்கவாசலும் வைகுந்தவாசல் அமைந்துள்ளது.

இராஜகோபுரத்தின் முன் உள்ள முற்றத்தில் கோட்டை விநாயகரும், கோட்டை அனுமனும் தனிக் கோயில் கொண்டுள்ளனர்.

‘அமுதலிங்கம்’ அமைந்த வரலாறு

பாற்கடலை அமுதம் வேண்டி, அசுரர்களும், தேவர்களும் கடைந்தனர். அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் அமுதத்தைப் பங்கிடுவதாகக் கூறி மோகினியாக வந்த திருமால், அசுரர்களை மயக்கி தேவர்களுக்கு அமுதத்தை வழங்கினார். மிஞ்சிய அமுதத்தினை ஒரு பொற்குடத்தில் நிரப்பி வைத்தார். அதனை பராசரர் போன்ற மாமுனிவர்களுக்கு வழங்கிட எண்ணிப், பறவை அரசன் கருடனிடம் கொடுத்தனுப்பினார். கருடனும் அதனை எடுத்துச் சென்று பத்ரிவனமாகிய திருநணாவை அடைந்து, ஈசனை வணங்கிய பின், பராசரரின் பொறுப்பில் விட்டுச் சென்றார்.

மயக்கம் தெளிந்த அசுரர்கள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதை அறிந்து சினங்கொண்டனர். அமுதம் நிரம்பிய குடத்தைத் தேடி பூவுலகம் வந்தனர். பூவுலகம் முழுவதும் தேடிக் களைத்த அசுரர் படைக்கு யவணாசுரனின் மைந்தர்கள் நால்வர் தலைவர்களாக இருந்தனர். பவானி கூடலுக்கு நான்கு திசைகளிலும் நால்வரும் நின்றனர்.

பராசுர முனிவர், அவர்களது வலிமையைப் போக்கிட ஈசனை வேண்டினார். எம்பெருமான் அவரை வேதநாயகியின் துணை வேண்டிட அறிவுறுத்தினார். வேதநாயகியம்மையின் திருவருளால் ஏகவீரி, ஜயந்தி, மர்த்தினி, சண்டகாதினி என்று துர்க்கையின் அம்சமாக நான்கு சக்திகள் தோன்றினர். தண்டகாசுரனை அழித்த ஏகவீரி கிழக்கே காவல் தெய்வமாகவும், வீராசுரனை வென்ற ஜெயந்தி தென்திசையிலும், வஞ்சகாசுரனை வைத்த, மார்த்தினி மேற்கு

நதிகள் கூடிடும் கூடுதுறையில் புனித நீராடிட நாள் பார்க்கத் தேவை இல்லை. எக்காலத்திலும் இங்கே நீராடிப் பேறு பெறலாம். எனினும் தமிழ்ப்புத்தாண்டு, சித்ரா பௌர்ணமி, ஆடிப் பதினெட்டாம் பெருக்கு ஆகிய நாட்களில் பெருந்திரளாக மக்கள் கூடுதுறையில் கூடுவர். கருமணி, காதோலையுடன், மஞ்சள், குங்குமம் வைத்துப் பெண்கள் காவிரித்தாயை வழிபடும் காட்சி கண்கொள்ளாததாகும். சூரிய, சந்திர கிரகண நாட்கள் மிகவும் சிறப்பானவை ஆகும்.

கூடுதுறையில் நீத்தார் கடன் நிறைவேற்றி தென்புலத்தார் ஆசி வேண்டிட வருவோர் ஏராளம்! சங்கமேசுவரர் சந்நிதிக்குக் கிழக்கே உள்ளது சூரிய தீர்த்தம். தலமரம் இலந்தை மரத்தின் அருகே சக்ர தீர்த்தமும், சங்கமேசுவரருக்கு அக்னி மூலையில் காயத்திரி தீர்த்தம், சாவித்ரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் ஆகியன உள்ளன.

பவானி கூடற்புராணம்



பவானி கூடுதுறையின் வரலாறையும், பெருமைகளையும், புனிதத்தையும் சிறப்பித்துக் கூறும் நூல், **'பவானி கூடற்புராணம்'** என்பதாகும். மகாவித்துவான் வாசுதேவ முதலியார் இயற்றிய அந்நூல் 18 சருக்கங்களையும், 901 விருத்தங்களையும் கொண்டதாகும்.

வடமொழியில் பவிஷ்யோத்தர புராணம், பிரம்ம கைவர்த்த புராணம் ஆகியவற்றில் **'கூடுதுறையைப்'** பற்றிய குறிப்புகள் உள்ளன. 33 அத்தியாயங்கள் கொண்ட அதனையே தமிழ்ச் செய்யுள் வடிவில் மகாவித்துவான் **'பவானி கூடற்புராணம்'** என்று இயற்றியுள்ளார். 150 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிடப் பெற்றது இந்நூல். இது தவிர கொங்குமண்டல சதகம், வேதநாயகி பிள்ளைத் தமிழ், வேதநாயகியம்மன் சதகம், சாமிநாதக் கவிஞர் பாடல்கள், திருநணா சிலேடை வெண்பா மற்றும் வேதநாயகி விறிலிவிடுதூது ஆகியவையும் பவானித் திருத்தலத்தின் புகழ்பாடுபவை ஆகும்.

நான்கு வாயில்கள், ஒரு இராஜகோபுரம்

பவானி சங்கமேசுவரர் திருக்கோயில் நான்கு வாயில்களைக்



அருள்மிகு சீதேவியம்மன் திருக்கோயில்

காஞ்சிக்கோயில்



'சீதளாதேவி' என்று மாரியம்மனுக்கு ஒரு பெயர் உண்டு. கோடையின் வெப்பத்தைக் குறைத்துக் குளிர்விக்க வேண்டி அம்மனையே **'சீதளாதேவி'** என்று அழைத்தனர். சீதளாதேவியே மருவி சீதேவியம்மன் ஆகிவிட்டாள்.

பெருந்துறைக்கு வடக்கே 14 கி.மீ. தொலைவில் அந்தியூர் செல்லும் பாதையில் அமைந்துள்ள திருத்தலம் காஞ்சிக்கோயில். இங்கு நீலகண்டேசுவரர்,

கரிவரதராஜப் பெருமாள் மற்றும் சீதேவியம்மன் திருக்கோயில்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஐந்துநிலை ராஜகோபுரமும், அழகிய திருச்சுற்றும், எசவடக் குதிரைகள் மூன்றும், வண்ணச் சுதைச் சிற்பங்கள் பலவும் கொண்டது சீதேவியம்மன் திருக்கோவில்.

கருவறையை எதிர்நோக்கியபடி சிம்மம் அமர்ந்துள்ளது. கருவறையொட்டி மகாமண்டபம், எட்டு கரங்களிலும் ஆயுதங்களை ஏந்தியபடி சீதேவி அம்மன், சூலத்தினால் அசுரனை மாய்த்திடும் கோலத்தில் காட்சி தருகிறாள். அன்னைக்கு செய்விக்கப்படும் அலங்காரங்கள் பிரமிப்பூட்டுகின்றன.செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் செவ்வனே நடைபெறுகின்றன.

அன்னதானம்:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் இரண்டு கால பூசை நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 11.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு சீதேவியம்மன் திருக்கோயில். காஞ்சிக்கோவில்.
தொலைபேசி : 0424 - 2430114.

சப்தமாதர்கள்

அந்தகாசுர வதத்தின் பொருட்டு சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவர்கள் சப்தமாதர்கள், பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி,வாராகி, இந்திராணி, சாமுண்டி என்பர். ஆலயங்களில் திருச்சுற்றில் தென்புறம் இவர்கள் பிரதிஷ்டை செய்யப்படுவர். இவர்களுக்கு வலப்பக்கம் விநாயகரும், இடப்பக்கம் வீரபத்திரரும் இருப்பர்.

‘தீமை நண்ணா ஊர்’ தரிசித்தோரை தீங்கு எதுவும் நணுகாது என்பதால் **‘திருநணா’** என்று பெயர் பெற்றது.

‘கேட்டார் வினை கெடுக்கும் திருநணாவே’ என்று திருஞான சம்பந்தர் பெருமான் போற்றிப் புகழ்ந்த திருத்தலம் திருநணா எனும் பவானி–கூடுதுறை–முக்கூடல்.

‘காசியிலும் மேலாய கடிநகர்’ வாவிய காசி, இளைய காசி, என்றும் தலவரலாறுகளில் புகழ்ந்துரைக்கப்பட்ட தலம் இது. **‘பதிற்றுப்பத்து’** நூலில் ஏழாவது பத்தில் உளள பதிகம் குறிப்பிடும் நன்றா எனும் குன்று, பவானிக்கு அருகில் உள்ள ஊராட்சி மலை தான் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

‘பவானி’ என்று இன்று அழைக்கப்படும் திருநணா, திருஞான சம்பந்தராலும், அருணகிரிநாதராலும் போற்றிப் பாடப்பெற்ற திருத்தலம்.

24 கொங்கு நாடுகளில் ஒன்று

கொங்கு நாடுகள் இருபத்து நான்கில், பதினான்காவது நாடாக **‘வடகரைநாடு’** சிறப்பிக்கப்படுகிறது. வடகரைநாட்டு ஊர்த்தொகைப் பாடல் ஒன்று, பவானியை **‘வானி’** என்றே கூறுகிறது. வானி என்பது பவானி ஆற்றின் பழம்பெயர் ஆகும். பூவானி நாட்டின் பெயரே பவானி என மாறியதாகவும் சிலரது கருத்து.



இலந்தை மரத்தைத்தலமரமாகக்கொண்டதால் ,பவானிக்கு **‘பத்ரீவனம்’** என்றும்பெயர்.திருநணா, பவானி, முக்கூடல், கூடுதுறை, பவானி கூடல், சங்கம க்ஷேத்திரம்,பராசர க்ஷேத்திரம், தட்சிணா பிரயாகை, வீரபுரம், வக்கிரபுரம், விஜயபுரம் என்றும் இத்தலத்தினை அழைப்பர்.

முக்கூடல் நீராடின் முக்தி கிட்டும்

திருமுக்கூடலாகச் சங்கமிக்கும் காவிரி, பவானி மற்றும் அமுதநதி ஆகியவை கூடுதுறையின் புனித தீர்த்தங்களாகும். அவை தவிர சூரிய தீர்த்தம், சக்ர தீர்த்தம், தேவதீர்த்தம், காயத்ரி தீர்த்தம், சாவித்ரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம் ஆகியனவும் புனித நீராடுவதற்கான புண்ணிய தீர்த்தங்கள் ஆகும்.



அருள்மிகு
சங்கமேசுவரர் திருக்கோயில்

பவானி



ஈரோட்டிலிருந்து வடக்கில் 14 கி.மீ. தொலைவில் உள்ளது. கிழக்கே காவிரியாறும், மேற்கே பவானியாறும், தெற்கே இரணடு ஆறுகளும் ஒன்று சேரும் கூடுதுறையில் அமைந்துள்ளது.

காவிரி, பவானி, அமுதநதி கூடுவதால் பவானி முக்கூடல் என்று பெயர். பதுமகிரி, நாககிரி, சங்ககிரி, வேதகிரி, மங்கலகிரி என்னும் ஐந்து மலைகளுக்கு நடுவே விளங்கும் திருத்தலம்.



அருள்மிகு
நீலகண்டேசுவரர் திருக்கோயில்

காஞ்சிக்கோயில்



காஞ்சிக்கோயிலில் கடைத் தெருவை யொட்டி அமைந்துள்ளது நீலகண்டேசுவரர் திருக்கோயில். இராஜகோபுரம் இல்லை. ஏகதள விமானம் கருவறைக்கு அழகூட்டுகிறது. சுயம்புலிங்கமாக நீலகண்டேசுவரர் அருள்பாலிக்கிறார். **‘அன்னபூரணி’** என்ற திருநாமத்துடன் அன்னை தனிச்சந்நிதி கொண்டுள்ளாள். வெளிச்சுற்றில் விநாயகர், முருகப்

பெருமான் மற்றும் பரிவாரத் தேவதைகள் இடம் பெற்றுள்ளனர். பலிபீடம், நந்தி, கருங்கல்லினால் ஆன தீபத்தம்பம் ஆகியவையும் உள்ளன.

அருகிலேயே நீளாதேவி, பூமாதேவி உடனுறை கரிவரதராஜப் பெருமாள் திருக்கோயில் உள்ளது. கருவறையை எதிர் நோக்கியபடி கருடாழ்வார் கரம் கூப்பியபடி உள்ளார். ஆஞ்சநேயர் தனிச்சந்நிதியில் உள்ளார். நாள்தோறும் ஒரு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி – பகல் 11.00 மணி

மாலை 4.00 மணி – இரவு 7.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,
அருள்மிகு நீலகண்டேசுவரர் திருக்கோயில். காஞ்சிக்கோவில்.
தொலைபேசி : 0424 - 2430114.

தக்கயாகப்பரணி

ஆயிரம் யானைகளை போர்க்களத்தில் கொன்ற வீரன் மீது பாடும் நூல்பரணி எனப்படும். காளிதேவிக்கும், யமனுக்கும் உரிய நட்சத்திரம் **‘பரணி’** எனப்படும். பரணி நாளில் கூழ் சமைத்து காளிக்குப் படைத்தல் வழக்கம். அதனை **‘களப்பரணிக் கூழ்’** என்பர்.

‘தக்கயாகப் பரணி’ என்பது ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்டது. காளி மாதாவே அப்போது கூத்தருக்குத் துணையாக நின்று, எழுத்தாணியும், ஏடும் தந்ததோடு, இரவில் அவர் எழுதுவதற்கு வசதியாக விளக்கினை ஏந்தியபடி நின்றாளாம்.

சிவபெருமானை அவமதித்து தட்சன் செய்த யாகத்தை வீரபத்திரன் சென்று அழித்ததோடு, அதில் பங்கேற்ற அனைவரையும் தண்டித்த வரலாறு இது **‘வீரபத்திரப் பரணி’** என்றும் கூறுவர். பதினோரு பகுதிகள் கொண்டது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் **‘உந்திபற!’** எனும் பகுதி தக்கனின் வேள்வியை அழித்து வீரபத்திரர் தேவர்களைத் தண்டித்ததைப் புகழ்ந்து பரணி பாடும் பகுதியாகும்.

ஈரோடு - வடக்கு

வ



1. பவானி
2. கவுந்தபாடி
3. கூத்தம்பூண்டி
4. அந்தியூர்
5. ஒலகடம்
6. குறிச்சி
7. ஜம்பை
8. அம்மாப்பேட்டை
9. பட்லூர்
10. புன்னம்
11. ஆப்பக்கூடல்

அனுமன் வழிபட்டதால் அனுமனீசுவரர் என்ற திருநாமங் கொண்டு, ஈசுவரர், சதுர பீடத்தில் எழுந்தருளியுள்ளார். இராம ராயணக் கதையையொட்டி அமைந்த தல வரலாறு. இராமபிரான் சிவபக்தர்களை வதம் செய்த தோஷம் நீங்க, பல இடங்களில் சிவலிங்கத்தை நிறுவி வழிபட்டுள்ளார். அவரது சேனையில் முக்கிய அங்கம் வகித்து அனுமனும், சுக்ரீவனும் நிறுவிய சிவலிங்கத் திருமே னிகள் கொங்குநாட்டில் பல இடங்களில் உள்ளன. அவற்றில் ஒன்று தான் முகாசி அனுமன்பள்ளி.

'ஜேஷ்டாதேவி' சிலை திருக்கோயிலில் இடம் பெற்று இதன் பழமை க்கு சான்றுரைக்கிறது. மும்மூர்த்திகளின் சிறிய புடைப்புச் சிற்பம் உள்ளது. வெளிச்சுற்றில் விநாயகர், முருகப் பெருமான், அன்னை அன்னபூரணிக்குத் தனித்தனி சந்நிதிகள் உள்ளன.

சிவாலயம் அருகிலேயே அழகுசொக்கப் பெருமாள் ஆலயமும் உள்ளது. அலர்மேலு மங்கை தனிச்சந்நிதி கொண்டுள்ளார். மூலவர் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். ஆஞ்சநேயர் சந்நிதியும், கருடத்தம்பமும் உள்ளன. நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

பெரியம்மன், சின்னம்மன் திருக்கோயில்

ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் கூடிய அழகிய திருக்கோயிலில் தனித்தனி சந்நிதி கொண்டு, மகா மண்டபத்துடன் நீலன், நீலி காவலிருக்க, அன்னை பராசக்தி இரு கோலங்களில் காட்சி தந்து அருள் பாலிக்கின்றாள். வேம்பராயர் சந்நிதி தனியே உள்ளது. நுழைவாசலில் கருப்பண்ணசுவாமி சந்நிதி உள்ளது. நாள்தோறும் இரண்டு கால வழிபாடு நடைபெறுகிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் :

காலை 7.00 மணி - பகல் 11.00 மணி

மாலை 4.00 மணி - இரவு 8.00 மணி.

தொடர்பு முகவரி : செயல் அலுவலர்,

அருள்மிகு அனுமனீசுவரர் திருக்கோயில், முகாசி அனுமன்பள்ளி

தொலைபேசி : 0424 -2430114.

நவக்கிரகத் தலங்கள் சுற்றுலா

பயணத் திட்டம்

1. பெருமாநல்லூர் - **சூரியன் தலம்**
   அ/மி. உத்தமலிங்கேசுவரர் திருக்கோயில்.
2. திங்களூர் - **சந்திரன் தலம்.**
   அ/மி.சந்திரமௌசுவரர் திருக்கோயில்.
3. சென்னிமலை - **செவ்வாய் தலம்.**
   அ/மி.சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
4. மொண்டிபாளையம் - **புதன் தலம்**
   அ/மி.வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில்.
5. அன்னூர் - **குரு தலம்**
   அ/மி.மன்னீசுவரர் திருக்கோயில்.
6. அபிஷேகபுரம் - **சுக்கிரன் தலம்**
   அ/மி. அழகுராஜப் பெருமாள் திருக்கோயில்
7. கோயில்பாளையம் - **சனி தலம்**
   அ/மி. காலகாலேசுவரர் திருக்கோயில்
8. தங்கமேடு - **ராகு தலம்**
   அ/மி. தம்பிக்கலை அய்யன் திருக்கோயில்
9. திருமுருகன் பூண்டி - **கேது தலம்.**
   அ/மி.முருகநாதசுவாமி திருக்கோயில்.



அருள்மிகு
தம்பிக்கலை அய்யன் திருக்கோயில்
தங்கமேடு



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் உள்ள ராகு–கேது தோஷ பரிகாரத் தலம் தங்கமேடு ஆகும்.

ஈரோடு – சத்தியமங்கலம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள, செட்டிகரடு இரட்டை வாய்க்கால் பிரிவுக்குத் தெற்கில் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. சித்தோடை அடுத்து 6 கி.மீ. தொலைவில் உள்ள எல்லிஸ் பேட்டையைக் கடந்த பின்பு, இடது புறம் செல்லும் பாதை



அருள்மிகு
அனுமனீசுவரர் திருக்கோயில்
முகாசி அனுமன்பள்ளி

ஈரோட்டிற்குத் தென்கிழக்கே, அறச்சலூருக்கு வடமேற்கில் 6 கி.மீ. தொலைவிலும், ஈரோட்டிலிருந்து சுமார் 15 கி.மீ. தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.



அனுமன் வழிபட்டதால் இத்திருத்தலம் '**அனுமன்பள்ளி**' என்று பெயர் பெற்று விட்டது. அருகிலேயே 2 கி.மீ. வடக்கே '**அட்டவணை அனுமன்பள்ளி**' என்றும் ஒரு சிற்றூர் உள்ளது.

கிழக்கு திசை நோக்கியபடி அமைந்துள்ள இத்திருக்கோயிலில் இராஜகோபுரம் இல்லை. பெரிய திருமேனியாக நந்திதேவர் கம்பீரமாகக் காட்சி தருகிறார்.

நாகருக்குப் பொங்கலிடுதல், பால்குடம் எடுத்தல், பால் அபிஷேகம் மற்றும் மரத்தில் மஞ்சள் கயிறு கட்டுதல், மரத்தொட்டில் கட்டி நேர்த்திக்கடன் நிறைவேற்றுதல், விஷக்கடிக்கு மந்திரித்தல் இப்படிப்பல பிரார்த்தனைகளின் உறைவிடமாக அமைந்தது தான் தம்பிக்கலை அய்யன் திருக்கோயில்.

நாள்தோறும்மூன்றுகாலவழிபாடுநடைபெறுகிறது.உச்சிகாலத்தில் நடைபெறும் திருச்சுற்று பூசை மிகவும் சிறப்பானது. ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் சர்ப்பதோச நிவர்த்தி வழிபாடு நடைபெறுகிறது.

அன்னதானம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு மதியம் 12.15 மணியளவில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் மூன்று கால பூசை நடைபெறுகிறது.

திருவிழாக்கள்

பங்குனி உத்திரத்தையொட்டி, தம்பிக்கலை அய்யனின் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. தமிழ்புத்தாண்டு ஆடிப்பண்டிகை, நவராத்திரி, தைப்பூசம், பொங்கல் திருவிழா, சிவராத்திரி போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். **'நாகபஞ்சமி'** நாள், **'ஆடி-வளர்பிறை-பஞ்சமி'** யன்று சர்ப்பதோஷ சிறப்பு பரிகார வழிபாடு, திக்கெட்டிலிருந்தும் மக்களைக் கூட்டுவிக்கிறது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 7.00 மணி - பகல் 1.00 மணி வரை
மாலை 4.00 மணி - இரவு 8.00 மணி வரை.

தொடர்பு முகவரி: செயல் அலுவலர்,
அருள்மிகு தம்பிக்கலை அய்யன்சாமி திருக்கோயில்,
தங்கமேடு,பெருந்துறை வட்டம்
தொலைபேசி : 04294-235053
மின்னஞ்சல் : thambikalaiayyanswamykovil@gmail.com

வழியேயும், காஞ்சிக்கோயிலுக்கு வடக்கே செல்லும் பாதை வழியேயும் தங்கமேடு தம்பிக்கலை அய்யன் ஆலயத்தைச் சென்றடையலாம்.

'தம்பிக்கலை அய்யன்' பயிர்த் தொழில் செய்வதைத் தனது தம்பியிடம் விட்டுவிட்டு, **'தங்கமேடு'** தலத்தில் தவம் செய்து, பல அபூர்வ சித்திகளைப் பெற்றவர். **'ஈசுவரன் நீலகண்டனை அன்னை அன்னபூரணியோடு'** காணும் உணர்வும் பெற்றவர். தவத்தின் பயனால் பல அற்புதங்களைச் செய்தவர். ஊமைப் பெண்ணொருத்தியைப் பேசவைத்ததும், கண்ணொளி இழந்தவனுக்கு கண் பார்வை கிடைக்கச் செய்ததும், இன்னலுற்றோரின் இடர் நீங்கிடத் துணை நின்றதும், அய்யன் நிகழ்த்திய அற்புதங்கள், அற்புதங்களால் மக்களின் துயரை நீக்கியவர்.

காட்டில் வளர்ந்திருந்த புற்று ஒன்றிலிருந்து நாகம் ஒன்று வெளிப்பட்டு, அங்கு மேய்ந்து கொண்டிருந்த பசுவிடம் பால் குடிப்பதைக் கண்டு அதிசயித்து, அய்யன் அந்தத் தலத்திலேயே ஒரு கோயிலையும் எழுப்பினார். திருநீற்றின் நெறி விளங்கிடப் பாடுபட்ட அய்யன் முக்தி பெற்றதும், மக்கள் அவருக்கும் ஒரு கோயிலை எழுப்பினர். இப்படி உருவாகி வளர்ந்ததே தம்பிக்கலை அய்யன் திருக்கோயில். இன்று ராகு-கேது தோஷ பரிகாரத்தலமாக விளங்குகிறது.

அழகிய திருக்கோயில்

ஐந்து நிலை இராஜகோபுரம், ஏழு கலசங்களை உச்சியில் தாங்கியபடி மிளிர்கிறது. பிரம்மாண்டமான 73 தூண்கள் அமைந்த திருக்கோயில் வளாகம். ஒரு கிராமத்துக் கோயில், இத்தனை விசாலமாக அமைந்துள்ளது பிரமிக்க வைப்பதாகும். 25 தூண்களைக் கொண்டு மூன்று சுற்றுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சிவகங்கைத் தீர்த்தம், செல்வவிநாயகர், நாகேசுவரி, ராமலிங்கேசுவரர், சங்கரநாராயணர், பாம்பாட்டிச் சித்தர், கருப்பண்ணசாமி, சிவதுர்கை, திருமூலர், நவகிரகங்கள், செல்வமுத்துக் குமாரசாமி, நல்லய்யன் சந்நிதி, ராகு சந்நிதி, பாம்பனார், சப்த கன்னிமார், கேது சந்நிதி, சனீசுவரர் சந்நிதி இப்படி எண்ணற்ற சந்நிதிகள் திருக்கோயில்

வளாகத்தில் அமையப் பெற்றுள்ளன. இவற்றிற்கெல்லாம் நடு நாயகமாக, அருளாசி வழங்கும் நிலையில் தம்பிக்கலை அய்யன் சந்நிதி அமைந்துள்ளது.

மகாமண்டபத்தின் சிறப்பு

தம்பிக்கலை அய்யன் சந்நிதியை எதிர்நோக்கியபடி அமைந்துள்ள மகாமண்டபம் கலையழகு மிக்கதாகப் பார்ப்போர் உள்ளத்தில் பிரமிப்பை ஊட்டுவதாகும்.

பன்னிரெண்டு ராசிகள், பதினெட்டு சித்தர்கள், சமயக்குரவர் நால்வர், வள்ளலார் திருமேனி இப்படி திரும்புமிடமெல்லாம், சிற்பங்கள் தூண்களில் அமைக்கப்பட்டு, ஒரு ஏகாந்த சூழலை உருவாக்கிடும் மண்டபமாகத் திகழ்கிறது. அய்யனை வழிபட அற்புதமான சூழல்.

கருவறையில் தம்பிக்கலை அய்யன், சின் முத்திரையுடன் தவக்கோலத்தில் காட்சி தருகிறார். கருவறை விமானத்தின் மேல் அதிசயிக்கத்தக்க முறையில் மற்றொரு கோபுரமும் அமைந்திருப்பது தனிச்சிறப்பு. இன்னல்களைக் களையும் இனியனாக அய்யன் அமர்ந்திருக்க,அடிக்கடிஅவனதுசந்நிதியில்**'அரவம்'**உலாவுவதையும், மக்களுக்கு எந்தத் தீங்கும் இழைக்காது விலகிச் செல்வதையும் மக்கள் நேரடியாகக்கண்டிருக்கிறார்கள். **'தீவினைகளை அகற்றி நன்மையே நல்கிடுமாறு'**வேண்டிநிற்கும்பக்தர்கள்கூட்டம்சந்நிதிமுன்அமைதியாகக் காத்திருப்பதைக் காணலாம். அஞ்சேல் என அபயக்கரம் நீட்டுவது போல சின்முத்திரை காண்கிறது.

நாகேசுவரி

ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ளது நாகேசுவரி சந்நிதி. நாகப்பாம்புகள் சுற்றித் திரிந்த பகுதி அது. அவற்றின் உறைவிடமான புற்றுக்களின் மேலெழுந்த மேடையில் அமர்ந்திருக்கிறாள் நாகேசுவரி. தம்பிக்கலை அய்யனோடு அளவளாவி உறவு கொண்ட சித்தர்களே பாம்பு உருவில் இங்கே உலவுவதாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

தண்ணீர் மந்திரித்தல்

தம்பிக்கலை அய்யனே சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்யும்

காட்சி அமைந்துள்ள இடத்தில் தான் மண் சொப்பில் தண்ணீரை மந்திரித்து பக்தர்களுக்கு வழங்குகிறார்கள். தீராத சரும நோய், விஷக்கடி ஆகியவற்றிற்கு அருமருந்தாகிறது புனித நீரும் திருநீறும்.

நல்லய்யன்

தம்பிக்கலை அய்யன் கண்ட அற்புதத்தை, கதைசிற்பமாக வடித்துள்ள சந்நிதி இது! அய்யனின் தம்பி நல்லய்யன், வியந்து நிற்க, காராம்பசு ஒன்று மடி சுரந்து பாம்புக்கு பாலூட்டும் அற்புதக் காட்சி, தலவரலாறுக்கு சான்றுரைப்பதாக அமைந்ததாகும்.

நல்லய்யன் சந்நிதிக்கருகில் கள்ளிமரமும், வேண்டுதல் நிறைவேற்றிய அய்யனுக்கு காணிக்கையாக சமர்ப்பித்த குழந்தைகள் உருவங்கள், நூற்றுக்கணக்கில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளது, நல்லய்யன் சந்நிதிக்கு பெருமை சேர்ப்பதாகும்.

அடுத்து ராமபிரான் சீதாதேவி, அனுமன், லட்சுமணர் ஆகியோருடன் சிவபிரானை வழிபடும் ராமலிங்கேசுவரர், ஐராவதம் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தல், பாலசுப்ரமணியர் அரிகரனாக சங்கரநாராயணர் சந்நிதிகள். அடுத்து **'கரணங்களைப் பிடுங்கி இரை கொடுப்போம்'** என குண்டலினி சக்தியை எழுப்பி, அற்புதங்கள் நிகழ்த்திய பாம்பாட்டி சித்தரின் சந்நிதி.

காவல் தெய்வமாக கருப்பண்ணசுவாமியும், தனிசந்நிதி கொண்டுள்ளார். துர்க்கை, செல்வ முத்துக்குமாரசுவாமி, திருமூலர் சந்நிதிகளும் காணத்தக்கவையே. சர்ப்ப தோச பரிகாரத் தலத்தில் ராகு கேதுவிற்கும், சனீசுவரனுக்கும் சந்நிதி இல்லாமல் போகுமா? தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு மூலைகளில், சந்நிதிகள் அமைந்துள்ளன.

மூலவெளி

தனது சீடன் மூலனுக்கு அய்யன் உபதேசம் செய்த இடமே **'ஞான மூலவெளி'** என அழைக்கப்படுகிறது. அய்யனுக்கு திருமஞ்சனம் செய்விக்க 18பால் குடங்களை, இங்கிருந்து தான், மேளதாளத்துடன் சிவாச்சாரியார்களும், பூசாரிகளும் கருவறையை வலம் வந்து எடுத்துச் செல்வர்.